இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32+2

சுடர் 32 | கதிர் 193 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 24 புதன்கிழமை 07.06.2017

## ஐ.நா. தீர்மானத்தை இழுத்தடிப்பதானது நாட்டுக்கே பாதகம்



தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரம் நீடிக்கக்கூடாது என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 7
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கைக்கு எதிரானது அல்ல. அதை நிறைவேற்றும் கடப்பாடு >> 28



## மூதூர் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக முல்லையில் கவனவீர்ப்பு

வீதிக்கு இறங்கினர் வித்தியானந்தா மாணவர்

முல்லை., ஜூன் 7
முல்லைத்தீவு தேசியப் பாடசாலை யான முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் மாணவர்களும் ஆசிரியர்களும் நேற்று வீதியில் இறங்கிக் கவன வீர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டனர். மூதூரில் சிறுமிகள் பாலியல் கொடு மைக்கு உட்படுத் தப்பட்டமையைக் கண்டித்தும், அந்தச் சம்பவத்துடன் தொடர் >> 28

## பரிந்துரைகளைச் செயற்படுத்த ஐ.நாவுடன் உடன்படவில்லை

நாடாளுமன்றில் கூறினார் மங்கள



கொழும்பு, ஜூன் 7
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல்ஹூசைன் இலங்கை தொடர்பாகச் சமர்ப்பித்த அறிக்கையின் பரிந்துரை களை நடை முறைப் படுத்துவதற்கு, இலங்கை அரசு உடன்படவில்லை. இவ்வாறு முன்னாள் அய லுறவுத்துறை அமைச்ச ரும் தற்போதைய நிதி மற்றும் >> 26

## பிரபாகரனை புகழ்கிறார் மட்டு. அடாவடித் தேரர்

தமிழருக்காகக் குரல் கொடுக்கத் தான் தயாராம்



எருவில், ஜூன் 6
கிழக்கில் போர்க் காலத் தைவிட மிகமோச மான நிலை ஏற்பட்டுள் ளது. தமிழ் மக்களுக்கு எதிராக அநீதிகள் இடம் பெற்று >> 28

## ஆயப் பகுதி பணியகம் காங்கேசன்துறையில்

யாழ்ப்பாணம், ஜூன் 7
இலங்கை ஆயப் பகுதியின் (சுங்கத் திணைக் களம்) புதிய அலுவலகம் காங்கேசன்துறை யில் திறந்து வைக்கப்படவுள்ள >> 26

பாரதிபுரம் 8 தமிழர் கொலை:

## 3 பொலிஸார் உள்ளிட்ட 11 பேர் விளக்கமறியலில்

திருகோணமலை, ஜூன் 7
பாரதிபுரத்தில் 1998ஆம் ஆண்டு தமிழர்கள் எட்டுப் பேரைச் சுட்டுக் கொன் றார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்த பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர், >> 26

## பிரபாகரனைவிட ஞானசார தேரர் பலம்மிக்கவரா?

அரசிடம் கேட்கிறார் அசாத் சாலி



கொழும்பு, ஜூன் 7
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பின் தலைவர் பிரபாகரனைக் கண்டு பிடித்த அரசுக்கு ஞானசார தேரரைக் கண்டுபிடிக்கமுடியாமல் இருக்கின் றது.
இவ்வாறு தேசிய ஐக்கிய >> 28

பல்கலை. அனுமதிக்கான வெட்டுப் புள்ளி உள்ளே...

## ரணிலைச் சந்தித்த ஐ.நா. செயலர் முக்கியமாக எதுவும் பேசவில்லை

இன்னசிற்றி பிரஸ் ஊடகம் சாடல் >> 28

## இறக்குமதியாகும் சீனிக்கு வரி உயர்வு

கொழும்பு, ஜூன் 7
இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான சிறப்புப் பண்ட வரி நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு அறிவித்தது. >> 26

விசாரணைக் குழு பதவி விலகப் பரிந்துரைத்த

## ஐங்கரநேசன், குருகுலராசா நேற்றைய சபை அமர்வில்



யாழ்ப்பாணம், ஜூன் 7
வடக்கு முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழுவினால், பதவி விலக்கப்பட வேண்டியவர் கள் எனப் பரிந்துரைக்கப்பட்ட வடக்கு மாகாண அமைச்சர்க ளான பொ.ஐங்கரநேசன், த.குரு குலராசா ஆகிய >> 26

# வடக்கு மாகாண சபையில் இன்று பரபரப்பு அமர்வு

அமைச்சர்கள் இருவரைப் பதவி விலக்கப் பரிந்துரைத்த விசாரணைக்குழுவின் அறிக்கை விவாதத்துக்கு வருவதால்

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடக்கு அமைச்சர்கள் இருவர் பதவி விலக வேண்டும் என்று பரிந்து ரைத்த விசாரணைக் குழு வின் அறிக்கை தொடர்பான சிறப்பு அமர்வு பெரும் பரபரப் பான எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று காலை 11.30 மணிக்கு, கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் நடை பெறவுள்ளது.
கொழும்பிலிருந்து இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் >> 28

## ஞானசாரரைக் கொல்ல ஐ.எஸ். ரகசியத் திட்டம்

பொதுபல சேனா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 7
பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் ஞானசார தேரரை ஐ.எஸ். அமைப்பு கொலை செய்வதற்கு முயற்சிப்ப தாகப் பொதுபலசேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலந்த விதானகே தெரிவித்தார்.
பொதுபலசேனா, பௌத்த சிங்கள அபே அமைப்பு மற்றும் இந்து சம் மேளன அமைப்பு ஆகியன இணைந்து நேற்று நடத்திய பத்திரி கையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
ஐ.எஸ். பயங்கரவாதிகள் >> 28

## இரண்டு அமைச்சர்கள் மீதும் வேண்டும் உரிய நடவடிக்கை

முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் வடக்கு சிவில் சமூகம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதுடன், அது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் உரிய நடவடிக் கைகளை எடுக்க வேண் டும்.
இவ்வாறு வடக்கு சிவில் சமூ கத்தைச் சேர்ந்தவர்கள் வலி யுறுத்தியுள்ளனர்.
வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்த சுயாதீனக் குழு, தனது விசாரணை அறிக்கையை வடக்கு மாகாண >> 26

## அமைச்சர்கள் மீதான விசாரணைக்காக ரூ. 483,000 செலவு

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடக்கு அமைச்சர்கள் தொடர்பான விசார ணைக்கு 4 லட்சத்து 83 ஆயிரம் ரூபா நிதி செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின் றது. இதில் சில கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கி முடிக்கப்படவில்லை என்றும் அறிய முடிகின்றது.
வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கு எதிரான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள, வடக்கு மாகாண முதலமைச்சர் >> 26

## மாகாணச் சட்ட ஒழுங்கில் அக்கறையற்றுள்ளார் விக்கி

வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடக்கு மாகாணத் தின் சட்ட ஒழுங்கு அமைச்சராக உள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன், தனது அமைச்சுப் பதவியைப் பொறுப் பேற்று 3 வருடங்க ளாகியும் மாகாணச் சட்ட ஒழுங்கு தொடர்பில் எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை. இவ்வாறு குற்றம் சாட்டினார் வடக்கு மாகாண எதிர்க் கட்சித்தலைவர் சி.தவராசா. வடக்கு மாகாணத் தில் உள்ள >> 26




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிக்கையை உதயன் வெளியிட்ட பின்னர் சிறப்பு அமர்வு ஏன்?

### மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா நேற்று கேள்வி

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையை உதயன் பத்திரிகை வெளியிட்ட பின்னர், அதனைச் சமர்ப்பிப்பதற்குச் சிறப்பு அமர்வு தேவை தானா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா.

வடக்கு மாகாண சபையின் 94 ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த அமர்வில், மூதூரில் சிறுமிகள் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது. குறித்த பிரேரணை ஆராயப்பட்ட பின்னர் சபையை ஒத்திவைப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்ட போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் சயந்தன், "அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையை அவசரமாக பகிரங்கப்படுத்த முற்படுவது ஏன்? அமைச்சர்கள் தமது தன்னிலை விளக்கங்களைத் தெரியப்படுத்தச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும் இது ஆளும்கட்சி சார்ந்த விடயம். இதனைநாம்நிதானமாக ஆராய வேண்டும்" என்றார்.

இதற்கு அவைத் தலைவர் பதிலளித்துக் கொண்டிருந்தபோது சடுதியாக எழுந்த உறுப்பினர் தியாகராஜா, வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை உதயன் பத்திரிகையின் ஊடாகச் சில தினங்களுக்கு முன்னர் வெளியாகிவிட்டது. இதன் பின்னர் எதற்கு அறிக்கையை வெளியிடவெனச் சிறப்பு அமர்வு? இவ்வாறு அறிக்கையை வெளியிட்ட உதயன் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? - என்றார்.

இதற்குப் பதிலளித்த அவைத் தலைவர் வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை தற்போது வரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. அதனை முதலமைச்சர் உத்தியோகபூர்வமாக சபையில் சமர்ப்பிக்கவே சிறப்பு அமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உதயன் பத்திரிகை அறிக்கையை வெளியிட்டது என்றால் அவர்களின் ஊடகச் சுதந்திரத்துக்குள் நாம் தலையிட முடியாது எனப் பதிலளித்து சபையை இன்று வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார். (த-8)

# மகிந்தவுக்கு உதவிய பாதாளக் குழுக்களின் விவரங்கள் என்னிடம்

### விரைவில் வெளியிடுவேன் என முஜிபுர் ரஹ்மான் எம்.பி. மிரட்டல்

கொழும்பு, ஜூன் 7

மகிந்த அணியினர் அதிகம் துள்ளினால் அவர்களுக்கு உதவிய மற்றும் காடைத்தனத்தில் ஈடுபட்ட பாதாள உலகக் குழுவினரின் பெயர்ப் பட்டியலை வெளியிடப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ஆட்சியை விட்டுச் செல்லும்போது எங்களது தலையில் கட்டிவிட்டுச் சென்ற பிரச்சினைகளை நாங்கள் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம். மீதொட்டமுல்ல குப்பை மேடு மற்றும் சைட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அவர் எம்மிடம் விட்டுவிட்டுச் சென்றார். அதுமாத்திரமன்றி அவர் பெற்ற அளவுக்கு அதிகமான பன்னாட்டுக் கடன்களை அடைத்து முடிக்கும் நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். இந்தச் சிக்கல்கள் அனைத்தையும் தாண்டி நாம் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வோம். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளும் ஆற்றலை நாம் பெற்றோம். மகிந்த அணியினர் இது நடக்கும் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். மகிந்தவின் வீழ்ச்சிக்குப் பிறகு பாதாள உலகக் குழுவினர் தலை தூக்கிவிட்டனர் என்று இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். பாதாள உலகக் குழுவினரின் தேவை எமக்கு இல்லை. இவர்களை வைத்து நாம் தேர்தலில் வெற்றி பெறவில்லை.



ஆனால், மகிந்த பாதாள உலகக் குழுவினரை எப்படிப் பயன்படுத்தினார்; எப்படி அவர்களின் உதவியைப் பெற்றார்; எத்தனை குழுக்கள் அவருக்கு உதவின; யாருக்கெல்லாம் அவர்கள் விருந்துபசாரம் நடத்தினார்கள் போன்ற விவரங்கள் என்னிடம் உள்ளன. அவசியம் ஏற்பட்டால் அவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதற்குத் தயங்கமாட்டேன்.

2008 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றியைத் தடுப்பதற்காக மகிந்த பாதாள உலகக் குழுவினரைக் களத்தில் இறக்கி இருந்தார். அவர்கள் எம்மைப் பிரசாரம் செய்யவிடாமல் தடுத்தனர். ஆனால், இன்று இவர்கள் நேர்மையானவர்கள்போல் பேசுகின்றார்கள். இவர்கள் அதிகம் துள்ளினால் அந்தப் பாதாள உலகக் குழுவினரின் பெயர் விவரங்களை வெளியிடுவேன். அது தொடர்பில் எந்தத் தொலைக்காட்சியிலும் விவாதம் நடத்துவதற்கு நான் தயார் - என்றார். (த-3)



வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கலின் அற்புத நிகழ்வுகளில் ஒன்றான கடல் நீரில் விளக்கெரியும் அதிசயம் நேற்று அதிகாலை முதல் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் நடந்தது. முன்னதாக சிலாவத்தைப் பெரும் கடலில் நேற்றுத் தீர்த்தம் எடுத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-102)

## 3சிறுமிகள்மீதானதுன்புறுத்தலுக்கு வடக்கு மாகாண சபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

திருகோணமலை, மூதூரில் 3 சிறுமிகளை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கிய சம்பவத்துக்கு வடக்கு மாகாண சபையில் நேற்றுக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் குறித்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சிறப்புப் பிரேரணை ஒன்றைச் சபையில் முன்மொழிந்தார்.

"திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மல்லிகைத் தீவு பெரியவெளிப்பகுதியில் சிறுமிகள் மூவர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தை வடக்கு மாகாண சபை வன்மையாக கண்டிக்கின்றது.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு பின்புலத்தில் சில அரசியல் சக்திகள் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களை சிறைக்குள் வைத்து அடையாள அணிவகுப்பு நடத்திய போதுகூட அவர்களை அடையாளம் காண முடியாத நிலமை காணப்படுகின்றது. இதற் கெல்லாம் அரசியல் சக்திகள் பின்புலத்தில் இருக்கின்றன. எனவே உண்மையான குற்றவாளிகளை இனம் கண்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும்" என்று ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முன்மொழிந்தார்.

அதனை ஆளும் கட்சி உறுப்பினர் ரவிகரன் வழிமொழிந்தார். சபையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (வ-8)

## காணாமற்போன படையினர் குறித்தும் விசாரிக்கவேண்டும்

### மகிந்த அணியினர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 7

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு அலுவலகம் அமைக்கப்படுமாக இருந்தால் காணாமற்போன படையினர் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் இன்று போரையும் போரைவெற்றிகொண்ட மகிந்த ராஜபக்சவையும் மறந்துவிட்டே பேசிக் கொண்டிருக்கின்றோம். இந்த அரசு இவ்வளவு தூரம் பயணிக்கின்றது என்றால் அதற்குக் காரணம் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமை தான். இப்போதே இந்த அரசு தடுமாறிக்கொண்டிருக்கிறது. போர் மட்டும் முடியவில்லை யென்றால் இந்த அரசின்நிலமை என்னவாகியிருக்கும்.

இந்த அரசுடன் சர்வதேசம் நட்புறவு கொண்டாடுவதாகவும் மகிந்த சர்வதேசத்தைத் தவிர்த்துச்செயற்பட்டார்என்றும் கூறுகின்றார்கள். அப்படிச் சர்வதேசம் மகிந்தவுடன் கோபித்துக்கொள்வதற்கு மகிந்த செய்த குற்றம் என்ன? யுத்தத்தை முடித்து வைத்தமை தான் அவர் செய்த குற்றம்.

ஜே.ஆர். நினைத்திருந்தால் அன்றே போரை முடித்திருக்கலாம். பிரபாகரன் வடமராட்சியில் சுற்றிவளைக்கப்பட்ட போது போர் முடிவுக்கு வரவிருந்தது. ஆனால், இந்தியா அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஜே.ஆரை மிரட்டிப்போரைத் தொடர வைத்தது; பிரபாகரனைத் தப்பிக்க வைத்தது.

மகிந்தவுக்கும் அவ்வாறான அழுத்தங்கள் வந்தபோதிலும் அவர் அதற்கெல்லாம் அடிபணியவில்லை. இதனால்தான் சர்வதேசம் மகிந்தவை எதிரியாகப் பார்க்கத் தொடங்கியது. 30வருடப் போரால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்று தான் பலர் காணாமற் போனமை.

காணாமற்போன தமிழர்கள் தொடர்பில் சர்வதேசமும் இலங்கை அரசும் அதிக ஆர்வம் கொள்கின்றன. இது தொடர்பில் அலுவலகம் ஒன்றை அமைத்து விசாரணை நடத்துவதற்காகச் சட்டம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், காணாமற்போன படையினரை இவர்கள் மறந்துவிட்டனர்; அல்லது வேண்டுமென்றே தவிர்த்துவிட்டனர்.

நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் காணாமற் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுமாக இருந்தால் காணாமற்போன படையினர் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றார். (த-3)

# இன வன்முறைக்கு தூபமிடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை அவசியம்

### வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

இலங்கையின் பல பாகங்களிலும் சிறுபான்மை இனத்தவர் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள் குறித்தும், அவ்வாறான வன்முறைகளைத் தூண்டுவோர் மீதும் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் உடன் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முன்மொழிந்தார்.

அவர் முன்மொழிந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் சிறுபான்மை இனத்தினர் மீது பரவலாகத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான தாக்குதல்கள் மூலம் சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை இனத்துக்கும் இடையே விரிசலையும் வெறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்தும் வகையில் ஒரு குறிப்பிட்ட சிலர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். நேற்று அதிகாலையிலும் கொழும்பு நுகேகொடைப் பகுதியில் உள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் கடை தாக்கப்பட்டு தீக்கரையாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் விசமத்தனமான வன்முறைச் சம்பவங்கள் குறித்தும், இந்த வன்முறைகளை மேற்கொள்வோர் மீதும் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இந்தச் சபை கோருகின்றது-என்றார்.

குறித்த தீர்மானத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜவாகிர் வழி மொழிந்தார்.

[illegible] தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் தெரிவிக்கையில்,

தற்போதைய கூட்டாட்சி அரசில் சில முஸ்லிம் அரசியல் பிரதி நிதிகள் முக்கிய அமைச்சுக்களிலும் முக்கிய பொறுப்புக்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் மீது சமீப காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் குரல் கொடுக்காதது ஏன்? - என்றார்.

குறித்த தீர்மானத்தை அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் அனுப்பிவைக்க [illegible] எடுக்கப்படும் என அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்தார். (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடி விசாரணை அறிக்கை குறித்து என் மீது வீண் பழி

## வடக்கு சுகாதார அமைச்சர் கண்டனம்

கொழும்பு, ஜூன் 7
வடக்கு அமைச்சர்களின் விசாரணை அறிக்கை என்னிடம் கையளிக்காத நிலையில் அறிக்கையை ஊடகங்களுக்கு நான் வழங்கியதாக வெளியான தகவல்களை வன்மையாகக் கண்டிப்பதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அமைச்சின் ஊடகப்பிரிவினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகை அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:
கடந்த மாதம் 22ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு ஜெனிவாவில் தங்கியிருந்தேன். மாநாடு முடிவடைந்ததும் அங்கிருந்து நேரே நோர்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் அந்த நாட்டு அயலுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகளைச் சந்திப்பதற்காகவும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள நீண்டகால அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்களை அந்த நாட்டில் வதியும் தாயக மருத்துவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் பொருட்டும் நோர்வேயில் தங்கியுள்ளேன். இந்த நிலையில் முதலமைச்சரால் விசாரணை அறிக்கை அமைச்சர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டேன். இதுவரை எனக்கான அறிக்கை முதலமைச்சர் அலுவலகத்தால் என்னிடம் கையளிக்கப்படாத நிலையில் அறிக்கையின் உள்ளடக்கங்களை நானே ஊடகங்களுக்கு வழங்கியதாக உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியாகி இருப்பது வேடிக்கையாக உள்ளது.
தொடர்ந்தும் என் மீது வீண்பழி சுமத்தும் வகையில் திட்டமிட்டுச் சிலரால் மேற்கொள்ளப்படும் இந்தப் பரப்புரையை முற்றாக மறுக்கின்றேன். இது தொடர்பில் முழுமையான தன்னிலை விளக்கமொன்றை நாடு திரும்பியதும் ஊடகங்களுக்கு வழங்குவேன் என்றுள்ளது. (த-5)



## டெங்கு மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏதுமில்லை

*அமைச்சர் ராஜித தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 7
நாட்டின் டெங்கு நோய்க்கான மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் நிலவவில்லை எனவும், அவ்வாறு தட்டுப்பாடு நிலவுவதாக வெளிவந்துள்ளசெய்திகள் உண்மைக்குப்புறம்பானவை எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கிறார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
டெங்கு நோய்க்கான 'டெக்ஸ்ட்ரோன்' எனும் மருந்துக்கு அரச மருத்துவமனைகளில் தட்டுப்பாடு நிலவுவதாக இலங்கை மருத்துவர் சங்கம் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டுள்ளது. அந்த மருந்து போதியளவு கையிருப்பில் உள்ளதுடன், நேற்று முன்தினம் மற்றுமொரு தொகை தாய்லாந்திலிருந்து வந்திருக்கிறது. தாய்லாந்தில் மட்டுமே உற்பத்தி செய்யப்படும் இந்த மருந்து உள்நாட்டு வெளிச்சந்தைகளில் விற்பனைக்குக் கிடையாது.
இவ்வாறான பொய்யான தகவல்களை வெளியிட்டு மக்களைத் திசைதிருப்பும் மருத்துவர்கள் சங்கத்துக்கு நான் கடும் கண்டனம் தெரிவிக்கின்றேன் என்றார். (த-5)

## இடர் நிவாரணப் பணியின்போது சேதமுற்ற ஹெலி சேவை நீக்கம்

கொழும்பு, ஜூன் 7
பேரிடர் நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, தொழில்நுட்பக் கோளாறினால் அவசரமாகத் தரையிறக்கப்பட்டபோது பலத்த சேதமடைந்த எம்.ஐ.17 உலங்கு வானூர்தி சேவையில் இருந்து முற்றாக நீக்கப்படும் என்று வான்படை தெரிவித்துள்ளது.
காலி மாவட்டம் பத்தேகமவில் வெள்ள மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது வான் படையின் எம்.ஐ17 உலங்குவானூர்தி தொழில்நுட்பக் கோளாறினால் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.
வீடு மற்றும் மரங்களுக்கிடையில் தரையிறக்கப்பட்டதால், அது பலத்த சேதமடைந்ததுடன் வெள்ளத்திலும் சிக்கியது.
வெள்ளம் வடிந்த பின்னர் அந்த உலங்குவானூர்தி வான் படையினரால் பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, கொக்கல வான்படைத் தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.
பலத்த சேதமடைந்துள்ள இந்த உலங்குவானூர்தியைத் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்துவதில்லை என்று வான் படை முடிவு செய்துள்ளது.
பொதுவாகத் தரையில் அல்லது நீரில் மோதி விழுந்த உலங்குவானூர்திகளைத் தாம் பயன்படுத்துவதில்லை என்று வான் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதால், எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என்று வான்படைப் பேச்சாளர் தெரிவித்தார். (த-5)

## இடர் பாதித்த மக்களின் கடன்களுக்கு சலுகைகள்

*உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 7
இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டவர்கள் அரச வங்கிகளில் கடன் பெற்றிருந்தால் அந்தக் கடன்களுக்குச் சலுகையொன்றை வழங்கத் தீர்மானித்திருப்பதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்திருக்கிறார்.
காலி நியாகம பிரதேச செயலாளர் காரியாலயத்தில் இயற்கை இடர் சம்பந்தமாக நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் அரச தலைவரிடமும், தலைமை அமைச்சரிடமும் கலந்துரையாடியிருப்பதாகவும், வழங்கக் கூடிய சலுகைகள் பற்றிச் சம்பந்தப்பட்ட வங்கிகள் விரைவில் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கும் எனவும் அமைச்சர் கூறினார்.
பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சிறிய மற்றும் நடுத்தர வியாபார முயற்சிகளுக்காக வங்கிகளில் கடன் பெற்றுள்ளனர் என்பதால் அவர்களுக்கு இந்தச் சலுகையை வழங்குவது பேருதவியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (த-5)

## நன்றி கூறுகிறார் ரணில்



கொழும்பு, ஜூன் 7
அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த எனக்கு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைக் கூறுகின்றேன்.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வரும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது உத்தியோக பூர்வச் சமூக வலைத்தளத்தில் விடுத்துள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
நாட்டில் ஏற்பட்டுள்ள இடர் சம்பந்தமாக அறிக்கைகள் எனக்கு ஆறு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை கிடைக்கின்றது. இந்த இக்கட்டான நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சென்று பார்க்கமுடியாமையையிட்டு நான் வருந்துகின்றேன்.
இலங்கையில் ஏற்பட்டுள்ள மண் சரிவு மற்றும் வெள்ளம் ஆகிய இடர்களில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இடரில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் உதவி புரிந்த முப்படையினர், அரச ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன் என்று பதிவிட்டுள்ளார். (த-5)

*தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு வடக்கில் நியமனம்*

## கூட்டமைப்பின் குற்றச்சாட்டை சபையில் ஏற்றுக்கொண்ட அரசு

வடக்கு மாகாணத்தில் சாரதி மற்றும் சிற்றூழியர் நியமனங்களில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டுள்ள அரசு, எதிர்காலத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்களை அதிகம் உள்ளீர்ப்புச் செய்யும் என்று தெரிவித்துள்ளது.
நாடாளுமன்றத்தில் வாய்மூல கேள்வி பதில் நேரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.
'வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற சாரதி, அலுவலக பணியாளர் வெற்றிடங்களுக்குத் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். போர்ச் சூழலிலும் கல்வி கற்று அந்தப் பதவிகளுக்குத் தகுதியான வட பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு அநீதி ஏற்படுகின்றது. வட பகுதியில் நியமனம் பெறும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் ஒரு வருடமோ அல்லது இரு வருடமோ பணியாற்றி விட்டுத் தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதால் நாங்கள் இரு பிரதான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். இந்தப் பகுதியில் தொடர்ந்து வெற்றிடம் காணப்படுகின்றமை. அடுத்தது இங்குள்ளவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாமை. இதனைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?' என்று கேள்வி எழுப்பினார்.
இதற்குப் பதில் அளித்த அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, அரச சேவையில் நிலவும் சிறுதொழில் வெற்றிடங்கள் ஆரம்பத்தில் பொது நிர்வாக அமைச்சினால் நிரப்பப்பட்டன. தற்போது அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய சிறு வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.
சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான அநீதிகள் இடம்பெறுகின்றமையை நான் ஏற்றுக் கொள்கிறேன். இது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடி, வடக்கு கிழக்குப் பகுதிகளில் அதிகமானவர்களை உள்ளீர்க்கப்படும். சிறு தொழில் வாய்ப்புக்கள் அதிகமானவை மாகாண சபைகளுக்கு உட்பட்டே உள்ளன. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் உள்ளது.
கடந்த பொது நிர்வாக சேவைப் பரீட்சையில் 101 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். அதில் 32 பேர் வடக்குகிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இன சதவீதத்தைப் பார்க்கிலும் அதிகமானவர்களை நாங்கள் இணைத்துள்ளோம். பிரச்சினைகள் குறித்து எழுத்தில் வழங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (த-5)

## பிரசவத்தின் பின் தாதியருக்கு கட்டாயமற்ற இரவுக் கடமை

### கூறுகிறார் சுகாதார அமைச்சர்

அரச மருத்துவமனைகளில் பணிபுரியும் தாதியர்கள் அவர்களது பிரசவத்தின் பின் ஒரு வருட காலத்துக்கு இரவுநேர வேலைகளில் ஈடுபடவேண்டிய அவசியம் கிடையாதெனச் சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
களுத்துறையில் புதிய தாதியர் விடுதிக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்து கொண்ட போது இத்தத் தகவலை அவர் வெளியிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அநுராதபுரம், களுத்துறை, காலி மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள தாதியர் விடுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த நான்கு வருடங்களில் சுகாதாரசேவைக்குத்தேவையான மனித சக்திகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
களுத்துறை தேசிய சுகாதார வித்தியாலயம், உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கமைவாக பன்னாட்டுத் தரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதை மேலும் அபிவிருத்தி செய்யவுள்ளோம்.
தாதியர்களின் மேலதிக வேலை நேரத்துக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன. அவர்களின் நலனுக்காகவே பிரசவத்தின் பின் ஒரு வருட காலத்துக்கு இரவு வேலைகளில் ஈடுபடத் தேவையில்லை எனத் தீர்மானம் எடுத்திருக்கிறோம் என்றார். (த-5)

## நுகேகொடையில் முஸ்லிம் கடைக்கு நேற்றுத் தீ வைப்பு

முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. நேற்று அதிகாலை நுகேகொடையில் உள்ள கடைக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சிறிய சேதாரங்களுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.
முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது கடந்த சில வாரங்களாகத் தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்தன. பேரிடர் காரணமாக இந்தத் தாக்குதல்கள் ஓய்ந்திருந்தன. இந்த நிலையில், திருகோணமலையில் பள்ளிவாசல் மீது கடந்த சனிக்கிழமை பெற்றோல் குண்டுவீச்சு நடந்தது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்ஸ்றே எடுக்க அழைத்துச் சென்ற முதியவர் நோயாளர் வண்டியினுள் வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7
எக்ஸ் றே எடுத்துவிட்டு நோயாளர் காவுவண்டியில் ஏறியிருந்த முதியவர் மயங்கிச் சரிந்தார். அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் எக்ஸ்றே எடுக்கும் துணை மருத்துவ அலுவலர் ஒருவர் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விடுப்பில் உள்ளார். அங்கு வேறு எவரும் நியமிக்கப்பட்டாத நிலையில் முதியவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு நோயாளர் காவு வண்டியில் தடக்கி வீழ்ந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

"சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் எக்ஸ்றே எடுக்க ஒரேயொரு பணியாளரே நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் விடுமுறையில் சென்றதனால் மாகாண வைத்தியசாலைக்குரிய சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலிருந்து மாகாண வைத்தியசாலையான பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியில் அனுப்பி எக்ஸ்றே எடுக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. நேற்றுமுன்தினம் இவ்வாறு 8 பேர் வரையில் சென்றிருந்த நிலையில் பருத்தித்துறை வைத்தியாலையில் எக்ஸ்றே எடுத்த பின்னர் மீண்டும் நோயாளர் காவு வண்டியில் ஏற முற்பட்ட போதே முதியவர் வண்டியினுள் மயங்கிச் சரிந்தார். அவர் உடனடியாக பருத்தித்துறை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த 84 வயது முதியவரே இவ்வாறு உயிரிழந்தார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது" என்று விசாரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வேறு சில வைத்தியசாலைகளில் இரண்டுக்கும் மேற்பட்ட எக்ஸ் கதிரியக்கவியலாளர்கள் உள்ளபோதும் சாவகச்சேரியில் ஒருவர் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (வ-4-9)

# ஒக்டோபர் புரட்சி ஆய்வரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 7
புதிய சனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக் கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் ஆறாவது அமர்வு நாளை வியாழக் கிழமை பி.ப 3.30 மணிக்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

'ஒக்ரோபர் புரட்சியும் முதலாளித்துவ சோசலிச போராட்டமும்' என்ற தலைப்பில் த.ஸ்ரீபிரகாஸின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில் ஆய்வுரையை என். பிரதீபன் வழங்கவுள்ளார். சோசலிஸ முகாமின் தோற்றமும் விரிவும் சரிவும், ஏகாதிபத்தியச் சதிகள், சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்குப் பிந்திய உலகம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராய்கின்றதான இந்த ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

(வ-10)

# சிறுமியை வன்கொடுமை புரிந்த குடும்பத்தலைவர் தலைமறைவு

*பொலிஸார் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 7
பத்து வயதுக்குக் குறைவான சிறுமியை வன்கொடுமைக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் குடும்பத் தலைவர் பிரதேச மக்களால் தாக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

"குடும்பத்தலைவர் ஒருவர் நடந்துகொண்ட முறை தொடர்பில் சிறுமி பெற்றோரிடம் முறையிட்டுள்ளார். சிறுமியை அவர்கள் வைத்தியசாலையில் சேர்த்தனர். அதனையடுத்து குற்றஞ்சாட்டப்படும் குடும்பத் தலைவரை பிரதேச மக்கள் தாக்கியுள்ளனர். அதனால் அவர் காயமடைந்திருந்தார். எனினும் அவர் தற்போது தலைமறைவாகியுள்ளார். அவர் தேடப்பட்டு வருகிறார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, ஊர்காவற்றுறையில் சில மாதங்களாக 3 சிறுவர்கள் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டனர். அது தொடர்பில் நேற்றுமுன்தினம் 3 பேர் கைது செய்யப்பட்டனர். ஏனையவர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

(வ-4-26)

# மோடி - ரவி டில்லியில் சந்திப்பு

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை கொழும்பு அயலுறவுத் துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி கூட்டு அரசின் புதிய அயலுறவு அமைச்சராக நியமிக்கப்பட்ட ரவி கருணாநாயக்க தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை நேற்று இந்தியாவுக்கு மேற்கொண்டார். அவர் நேற்று மாலை இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தினார்.

(வ-5)



# கடவுளாக வணங்கும் மாட்டை அனுமதியின்றி வெட்டியோருக்குப் பிணை வழங்க முடியாது

*ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம். றியால் உத்தரவு*

யாழ்ப்பாணம் ஜூன் 6
"மக்களால் கடவுளாக வணங்கப்படும் மாட்டை எந்தவித முறையான அனுமதியையும் பெற்றுக்கொள்ளலாமல் கொன்றுள்ளனர். அவர்களின் பிணை விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாது"

இவ்வாறு மண்டைதீவில் சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாட்டை வெட்டிய சம்பவம் தொடர்பான வழக்கில் ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியால் தெரிவித்தார்.

மண்டைதீவு முருகன் ஆலயத்துக்கு அண்மையான பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மாட்டை இறைச்சியாக்கும் நோக்குடன் கொன்றனர் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் பொலிஸாரால் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு எதிரான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, அவர்களை பிணையில் விடுமாறு கோரினார். சந்தேகநபர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் ஏ.எம்.எம். றியால், அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-8)

# கால்பந்தாட்டத்தில் நடுவர் மீது தாக்குதல்

*வடமராட்சியில் நேற்றுச் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடமராட்சியில் நடந்த கால்பந்தாட்டத்தில் நடுவரைத் தாக்கி மண்டை உடைத்ததோடு, எதிரணியின் வீரரையும் தாக்கிய சம்பவம் நேற்று இடம்பெற்றது.

நவிண்டில் கலைமதியின் தொடரில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் கரவெட்டி கரவைச்சுடர் அணிக்கும் ஊரெழு றோயல் அணிக்கும் இடையே நேற்றுமாலை ஆட்டம் இடம்பெற்றது. ஆட்டம் நிறைவடையும் நிலையில் கரவைச்சுடர் அணியின் வீரர் ஒருவருக்கு நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டது. அந்த வீரர் மைதானத்திலிருந்து வெளியேறினார்.

சிறிது நேரத்தில் அதே அணியின் மற்றொருவருக்கும் நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டது. அந்த வீரரே நடுவரை தலையில் தாக்கிக் காயப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதனைத் தடுக்கச் சென்ற எதிரணியின் வீரரும் தலையில் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. (வ-4-26-426)

# தீபச்செல்வனின் நூல் ஆயப் பிரிவால் தடுப்பு



ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய 'தமிழர் பூமி' புத்தகம் கொழும்பு ஆயப் பிரிவால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதியில் நாட்டுக்கு எதிராக ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்ந்த பின்னரே அதனைக் கையளிப்பதா? அல்லது தொடர்ந்து தடுத்து வைப்பதா? என்பது தீர்மானிக்கப்படும் என்று யாழ்ப்பாண ஆயப் பிரிவு அதிகாரி தெரிவித்தார். நில ஆக்கிரமிப்பின் அரசியல் குறித்தும், வரலாற்றில் அபகரிக்கப்பட்டு அடையாள அழிப்பு செய்யப்பட்ட நிலங்கள் குறித்தும் எடுத்துரைக்கும் இந்த நூல், 2009இற்குப் பின்னர் ஈழத்தில் முன்னெடுக்கப் பட்ட அரச, இராணுவ நில ஆக்கிரமிப்புக்கள் மற்றும் அதற்கெதிரான தன்னெழுச்சிப் போராட்டங்கள் குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# கலப்பு நீதிமன்றை உருவாக்குவதற்கு அரசமைப்பில் இடமேயில்லை

*மகிந்த அணி தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 7
கலப்பு நீதிமன்றை உருவாக்கி வெளிநாட்டு நீதிபதிகளை இணைத்துக் கொள்ள இலங்கை அரசமைப்பில் இடமில்லை. இப்படியானதொரு சிபாரிசை உள்ளடக்கிய தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி நாட்டின் அரசமைப்பை அரசு மீறியுள்ளது.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு நிராகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையைச் சமர்ப்பித்து அது மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே தினேஸ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியமை பாரதூரமான விடயமாகும். இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு படையினர் வேட்டையாடப்பட்டு வருகின்றனர். கடற்படையினரும், இராணுவத்தினர் சிலரும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதம் முழுமையாக அழிக்கப்படவில்லை. அண்மையில்கூட லண்டனில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனவே, இலங்கையைப் பயங்கரவாதத்திலிருந்து மீண்டு ஜனநாயகம் கட்டியெழுப்பப்படும் நிலையில் இப்படியான தீர்மானம் தாக்கத்தை ஏற்படுத்தும். அதை எதிர்க்கின்றோம் - என்றார். (து-5)

# தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம் ஜூன் 4
சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின் நாளை வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. மறு நாள் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழா முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# பறாளாய் முருகன் இன்று வேட்டைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 7
சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் இன்று பகல் 12 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மாலை 4.30 மணிக்கு சப்பைரதத்திருவிழாவும் நாளை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(வ-10)

# இராணுவத்துக்குள்ளும் கறுப்பு ஆடுகள் உள்ளன

*குற்றச்செயல்களில் ஈடுபட்டோரை மன்னிக்கக்கூடாதென்கிறார் மங்கள*

கொழும்பு, ஜூன் 7
இராணுவத்துக்குள்ளும் கறுப்பு ஆடுகள் இருக்கக்கூடும் என்றும், எவரேனும் கடத்தல், கொலை உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களை மன்னிக்கவே கூடாது. குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கினால்தான் நாட்டுக்கும், இராணுவத்துக்கும் நற்பெயர் ஏற்படும்.

இவ்வாறு நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிடம் சிறந்த இராணுவக் கட்டமைப்பு இருக்கின்றது என்பதைச் சகலரும் நன்கறிவார்கள். எனவேதான் ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைக்கும் இடம் கிடைத்துள்ளது. சிறந்த இலங்கை இராணுவத்திலும் கறுப்பு ஆடுகள் இருக்கலாம். அவ்வாறானவர்களைத் தண்டிக்கும்போதுதான் ஒட்டுமொத்த இராணுவத்தின் நற்பெயரும் பாதுகாக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் கிருசாந்தி கொலை சம்பவத்தின் போது உரிய விசாரணை நடத்திச் சம்பந்தப்பட்ட படை வீரருக்குத் தண்டனை வழங்கப்பட்டபோதுதான் முழு இராணுவத்தின் நற்பெயரும் பாதுகாக்கப்பட்டது என்பதைக் கூறியாகவேண்டும்.

ஊடகவியலாளர்களைக் கடத்தித் தாக்கிய, கொலை செய்த மற்றும் கப்பம் பெறுவதற்காக இளைஞர்களைக் கடத்திய சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை மன்னிக்கக்கூடாது. உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (து-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கத்தகடற்றுப் பயணித்த காரை மறித்ததால் விழிப்புக்குழுவினர் கைது

## பிரதேச செயலகத்தை மக்கள் முற்றுகையிட்டதால் உடனடியாக அனைவரையும் விடுவித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வடமராட்சி கிழக்கில் அதிகரித்துள்ள கொள்ளையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் செயற்பட்ட விழிப்புக் குழுவைச் சேர்ந்த 10 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

பிரதேச மக்கள் மருதங்கேணி பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு, நீதி கேட்டுப் பேராடியதையடுத்து அவர்கள் 10பேரையும்பொலிஸார்விடுவித்தனர்.

"இலக்கத்தகடு இல்லாது பயணித்த காரை விழிப்புக் குழுவினர் மறித்தனர். அதனைச் செலுத்தியவர் மறித்தவர்களை மோத வந்தார். பின்னர் அவர் தப்பிச் சென்றார். கார் திரும்பி வந்தால் தடுத்து நிறுத்துவதற்குத் விழிப்புக் குழுவைச் சேர்ந்தவர்கள் தயாராகியிருந்தனர். அந்த நேரம் வந்த பொலிஸார் விழிப்புக்குழுவைச் சேர்ந்த 10 பேரையும் கைது செய்து கொண்டு சென்றனர். பொலிஸாரின் இந்தச் செயற்பாடு சட்ட விரோதமானதாகும். கொள்ளைச் சம்பவங்களுக்குப் பொலிஸாரும் உடந்தையாக இருக்கின்றனரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. திருட்டு, கொள்ளை என்று அறிவித்தால்கூட களத்துக்கு உடனடியாக வராத பொலிஸார், நேற்றுமுன்தினம் சம்பவ இடத்துக்கு விரைந்துவந்து விழிப்புக்குழுவினரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர்" என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற செம்பியன்பற்று பிரதேசத்தின் மக்கள் சுமார் 60 பேர் வரையில் 2 பேருந்துகளில் சென்று மருதங்கேணி பிரதேச செயலகத்தை நேற்று முற்றுகையிட்டனர். கைது செய்யப்பட்ட சம்பவத்துக்கு உரிய நீதியைப் பெற்றுத்தருமாறு அவர்கள் பிரதேச செயலாளரிடம் கோரினர்.

"சம்பவம் இடம்பெற்ற பிரிவுக்கு உட்பட்ட பளை பொலிஸாருடன் தொடர்பு கொண்டு விடயத்தைக் கேட்டபோது, அனைவரையும் விடுதலை செய்வதாகக் கூறினர்" என்று மருதங்கேணி பிரதேச செயலர் கூறினார். பிரதேச செயலகத்திலிருந்த மக்கள் அனைவரும் பேருந்தில் பளை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றனர். அதன் பின்னர் 10 பேரும் விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4-26)



# போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு வட்டு. இந்து வாலிபர் சங்கம் உதவி

முல்லைத்தீவு, ஜூன் 7

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, போரால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு புதிய கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந்து வாலிபர் சங்கத்தின் முன்னாள் உறுப்பினரும் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய இராஜசிங்கம் பிரசாந்தனால், பயனாளிகளின் பாவனைக்கென அமைக்கப்பட்ட கிணறு கையளிக்கப்பட்டது.

குறித்த குடும்பத்தினர், அடிப்படை வசதிகளில் ஒன்றான கிணறு இல்லாமையால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

அதனை ஏற்று குறித்த கிணறு ஒரு லட்சத்து 41 ஆயிரம் ரூபா செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தினர் தெரிவித்தனர். (ஐ)

# இராமநாதன் கல்லூரியில் பௌர்ணமி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 7

வலிகாமம் கல்வி வலயத்தின் பௌர்ணமி தினக் கலைவிழா நாளை வியாழக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பகல் 12மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

"வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. மௌனகுருவும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொள்ளவர்.

நிகழ்வில் தேசிய, வலயக் கொடிகள் ஏற்றுதல், மங்கல விளக்கேற்றல், தமிழ்மொழி வாழ்த்து முதலான ஆரம்ப நிகழ்வுகளுடன், இராமநாதன் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனம், இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களின் குழு நடனம், விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் குழு இசை, மகாஜனக் கல்லூரி மாணவர்களின் நாடகம், உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடகம், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களின் நாட்டார் பாடல், ஆசிரியர்களின் இசை நடன நாடகம், விருந்தினர்களின் உரை எனப் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன" என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-10-28)

# கதிர்காமத்துக்கான பாதயாத்திரை உமையாள்புரம் சென்றடைந்தது

வடமராட்சி, ஜூன் 7

கதிர்காமக் கந்தன் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை மூன்றாவது நாளான நேற்று இரவு இயக்கச்சி சரந்தாய் கரந்தன் உமையாள்புரம் கண்ணகை அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்தது. அம்பாறை மாவட்டம் காரைதீவு நந்தவனம் ஸ்ரீசித்தி விநாயகர் கோவிலில் பரிபாலன சபையைச் சேர்ந்த வேல்சாமி மகேஸ்வரன் தலைமையில் வருடந்தோறும் சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை நடைபெறும்.

இந்த வருடத்துக்கான பாதயாத்திரை கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து வேல்சாமி மகேஸ்வரன் தலைமையிலான பாதயாத்திரைக் குழுவினர் பூசகரிடம் வேல் ஒன்றைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

புறப்படும் வழியில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட குழுவினர் அங்கு காலை உணவை முடித்துக் கொண்டு யாத்திரையைத் தொடர்ந்தார்கள்.

யாத்திரைக் குழுவினர் வல்லை துன்னாலை வரணி ஊடாக சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயிலை அடைந்து அன்றிரவு அங்கு தங்கினார்கள்.

மறுநாள் காலை அங்கிருந்து புறப்பட்ட யாத்திரைக் குழுவினர் உசன் கந்தசுவாமி கோயிலை அடைந்து அங்கு இரவு தங்கி நேற்றுமுன்தினம் காலை அங்கிருந்து புறப்பட்டு கரந்தாய் முனீஸ்வரன் கோயிலை அடைந்து தங்கியிருந்தனர்.

இந்தக் குழுவினர் நேற்றுக் காலை புறப்பட்டு இரவு கரந்தன் உமையாள்புரம் கண்ணகை அம்மன் கோவிலில் தங்கியிருந்தனர்.

அவர்கள் இன்று புதன்கிழமை காலை தமது யாத்திரையைத் தொடர்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-173)

# முன்பள்ளிகள் இடையே விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி,ஜூன் 7

தென்மராட்சிக் கல்வி வலய சாவகச்சேரி பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றன.

போட்டிகளில் சாவகச்சேரி, கைதடி, மட்டுவில் குடும்ப முன்பள்ளிகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாக்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் பங்குபற்றினர்.

நிகழ்வில் சிறார்களிடையே பத்துக்கு மேற்பட்ட விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

மட்டுவில் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி த.மாலினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையா னர் அ.கெங்காதரனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி பி.கிருஷ்ணபிள்ளை, சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் தெ. வினோதனும் கலந்து கொண்டனர். (ஐ-9)



இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் சூழல் தின மரநடுகை நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இலங்கை செஞ்சிலு வைச்சங்கத்தின் செயலாளர் த.சேதுபதி மற்றும் உறுப்பினர்கள், தொண்டர்கள் பாடசாலை அதிபர் த. கண்ணபிரான் மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டு பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர். (ஐ)

# ஆள்சேர்ப்புத் திட்டத்துக்கு முரணாக மட்டக்களப்பில் 12 அதிபர்கள் நியமனம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூன் 7

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள 12 பாடசாலைகளில், சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆள்சேர்ப்புத் திட்டத்துக்கு முரணாக அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் செயலாளர் பொன்னுத்துரை உதயரூபன் இது தொடர்பாக நேற்று அனுப்பி வைத்துள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு மாவட்டக் கல்வி வலய நிர்வாகத்துக்குட்பட்ட 1சி வகையைச் சேர்ந்த 12 பாடசாலைகளிலேயே அதிபர் நியமனத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.

2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதியிடப்பட்டதும், 1589/30 அதி சிறப்பு வர்த்தமானியின் 178 அத்தியாயத்தின் (111) குறிப்பிடப்பட்டுள்ள வலயக்கல்விப் பணிப்பாளரின் சேவையின் பொறுப்புக்கூறலுடன், 1998.23 ஆம் இலக்ககல்விஅமைச்சின்சுற்றறிக்கைக்கு முரணாக, 12 பாடசாலைகளின் அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளரின் வெளிப்படைத்தன்மையற்ற பரிந்துரைக்கமைவாக நியமனம் செய்யப்பட்டுள்ளதைத் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

சட்டவாட்சிக்கு முரணானதும் வெளிப்படைத்தன்மையற்றதுமான மேற்படி நியமனங்களை உடன் மீளப்பெற்று நம்பகத்தன்மையுடன் கூடிய பொறுப்புக் கூறலுடன் மேற்படி பாடசாலைகளின் அதிபர் நியமனங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், பிரதம செயலாளர் பொதுச்சேவை ஆணைக்குழு, மாகாணக் கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக் குட்பட்ட பலாலி ஆரம்ப சுகாதார நிலையம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியில் யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம் நிலையத்துக்கான கட்டடத்தை அமைத்திருந்தது. நிகழ்வில் கலந்துகொண்ட தாய்மார்களுக்கு முருங்கை கன்றுகளும் வீட்டுத் தோட்ட இயற்கை விவசாய ஊக்குவிப்பு உறுதி சிட்டைகளும், குழந்தை வளர்ப்பு தொடர்பான நூல்களும் வழங்கப்பட்டன. (வ-ரி)

# தேர்த் திருவிழா

வரணி, ஜூன் 7
வரணி வடக்கு கும்பிட்டின்புலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் நாளை வியாழக்கிழமை தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இன்று புதன்கிழமை இரவு வேட்டைத் திருவிழா இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-122)

++++++++++++++++++++

அளவெட்டி, ஜூன் 7
அளவெட்டி கும்பிழாவளை விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழாவில் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தர்மகர்த்தா சபையினர் அறிவித்தனர்.
கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது. (வ-36)

# சிறுபான்மை மக்கள் விடயத்தில் ஐ.தே.கவுக்கு அக்கறையில்லை

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் சாடுகின்றார்

கொழும்பு, ஜூன் 7
ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மை மக்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை என்று சாடியுள்ளார் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன்.
கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவால் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிறுபான்மை மக்களை அணைத்துக்கொண்டு செல்வதில் பெரும் அக்கறை செலுத்தியது. அதற்குக் காரணம் சிறுபான்மை மக்கள் அவர்களை விட்டுச் சற்று விலகியிருந்தனர். ஆனால் ஐக்கிய தேசிய கட்சியுடன் சிறுபான்மை மக்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதால் அவர்கள் தொடர்பான விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படுவதில்லை.
ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கின்ற ஒரு சில அமைச்சர்களும் முக்கியஸ்தர்களும் சிறுபான்மையினரின் விடயங்கள் தொடர்பாக அக்கறை செலுத்ததாத தன்மையை எனது அமைச்சிலும் தற்பொழுது உணருகின்றேன்.
இந்தச் செயற்பாடானது சிறுபான்மை மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழக்கும் ஒரு நிலையாகவே நான் கருதுகின்றேன்.
1994 ஆம் ஆண்டு அரச தலைவராக பதவியேற்ற சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மலையக தமிழர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களுக்காகவே ஓர் அமைச்சை ஏற்படுத்தி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கினார்.
பின்னர் ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்சவும் தன்னுடைய முதலாவது ஆட்சிக் காலத்தில் பலகோடி ரூபாவை வாரி வழங்கினார்.
அவரும் சிறுபான்மை மக்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி பொருளாதாரம், கல்வி, அபிவிருத்தி, சுகாதாரம் என பல்வேறு துறைகளையும் முன்னேற்றம் காண வழி சமைத்தார். ஆனால் அவருடைய இரண்டாவது ஆட்சியின் போது ஒருகாலகட்டத்தில் சிறுபான்மையினர் தொடர்பாக அக்கறை செலுத்தாமை காரணமாகவும் அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை காரணமாகவும் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.
இதனை ஐக்கியதேசியக் கட்சி ஒரு பாடமாகக் கொண்டு செயற்படவேண்டும். நாங்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் அரசை ஆட்சிபீடம் ஏற்றினோம்.
ஆனால் இன்று சிறுபான்மை மக்கள் நம்பிக்கை இழக்கின்ற வகையிலேயே சில செயற்பாடுகள் அமைந்துள்ளன. என்னுடைய அமைச்சிலும் இந்த நிலமை இருக்கின்றது.
இதனை நான் வெளிப்படையாகவே கூறுகின்றேன். இதனை யாரும் கூறா விட்டால் எங்களுடைய உரிமைகள் தேவைகளைபெற்றுக் கொள்ளமுடியாது.
நாங்கள் இந்த அரசில் அமைச்சர்களாக இருந்தாலும் எங்களுடைய மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றபோது நிச்சயமாக நாம் அதனைச் சுட்டிக் காட்டத் தயங்கமாட்டோம்.
எங்களுக்கான வேலைத்திட்டங்களை வழங்குவதற்கு தயாராக வேண்டும். எந்த ஒரு ஆட்சியும் சிறுபான்மை மக்களின் ஆதரவு இல்லாமல் தொடரமுடியாது என்பதை எமக்கு கடந்தகாலங்கள் உணர்த்தியிருக்கின்றன என்றுள்ளது. (ற-10)

# இடரால் உயிரிழந்தோருக்கு சாந்தி வேண்டிப் பிரார்த்தனை

கொழும்பு, ஜூன் 7
வெள்ளம் மற்றும் மண் சரிவால் உயிரிழந்தோரின் ஆத்ம சாந்திக்காகவும், இலங்கை மக்களுக்கு ஆசி வேண்டியும் முழு இரவு பௌத்த சமயப் பிரார்த்தனை நேற்று முன்தினம் பிற்பகல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.
அரச தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பிய ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
அதில் உள்ளதாவது:
வணக்கத்துக்குரிய மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட ஆயிரம் மகா சங்கத்தினரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த பிரார்த்தனையில் கலந்துகொள்வதற்காக கொழும்பு 07, ஆர்.ஜீ. சேனநாயக்க மாவத்தையிலுள்ள சிறி சம்புத்தாலோக்க விகாரையிலிருந்து மகா சங்கத்தினர் சுதந்திர சதுக்கத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.
பிரார்த்தனையின் இறுதியில் அரச தலைவரால் மகா சங்கத்தினருக்கு தானப் பொருள்கள் வழங்கப்பட்டன. இந்தப் புண்ணிய நிகழ்வில் மூன்று நிக்காயக்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினரும், பிரதி சபா நாயகர் திலங்க சுமதிபால, அரச தலைவர், செயலாளர் பீ.பி.அபேகோன், ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேன ஆகியோரும், பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் உள்ளிட்ட பக்தர்கள் பெரும்பாலானோரும் கலந்துகொண்டனர். என்றுள்ளது. (ற-10)

# ஐ.நா. மனித உரிமை சபையிலிருந்து அமெ. விலகலாம்

கொழும்பு, ஜூன் 7
ஐக்கியநாடுகள் மனித உரிமை சபையிலிருந்து விலகலாம் என்ற அறிவிப்பை அமெரிக்கா வெளியிடவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை இஸ்ரேலுக்கு எதிரானதாக காணப்படுகின்றது. அதனால் சீர்திருத் தங்கள் அவசியம் என அமெரிக்கா கருதுகின்றது என இராஜதந்திரிகளும் சிவில்சமூக பிரதிநிதிகளும் சுட்டிக் காட்டியுள்ளனர். ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையின் மூன்று வார அமர்வு முடிவடைந்த பின்னர் அதிலிருந்து விலகுவது குறித்து அமெரிக்கா தீர்மானிக்கும் என ஐக்கியநாடுகளுக்கான அமெரிக்க தூதுவர் நிக்கிஹேலி கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்
ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபை இஸ்ரேல் குறித்து கடும் நிலைப்பாட்டை எடுத்ததன் காரணமாக ஜோர்ஜ் டபில்யூ புஸ் ஆட்சிக்காலத்தில் அதிலிருந்து அமெரிக்கா விலகியது. பின்னர் பராக் ஒபாமா ஆட்சிக் காலத்தில் மீள இணைந்தது. (ற-21)



## மைத்திரி, மகிந்த இடையே

# நல்லுறவை ஏற்படுத்த கூட்டம் நடக்கவில்லை

கொழும்பு, ஜூன் 7
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்துவது தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலும் நடைபெறவில்லை.
இவ்வாறு மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
மகிந்த மற்றும் மைத்திரியை ஒன்றிணைத்து சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தும் நோக்கில் அண்மையில் இருதரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர் என்றும் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.
அவ்வாறான எந்தவொரு கலந்துரையாடலும் நடைபெறவில்லை. கூட்டு எதிர்க் கட்சியில் மகிந்தவுக்கு அடுத்த மூத்த தலைவர் நான் தான்.
எனக்குத் தெரியாமல் கூட்டு எதிர்க்கட்சி தரப்பில் யாரும் எந்தவொரு கலந்தாலோசனையும் மேற்கொள்ள முடியாது - என்றார். (ற-10)

## காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியறியும் சங்கத்தின்

# வவுனியா மாவட்டத் தலைவியிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

வவுனியா, ஜூன் 7
காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக் கண்டறியும் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவியான திருமதி ஜெயவனிதாவிடம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியா முதன்மைப் பாலகத்துக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தும் களத்துக்கு நேற்றுக்காலை முச்சக்கர வண்டியில் வந்த புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.
ஜெயவனிதா மற்றும் அவரது கணவரின் அடையாள அட்டைகளைக் காண்பிக்குமாறு கேட்டனர் என்றும், அவர்களின் குடும்ப விவரம், 2009 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட காசிப்பிள்ளை ஜெரோமி அரச தலைவருடன் பாடசாலைச் சீருடையுடன் காணப்படும் புகைப்படம் என்பவை தொடர்பாக சில கேள்விகளைக் கேட்டனர் என்றும், அரை மணி நேர விசாரணையின் பின்னர் அவர்கள் அங்கிருந்து அகன்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
“இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகள் மேற்கொண்டமை உண்மை. சுமார் அரைமணித்தியாலமாக என்னையும் எனது கணவரையும் விசாரனை செய்தனர். குடும்ப விபரம், காணாமல் போன எனது பிள்ளை எங்கே காணாமல் போனார், அரச தலைவருடன் புகைப்படத்தில் நிற்கும் காட்சி ஊடகங்களில் வெளிவந்தமை தொடர்பாகவும், எந்தப் பாடசாலை கல்விச் சுற்றுலா ஏதும் சென்றாரா என்று கேட்டனர்.
எனது பிள்ளை கல்விச் சுற்றுலா செல்லவில்லை என்று பதிலளித்தேன். எப்படி இந்த புகைப்படம் அரச தலைவருடன் எடுக்கப்பட்டது என்று கேட்டனர்.
இந்தக் கேள்வியை அரச தலைவரிடம் கேட்க வேண்டும் என்று தெரிவித்தேன். உங்கள் பிள்ளை எந்த இடத்தில் அரச தலைவரைச் சந்தித்தார்?, எவ்வாறு இந்த புகைப்படம் எடுக்கப்பட்டது தொடர்பாகவே இந்த கேள்விகள் நாங்கள் கேட்க வந்தோம் என்று கூறிவிட்டு சென்றனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என்னை விசாரனை செய்த 33ஆவது சந்தர்ப்பம் இதுவாகும்." என்று ஜெயவனிதா தெரிவித்தார். (ற - 402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# வேலை தேடும் பட்டதாரிகள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

## தொடர் போராட்டம் 100 நாளை எட்டியது

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாண மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
தமக்கான அரச வேலை கோரியும், தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தில் முறையான கொள்கைகளை பின் பற்றக் கோரியும் கடந்த 100 நாள்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக காலவரையற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
போராட்டத்தின்100ஆவதுநாளான நேற்றைய தினத்தைத் துக்க தினமாக கடைப்பிடித்து, கவனவீர்ப்புப் போராட்டம்நடத்தினர். தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுக் கப்படும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-ரி)

## திருமுருகன்காந்தியின் விடுதலையை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
தமிழக அரசால் கைது செய்யப்பட்டுள்ள ஈழத் தமிழ் ஆதரவு செயற்பாட்டாளர் திருமுருகன்காந்தியின் விடுதலையை வலியுறுத்தி நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்ப்பாண பேருந்து நிலையம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.
இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், இனப்படுகொலையாளிகள் பன்னாட்டு தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் தண்டிக்கப்படல் வேண்டும், தமிழர்களின் தேசம் அங்கீகரிக்கப்படல் வேண்டும் போன்ற கோரிக்கைகளில் தொடர்ச்சியாக உறுதியாக இருந்து தமிழக மட்டத்திலும், ஐ.நா மட்டத்திலும் புலம்பெயர் தமிழர்களுடன் ஒன்றிணைந்தவாறு திரு முருகன்காந்தி மேற்கொண்டுவரும் முயற்சிகள் ஈழத்தமிழ் மக்களின் நீதிக்கான பயணத்தில் மிக முக்கிய செயற்பாடுகளாகும்.
ஈழத் தமிழ் மக்களுக்காக ஓய்வுறக்கமின்றி போராடி வருபவர்களில் ஒருவரான திருமுருகன்காந்தியினது விடுதலைக்காக போராட வேண்டியது ஈழத் தமிழர்களின் கடமையாகும்.
அவரது விடுதலையை வலியுறுத்தி நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு வலுச்சேர்க்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ற-10)

## சிறுவர் துர்நடத்தைகள் பற்றிய விழிப்புணர்வு பாடசாலைகளில்

கொழும்பு, ஜூன் 7
சிறுவர் துர்நடத்தை பற்றிய விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பாடசாலைகளுக்குச் செல்வதற்குத் தீர்மானம் எடுத்துள்ளது என்று தெரியவருகின்றது.
அதன் பிரகாரம் வகுப்பறைகளுக்குள் அல்லது வெளியிடங்களில் சிறுவர்கள் மீதான துர்நடத்தைகள் பற்றித் தெளிவுபடுத்துவதற்கான கருத்தரங்குகள் மற்றும் வீதி நடனங்கள் போன்றவற்றை நடத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர் என அச்சபையின் தலைவியும் சட்டத்தரணியுமான திருமதி மார்சி டீ 'லிவேரா தெரிவித்துள்ளார்.
சிறுவர்கள் மீதான இம்சைகள் மற்றும் துர்நடத்தைகள் பற்றிய தகவல்களைக் கொடுப்பதற்காக அதிகார சபையின்1929 இலக்கத் தொலைபேசியுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்று பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கிடைக்கும் தகவல்கள் மீதான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-21)

## நச்சுப் பாம்பு தீண்டிய பெண் வைத்தியசாலையில்

நச்சுப் பாம்பு தீண்டிய குடும்பப் பெண் சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில், தவசிக்குளத்தில் இடம்பெற்றது.
தோய்த்து உலர்ந்த ஆடைகளை மடித்து அறைக்குள்ளிருந்த அலுமாரிக்குள் வைக்கச் சென்ற வேளையில் அறைக்குள் மறைந்திருந்த நச்சுப் பாம்பு தீண்டியது எனத் தெரிவிக்கப்பட்டது.
அதே இடத்தைச் சேர்ந்த சிறிஞ்சன் பவிதா(வயது 28) என்ற குடும்பப் பெண்ணே சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படுகிறது. (வ-9)

## சிறார்களின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 7
சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகன் முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
முன்பள்ளியின் தலைவர் வ.ஶ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தனும்,சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி நிரஞ்சலா கிருஸ்ணேந்திரனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## இலங்கையின் பொருளாதாரம் உயர்வடையும் சாத்தியம்

கொழும்பு, ஜூன் 7
இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 4.7 வீதத்தால் உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கியின் சர்வதேச ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு வழங்கியுள்ள நிதியுதவியாலும் இலங்கையின் தனியார் துறையினரின் கணிக்கத்தக்க வளர்ச்சியாலும் இந்த வருடம் இலங்கையில் 4.7 வீத பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.
இந்த ரீதியில் அடுத்த வருடம் அது 5 வீதமாக உயரும் சாத்தியம்காணப்படுகின்றது.
தென்னாசியப் பிராந்தியத்தில் இவ்வருடம் 6.8 வீதமும் அடுத்த வருடம் 7.1வீதமும் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஒப்பீட்டளவில் இலங்கையின் வளர்ச்சி இவ்விரு வருடங்களிலும் சற்றுக் குறைவாகவே எதிர்பார்க்கப்படுகின்றது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## சிவசிதம்பரத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7
தலைவர் மு. சிவசிதம்பரத்தின் 14ஆவது ஆண்டு நினைவும், அமரர் சி. நமசிவாயத்தினது 19ஆவது ஆண்டு நினைவும் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்க கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.
தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு வீ. ஆனந்தசங்கரியும், மு. சிவசிதம்பரத்தின் உருவப்படத்துக்கு முன்னாள் மாநகர முதல்வரின் செயலாளர் பூலோகரட்ணமும், அமரர். நமசிவாயத்தின் உருவப்படத்துக்கு அவரது மகனும் மலர்மாலை அணிவித்தனர்.
மறைந்த தலைவர்களைப் பற்றி கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரியும், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் க. முகுந்தனும் கருத்துத் தெரிவித்தனர். (ற-10)

## சீனாவின்பங்களிப்புடன் சிறுநீரக மருத்துவமனை

கொழும்பு, ஜூன் 7
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கைக்கமைய சீன அரசின் அன்பளிப்பாக பொலநறுவையில் அமைக்கப்படவுள்ள சிறுநீரக மருத்துவமனைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று முற்பகல் அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.
அரச தலைவரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது
அதில் உள்ளதாவது
இலங்கை அரசின் சார்பில் சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் ஜனக்க ஶ்ரீ சந்ரகுப்த, சீன அரசின் சார்பில் சீன தூதரக பொருளாதார மற்றும் வர்த்தக ஆலோசகர் யாங் சூயூவான் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது சீன அரச தலைவர் ஷீ ஜின்பின்னுடன் நடத்திய பேச்சின் பெறுபேறாக இந்த சிறுநீரக மருத்துவமனை இலங்கைக்கு கிடைத்தது.
200 கட்டில்கள், 100 குருதி சுத்திகரிப்பு கருவிகள், சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை செய்யக்கூடிய நவீன சத்திரசிகிச்சைக் கூடம் ஆகியவற்றுடனான தேசிய மட்டத்திலான இந்த மருத்துவமனை 12 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.
மூல காரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோயால் நாடு முழுவதும் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நீண்டகால தேவைகளை நிறைவுசெய்வதற்காக அமைக்கப்படவுள்ள இந்த சிறுநீரக மருத்துவமனைக்கான அடிக்கல் ஜூலை மாதத்தில் அரச தலைவரால் நடப்படும். என்றுள்ளது. (ற-21)

## கைதடி இல்ல முதியோர்கள் மாணவர்களால் மதிப்பளிப்பு

கொக்குவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் நேற்று கல்விச்சுற்றுலாவாக கைதடி அரசமுதியோர் இல்லத்துக்குச்சென்றனர்.
முதியோர் இல்லத்துக்குச் சென்ற மாணவர்கள் அங்கு தங்கியிருக்கும் முதியோர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களுக்கு இனிப்புப் பண்டங்களை வழங்கினார்கள்.
"சமூகத்தில் முதியோர்களை மதிக்க வேண்டும், முதியோர்களைக் கைவிடக் கூடாது. பிள்ளைகள்தான் அவர்களை பராமரிக்க வேண்டும் என்ற தொனிப் பொருளில் மாணவர்களின் வருகை அமைந்தது. மாணவர்கள் முதியோர்களுடன் கலந்துரையாடிய பின்னர் கலை நிகழ்வுகளையும் நடத்தி அவர்களுக்கு மகிழ்வூட்டினார்கள்" [illegible] கைதடி அரச முதியோர் இல்ல[illegible] கர் த.கிருபாகரன் தெரிவித்தார். (வ-17)

## பொதுக் கூட்டம்

சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை பி.ப.3 மணிக்கு சங்கானை கே.ரி.பிளாசா கட்டடத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.
சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்க தலைவர் ஆ.குணசேகரம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

## கந்தையா அன்னலிங்கம்

**( ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, திருகோணமலை - 1986 முன்னாள் பொருளாளர், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்)**



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், தாவடிச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அன்னலிங்கம் (06.06.2017) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்வராசம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் ஜெயாகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்), யயாழினி (சுவிஸ்), யயந்தினி (தபாலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும் சுதாஜினி, சத்தியேந்திரராஜா (சுவிஸ்), உமாச்சந்திரன் (அதிபர், சரவணை சின்னமடு றோ.க.பாடசாலை) ஆகியோரின் மாமனும் சிவபாக்கியம், வரதராஜலிங்கம், ஜெயமலர் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தம்பிநாதன், சண்முகராஜா, மகேஸ்வரி, ரதி ஆகியோரின் மைத்துனரும் சிவசாத், நிதுஷாஜினி, அபிநயன், கிருஸ்ணவி, நிதுலன், வைஸ்ணவி, சேயோன், றபிகரன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2017) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நந்தாவில் ஒழுங்கை,**
**தாவடி கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**அ. ஜெயாகரன் (மகன்) 077 610 0049**

## வாக்காளர் பதிவை வலியுறுத்தி பூநகரியில் விழிப்புணர்வுப் பேரணி

கிளிநொச்சி,ஜூன் 7

வாக்காளர் பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வுப் பேரணி கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.சி அமல்ராஜின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணி வாடியடிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி பிரதேச செயலக மாநாட்டு மண்டபம்வரை இடம்பெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் , பூநகரிப் பிரதேச செயலர் சி.ச கிருஸ்ணேந்திரன், கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கண்டாவளைப் பிரதேச செயலர் த.முகுந்தன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் ப.ஜெயராணி ஆகியோர் கலந்து சிறப்பித்த னர். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல கிராம சேவை உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.





இந்த நிகழ்வில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் மேற்பிரிவு, இடைநிலைப்பிரிவு, கீழ்ப்பிரிவு களில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், தேர்தல்கள் தொடர்பான வினாடிவினாப் போட்டியும் இடம்பெற்றது. (ஐ)

## மரண அறிவித்தல்கள்

## ஜெகசோதி பாலச்சந்திரன்



**தாய்மடியில் - 23.07.1955**
**சிவனடியில் - 01.06.2017**

யாழ். சரசாலை தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு சரவணையை தற்காலிக வசிப்பிடமாகவும் ஜேர்மனியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகசோதி பாலச்சந்திரன் அவர்கள் கடந்த 01.06.2017 வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகசோதி-சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமகனும் திரு.திருமதி Rechler தம்பதிகளின் அன்பு மருமகனும் பீற்றாவின் அன்புக் கணவரும் கிரிசான், காய், அனுஷா ஆகியோரின் பாசமிகு தந்தை யும் இராமச்சந்திரன், ஞானச்சந்திரன் (கனடா), சந்திரபவானி, கலாஜோதி (ஜேர்மனி), திருமகள், ஞான சூரியன் (ஜேர்மனி), கலைச்செல்வி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருட்செல்வி (கனடா), சரவணபவன், பரமேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், பத்மாதேவி (ஜேர்மனி), நடராஜா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிரிஷா, கீர்த்தி, கீர்த்தனா, யோகசிவா, ஜோன், கீறா (கனடா), கௌதம், பிரவின் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் Gul, Lisa, Massima (ஜேர்மனி) வாகீஷன், நிஷானி, ஹம்ஷா, லக்ஷன், சுதீபன்-சசிறேகா, சுவர்ணறேகா (ஜேர்மனி), சுஜீவன்-சுஸாந்தா, சுபித்தா, சுபித்தன் (ஜேர்மனி), ஜானுஷா, நயனன், லவன், நிமலன், கவிஸ்நயன், அக்ஷதன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Emre, Leon, Lias, Levi, Sofia, டக்ஷ்நயன், கயானன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (Bergfriedhof, 74177 Bad Friedrichshall, Germany) ஜேர்மனியில் இன்று 07.06.2017 புதன் கிழமை நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
திருமதி பீற்றா பாலச்சந்திரன்,
Nordstraße 15, 74177
Bad Friedrichshall,
Germany. 0049-713622205
0049-15211504103 (viber)

திரு.ஜெகசோதி இராமச்சந்திரன் (சகோதரன்)
மெய்கண்டான் வீதி,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
(சரவணை கிழக்கு-வேலணை)
0776-559894, 0771-611864, 0756-171474

## 15 வகைத் தானியங்கள் கலந்த சத்துமா

**இலங்கையில் முதன் முதலாக குறிஞ்சாவில் இருந்து மென்பானம் (D-Cola), குறிஞ்சா தேயிலை, கோப்பி யுத்த கால சூழ்நிலையில் தயாரித்த பெருமை**
**BIO TEC International Ltd Thirunelvely Company**
**பெற்று கொண்டுள்ளது.** இந்த கொம்பனி தயாரித்த பொருள்களுக்குக்கீழ் கண்ட விருதுகள் பெற்று கௌரவிக்கப்பட்டது.

Entrepreneur of the year 2006 Awarded Trophy at Provincial Level and Merit Award at National Level by Sri Lanka Chambers of Commerce and Industries on 27th Nov 2001 Awarded 2nd Prize All Ceylon Presidential Exhibition at BMICH Colombo 30th Nov. 2006 and 1st Prize at Provincial Level.

**தற்போது 15 வகை தானியங்களையும் சேர்த்து மிகச்சிறந்த சத்துமா தயாரித்து மக்கள் மனதில் நீங்கதாக இடம் பிடித்துள்ளது. நீங்களும் இதை உபயோகப்படுத்தி பயன் பெறுங்கள் இப்பொழுது குறுகிய காலத்தில்**
**07.06.2017 முதல்**


**கிடைக்கக்கூடிய இடம் - யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபம்.**
**இல.161, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**
**நிரந்தரமாக கிடைக்கக்கூடிய இடம்**

**BIO - TECH International Ltd**
**131/2, Palaly Road, Thirunelvely Jaffna.**
**T.P : 021 459 0907, 021 222 0156**
**Mobile - 077 7048 181**

**விநியோகஸ்தர் - அம்பிகைபாகன் மல்ரி சொப்**
**பண்டத்தரிப்பு வீதி, தெல்லிப்பழை.**
**077 0059 741, 071 3080 947**
**(சந்தைப்படுத்த விரும்பிய விநியோகஸ்தர்கள் தயவு செய்து கொம்பனியுடன் தொடர்பு கொள்ளவும்)**

## அப்புக்குட்டி சுப்பிரமணியம்

*[முன்னாள் தலைவர் - செம்மாந்தோட்ட ஞானவைரவர் ஆலயம்]*



கோண்டாவில், புகையிரத நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி சுப்பிரமணியம் நேற்று (06.06.2017) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி பத்தினி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் நல்லையா, தற்குருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேந்திரன், ஞானேந்திரன், தவேந்திரன், யோகேந்திரன், குகன், ஞானசேகரன், கோகிலவதனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்), விஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்வராசா மற்றும் கணேசு அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2017) புதன் கிழமை கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 763 4453**

**தகவல்: குடும்பத்தினர்**
**(மகன்) விஜேந்திரன்**

## சைவ வித்தியா விருத்திச்சங்கம் பதவி வெற்றிடம்

**1. முகாமைத்துவ உதவியாளர் (தரம் 2) - பெண்**

*க.பொ.த சாதாரண சா/தர அல்லது உயர்தர கல்வித் தகைமை கணினியில் தேர்ச்சியுடைவராக இருத்தல் சிறப்புத் தகைமையாகும்.
*வயதெல்லை 25 - 50
*ஊதியத்திட்டம் ரூபா 11, 080 - 9 X 250 + 12 X 310 - 17,050/=

**2. விடுதிக்காப்பாளர் ( ஆண், பெண்)**

**தகைமை**

*க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித்தகைமை.
*விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம். உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
*விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும் சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
*வயதெல்லை 25 - 50
*ஊதியத்திட்டம்: ரூபா 9, 240 - 6 X 250 + 15 X 280 - 14, 940/=

**3. சமையலாளர்**

*அனுபவம் வாய்ந்த பெண் சமையலாளர் தேவை. இல்லத்தில் தங்கியிருப்பது விரும்பத்தக்கது.
*வயதெல்லை: 25 - 55 வரை ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 22.06.2017 இற்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச்சங்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச்சங்கம்**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

**தி. செல்வமனோகரன்**
**செயலாளர்**

### CAR விற்பனைக்கு

16 Nissan Sunny Car KA... தொடர் இலக்கத்தினை உடைய Car விற்பனைக்கு உண்டு.

**077 844 5876** (AJA CS 4752) (14)

### வீடு வாடகைக்கு

சகலவசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. மாத அடிப்படையில் கொடுக்கப்படும். ஜேமன் செப்பேட் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு.

**077 790 6224** (AJA CS 4752) (14)

### விற்பனைக்கு

மருந்து விசிறப்படாத பப்பாசிப்பழங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

BHARATHY.COM
Kopay Road, Urumpirai.
**021 222 5148**

### காணி விற்பனைக்கு

**மானிப்பாய் வீதி ஆறுகால்மடத்தடியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**
**தொடர்பு - 077 9131 128**

### தேவை

**வரகு, சாமி, புளுக்கொடியல் தேவை. மொத்தமாக கொள்வனவு செய்யப்படும்.**
**தொடர்பு - 021 205 2200**
**075 978 9223**

### தேவை

**யாழ்ப்பாணத்தை அண்டிய பிரதேசத்தில் புதிதாக திறக்கப்பட்ட பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு சகலவிதமான உணவு வகைகளும் சமைக்கத் தெரிந்த குக் மூன்று பேர் மற்றும் உதவியாளர் தேவை. ஒப்பந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.**
**தொடர்பு - 077 641 2595**

## குழந்தையின்மை, ஆண்மைக்குறைவிற்கு நிரந்தர தீர்வு



உயிரணுக்கள் உற்பத்தியில் சாதனை

எங்களது மருந்தை ஒரு சில நாட்கள் மட்டும் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் செயற்கையாக இல்லாமல் இயற்கையாகவே குழந்தை பாக்கியம் பெறலாம். திருமணத்திற்கு தயாராகும் வாலிபர்கள் மற்றும் முதியவர்கள் எங்களது சிகிச்சையின் பலனை முதல் மாதத்திலேயே முழுமையாகப் பெற்று இல்லறவாழ்வை இனிமையாக ஆரம்பிக்கலாம்

பாரம்பரிய சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்கள்

செல்: 0091 9842457673, 0091 9600336009
இலங்கை செல்: 075 4154364

வைத்திய கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**
இராமாபுரம், சென்னை-89, இந்தியா
Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி பிரபல பாடசாலையின்

# மைதான நுழைவாயில் சீனக் கலாசாரத்துடன்

## விரைவில் மாற்றி அமைக்கப்படும் எனப் பாடசாலை அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 7
கிளிநொச்சியில் உள்ள பிரபல பாடசாலை மைதானத்தின் நுழைவாயில் விரைவில் தமிழ்க் கலாசாரப்படி மாற்றம் செய்யப்படும் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

பாடசாலையின் விளையாட்டு மைதான நுழைவாயில் அமைப்பு தமிழ்க் கலாசார முறைப்படி அமைக்கப்படாது சீன கலாசாரத்தைப் பிரதிபலிக்கிள்றது என்று பல தரப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

நுழைவாயிலின் அமைப்புத் தொடர்பாகக் கேட்டபோது, "நுழைவாயில் அமைப்பு சீனக் கட்டடக் கலையை ஒத்திருக்கின்றது. சீன கட்டடக் கலை பௌத்தத்துக்கு நெருக்கமான கட்டடக் கலை. பொது இடங்களில் கட்டங்களை அமைக்கும்போது தமிழ் பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அவற்றை அமைப்பது சிறந்தது". என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த துறைசார்ந்த பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த நுழைவாயில் அமைப்பதற்கான உள்ளீடுகள் பாடசாலைச் சமூகத்தால் வழங்கப்பட்டன என்றும், இராணுவத்தினரின் இலவச மனித வலுவைப் பயன்படுத்தி அது அமைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டதோடு, இராணுவத்தினர் தமது விருப்பத்துக்கு அமைய நுழைவாயிலை அமைத்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. இலவச மனித வலுவைப் பயன்படுத்துவது தவறல்ல என்றபோதிலும், கட்டட அமைப்பு வடிவத்தை தீர்மானிப்பது பாடசாலைச் சமூகமாகவே இருந்திருக்க வேண்டும் என்று பிராந்திய கல்விச் சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பாடசாலையின் அதிபர், இந்த நுழைவாயில் மிக விரைவில் தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார். (ற-6-35)




காரைநகர் பிரதேச செயலகத்தால் வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்று பனை சார் உற்பத்திப் பொருள்கள் செய்யும் பயிற்சிநெறி நடத்தப்பட்டது. கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பயிற்சி நெறி ஏற்பாடு செய்யப்பட்டது. (ற)

# இளைய வளர்ப்பு வாழை செய்கை குடாவில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இளைய வளர்ப்பு வாழைகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தில் 2016ஆம் ஆண்டு இளைய வளர்ப்பு வாழைக் குட்டிகள் விவசாயிகளுக்கு ஐம்பது சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டன. உரும்பிராய், உடுவில், புத்தூர், தொல்புரம், சண்டிலிப்பாய், வேலணை, புங்குடுதீவு ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளைச் சேர்ந்த 29 செய்கையாளர்களுக்கு 6 ஆயிரத்து 227 வாழைக் குட்டிகள் வழங்கப்பட்டன. தற்போது அவை நல்ல நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டும் இவ்வாறான வாழைக் குட்டிகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-17)

## முதியோர் இல்லத்தில் முதியவர்கள் இணைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். குடாநாட்டில் சமுக பாதுகாப்பற்ற நிலையில் வீதிகளில் தங்கியிருந்த மூன்று வயோதிபர்கள் நேற்றுக் காலை கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் (வயது 72) என்ற முதியவர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் இணுவில் பகுதியில் நடமாடியுள்ளார்.

பெரியமாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்துறை இராசையா (வயது 75) என்பவர் சாவகச்சேரி நகரில் எவரது துணையும் இன்றி நடமாடித் திரிந்தார்.

இவர்கள் இருவரும் அந்தப் பகுதி பொது மக்கள் உதவியுடன் அரச முதி யோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

உடுவில் தெற்கைச் சேர்ந்த மற்றைய வயோதிபரான சதாசிவம் சின்னராசா (வயது 83) என்பவர் யாரது துணையும் இன்றி தனிமையில் வாழ்ந்து வந்தார். அவரது மனைவி அன்மையில் உயிரிழந்ததை அடுத்து நோய்வாய்ப்பட்ட நிலையில் அவர் பராமரிக்க வசதிகள் அற்ற நிலையில் இருந்தார்.

இவ்வாறு சமுகப் பாதுகாப்பு இன்றி பெரும் துயர்களுக்கு மத்தியில் இருந்த இந்த மூன்று முதியவர்களும் அரச முதியோர் இல்லத்தில் வைத்து பராமரிப்பதற்காக இணைக்கப்பட்டுள்ளனர் என்று இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் தெரிவித்தார். (ற-17)

## 10 கிலோ கஞ்சாவோடு ஒருவர் சித்தன்கேணியில் சிக்கினார்

யாழ்ப்பாணம் சித்தன்கேணியில் 10 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்றும், அதைக் கைமாற்றம் செய்ய முற்பட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சித்தன்கேணி வைத்தியசாலைக்கு அண்மையில் முச்சக்கர வண்டியுடன் அந்த நபர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 28 வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து 10 கிலோ 156 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது என்றும் தெரிவித்த பொலிஸார், கஞ்சா யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படவிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஒருவர் தப்பியோடிய நிலையில் முச்சக்கர வண்டி மற்றும் கஞ்சாப் பொதியுடன் வந்தவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-106)



# தீ விபத்தில் கடை நாசம்

வவுனியா, ஜூன் 7
வவுனியாவில் பிரபல்யமான கணனி விற்பனை நிலையம் மற்றும் கணினி திருத்தும் நிலையம் என்பன நேற்று பிற்பகல் எரிந்து நாசமாகின. மின் கசிவே தீ விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிற்பகல் 1.30 மணியளவில் வியாபார நிலையம் தீ பிடித்து எரிந்துள்ளது. நகர சபையின் தீ அணைக்கும் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது. தீ அணைக்கும் பிரிவினர் உடனடியாக களத்தில் இறங்கி மேலும் தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். வியாபார நிலையத்திலிருந்த பொருட்கள் முற்றாக எரிந்து நாசமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-21)



உடுப்பிட்டி மற்றும் நல்லூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதி சபாநாயகருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 15ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நினைவு கூரப்பட்டது. நெல்லியடி மையப் பேருந்து நிலையத்தில் உள்ள அன்னாரின் திரு உருவ சிலைக்கு வடமாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் மலர்மாலை அணிவித்தார். வட மாகாணசபை உறுப்பினர்களான வே. சிவயோகன், கே. தர்மலிங்கம் கரவெட்டி பிரதேசசபை முன்னாள் தவிசாளர் பொ. வியாகேசு ஆகியோர் கலந்து கொண்டனர். (ற - 173)

# பனை வெல்ல உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். குடாநாட்டில் பனை வெல்ல உற்பத்தி இந்த முறை போகத்தின் போது அதிரிக்கப்படவுள்து. பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் இந்த பனை வெல்ல உற்பத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த போகத்தின் போது உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்துக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது. இந்த போகத்தின் போது கூடுதலான பனம் வெல்லத்தை உற்பத்தி செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.

அதேவேளை, குடாநாட்டின் உற்பத்தி செய்யப்படும் பனம் வெல்லம் கூடுதலாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டார் ரியாலை மாற்ற தடை விதிக்கவில்லை

## மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

"கட்டாரிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளின் கட்டார் ரியாலை, இலங்கை பணத்திற்கு மாற்ற வேண்டாம் என ஏனைய வங்கிகளுக்கு எவ்வித அறிவிப்பும் விடுக்கவில்லை" என மத்திய வங்கி தெரிவித்தது.

கட்டார் றியாலை கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளில் நேற்று மாற்ற மறுக்கப்பட்டுள்ளது. அதனால் பயணிகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்தாக சர்சைகள் கிளம்பின. இந்தச் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை. கட்டார் ரியாலை இலங்கை பணத்துக்கு மாற்றவேண்டாம் என அறிவிக்கவில்லை என மத்திய வங்கி தெரிவித்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அயலுறவுத் துறை அமைச்சர் ரவிகருணாநாயக்க கட்டாரில் ஏற்பட்டுள்ள பன்னாட்டு நெருக்கடி இலங்கைக்கு எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று தெரிவித்தார்.

கட்டார் இஸ்லாமிய தீவிர வாதத்திற்கு ஆதரவளிப்பதாக கூறி சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், எகிப்து மற்றும் பக்ரேய்ன் உள்ளிட்ட நாடுகள் காட்டருடனான சகல தொடர்புகளையும் நிறுத்திக்கொள்வதாக அறிவித்ததையடுத்தே அசாதாரண சூழ்நிலை இலங்கையில் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற -10)

## வறட்சியை அடுத்து சொட்டு நீர்ப் பாசனம்

தற்போது கடும் வறட்சியான காலநிலை காணப்படுவதால் விவசாயிகள் சொட்டு நீர் மூலமாக பயிர்களுக்கு நீர் பாய்ச்சுகின்றனர்.

வலி. கிழக்கு பிரதேசத்தில் அனேகமான இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெங்காயச் செய்கைக்கு விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் நீரை இறைத்து வருகின்றனர்.

நீர்வேலி, கோப்பாய், ஊரெழு, உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் விவசாயிகள் தோட்டங்களில் இந்த சொட்டு நீர்ப் பாசனம் மூலம் பயிர்களுக்கு நீரை பாய்ச்சி வருகின்றன.

சொட்டு நீர்ப்பாசனம் ஊடாக பயிர்கள் கூடுதலாக குளிர்ச்சியடையும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ற -17)

# ஜப்பான் அரசின் உதவியுடன் இலங்கையில் பல திட்டங்கள்

## ஜப்பானிய தூதர் கெனிச்சி சுகனுமா தெரிவிப்பு

மன்னார், ஜூன் 7

ஜப்பான் அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் மிக நெருங்கிய நட்புறவு காணப்படுகின்றது. ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் இலங்கையில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு அங்கமாகவே மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள மன்பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்பப் பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இவ்வாறு இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் கெனிச்சி சுகனுமா தெரிவித்தார்.

பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்பப் பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடம் நேற்று செவ்வாய்க்கிழமை வைபவரீதியாகத் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மிகவும் அழகான முறையில் அமைக்கப்பட்ட குறித்த பாடசாலையின் கட்டடத் திறப்பு விழாவில் நான் கலந்து கொள்வதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தக் கட்டடத்தை யூ.என். ஹபிட்டட் நிறுவனம் மிகவும் சிறப்பான முறையில் கட்டி முடித்துள்ளது.



இலங்கை நாட்டின் கட்டமைப்பு கடந்த காலங்களில் பெரியளவில் அழிவடைந்து காணப்பட்டது. தற்போது இலங்கை பெரும் வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது. மாணவர்களாகிய நீங்கள் நாட்டுக்கு கிடைக்கின்ற உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி உங்கள் வாழ்க்கையை வெற்றிகரமானதாக மாற்றி முன்னேற வேண்டும்.

இலங்கையின் எதிர்காலம் சிறுவர்களின் கைகளிலே தங்கியுள்ளது என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். சிறுவர்களாகிய உங்களுக்கு கல்வி மிகவும் அவசியமானது. இலவசக் கல்வியை நல்ல முறையில் கற்று உங்கள் வாழ்க்கையை முன்னெற்றப் பாதைக்கு இட்டுச் செல்வீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ற - 56)

# ஜப்பானின் நிதி உதவியுடன் பாடசாலைக்கு புதிய கட்டடம்

மன்னார், ஜூன் 7

ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டம் மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்பப் பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடம் நேற்று திறக்கப்பட்டது. இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் கெனிச்சி சுகனுமா கட்டடத்தை வைபவ ரீதியாகத் திறந்தார்.



ஐ.நா. வதிவிட நிறுவனத்தின் நடைமுறைப்படுத்தலின் கீழ், 'மன்னார் மாவட்டத்தில் கற்றல் சூழ்நிலையை மேம்படுத்தும் சமூக இயக்கத்தின் ஊடாக நிலைத்து நிற்கக்கூடிய மீள் குடியமர்தல்' எனும் திட்டத்தினூடாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்ற குறித்த திறப்பு விழாவில் ஜப்பானியத் தூதர் கெனிச்சி சுகனுமா, தூதரின் பாரியார் அகிகோ சுகனுமா, ஜப்பானியத்தூதரகத்தின் செயலாளர் சுகுரு இரியமா,ஐ.நா. வதிவிடத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஜனக தல்பஹிவா, மடுவலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. மாலினி மடு பிரதேசச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற - 56)






# பனம் கைப்பணி பயிற்சி கொடுப்பனவு வழங்கல்

அனுராதபுரம், ஜூன் 7

பனம் கைப்பணிப் பயிற்சிக்கான கொடுப்பனவுகள் அனுராதபுரம் மாவட்டத்தில் குமுதுபுர கிராமத்தில் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.

குமுதுபுர பயிற்சி நிலைய போதனாசிரியர் திருமதி ச.சானி பெரேரா தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் 28 பயனாளிகளுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதப் படி வழங்கப்பட்டது.



நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் பா.சுதா கரனும், விருந்தினர்களாக பயிற்சிநெறிக்கு பொறுப்பான விரிவாக்கல் முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணன், அந்தப் பகுதியின் கிராம அலுவலர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறப்புப் பயிற்சிகளைப் பெற்ற கடற்படையினர் கௌரவிப்பு

கொழும்பு, ஜூன் 7
அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவினால் வழங்கப்பட்ட சிறப்புப் பயிற்சிகளை நிறைவு செய்த இலங்கைக் கடற்படையினர் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
திருகோணமலை டொக்யார்ட் தளத்தில் பயிற்சிகளை நிறைவு செய்த கடற்படையினருக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
இலங்கைக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, அமெரிக்க சிறப்புப் படைகளின் நடவடிக்கைப் பிரிவின் தலைமை ஸ்ராவ் சார்ஜன்ட் பிலிப் ஆகியோர் கலந்து கொண்டு கடற்படையினருக்குச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர். கடந்தஏப்ரல்மாதம் 24ஆம் திகதி தொடக்கம், ஜூன் மாதம் 2ஆம் திகதி வரை கடற்படையினருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கூட்டு ஒருங்கிணைந்த பரிவர்த்தனைப் பயிற்சித் திட்டத்தின்கீழ், பலன்ஸ்ஸ்ரைல் 2017/1 என்ற பெயரில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இலங்கைக் கடற்படையின் 4 ஆவது அதிவேகத் தாக்குதல் படையணியைச் சேர்ந்த 12 கடற்படையினரும், சிறப்பு படகுப் படையணியைச் சேர்ந்த 24 கடற்படையினரும் இந்தப் பயிற்சிகளைப் பெற்றனர். (ஐ - 10)

# ஞானசார தேரரை கைது செய்ய பிக்குகள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 7
பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்வதை விடுத்து, வெளிநாடுகளில் இருந்து நிதியைப் பெற்று, உள்நாட்டில் இனவாதத்தைத் தூண்டிவருகின்ற அமைச்சர்களைக் கைது செய்யுங்கள். இவ்வாறு பிக்குகள் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.
ஞானசார தேரரைக் கைது செய்யுமாறு முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும், அமைச்சர்களும் அண்மையில் கொழும்பில் கூடிக் கலந்துரையாடியதோடு, அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சரிடம் கோரிக்கையும் முன்வைத்திருந்தனர்.
முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டிவரும் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள ஞானசார தேரரைக் கைது செய்வதற்குப் பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும், இது வரை அவர் கைது செய்யப்படவில்லை. இந்த நிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் உலபனே சுமங்கள தேரர், சியாம் மா பீடத்தின் அஸ்கிரிய தரப்பின் சங்க செயற்குழு உறுப்பினர் கலாநிதி மெதகம தம்மானந்த தேரர், பௌத்த ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் ஹேகொட விபஸ்ஸ தேரர் உள்ளிட்ட முக்கிய தேரர்கள், ஞானசார தேரருக்கு எதிராக மட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.
ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவரான உலபனே சுமங்கள தேரர், “ஞானசார தேரரைக் கைது செய்யுமாறு அமைச்சர்கள் சிலர் அரசிடம் வலியுறுத்தியுள்ளனர். ஞானசாரதேரருக்கு எதிராக மட்டும் சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சிலர் கூறுவார்களேயானால், அதனை நாம் எதிர்க்கின்றோம். அனைவருக்கும் சட்டத்தைச் சமமாக நடைமுறைப்படுத்துமாறு 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதியிலிருந்து வலியுறுத்தி வருகின்றோம். சிலர் வில்பத்து வனப்பகுதியை அழித்தால் அவர்களுக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தாஜுதீன் படுகொலை விவகாரம், முறைகேடான முறையில் சொத்துச் சேர்த்து அதனைப் பெற்ற முறையை வெளியிட முடியாமலிருக்கும் அரசியல்வாதிகள் ஆகிய விடயங்களிலும் சட்டம் கடமையைச் செய்ய வேண்டும். ஆனால், பலர் மீது பலவிதமான வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்தே நாங்கள் பேசுகின்றோம். தொல்பொருள் சட்டமொன்று உள்ளது. இந்த நாட்டில் தொல்பொருள் காணியில் வலுக்கட்டாயமாக ஒருவர் குடியமர்ந்தால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ், முஸ்லிம் இனங்களுக்கு எதிராக எந்தக் கலவரத்தையும் ஏற்படுத்தும் எண்ணம் எமக்கு இல்லை. இதுகுறித்துப் பேசுகின்ற மற்றைய தரப்பினரைச் சார்ந்த அரசியல்வாதிகளே இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு தமது அரசியலை நடத்துகின்றனர். இப்போது சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்ற இவர்கள் சமூக சமநிலை, நீதி குறித்து எப்போதும் குரல் கொடுக்கவில்லை. அவர்கள் குறுகிய அரசியல் நோக்கத்துடன், இனவாதத்தை வெளிப்படுத்துவதால் அவர்கள் வெளிநாடுகளில் இருந்து நிதியைப் பெறுகின்றனர்” என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினார். (ஐ - 5)

## காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் நிறுவுவதற்கான திருத்தச் சட்ட வரைவு

### நாடாளுமன்றில் ஜூன் 22இல் வாக்கெடுப்பு

கொழும்பு, ஜூன் 7
காணாமற் போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் இன்று எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அன்றைய தினமே வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.
காணாமற் போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டம் நாடாளுமன்றில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன்போது மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த திருத்தம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதனை உள்ளடக்கிய திருத்தச் சட்ட வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றில் இந்தச் சட்டவரைவு இன்று புதன்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.
நாடாளுமன்றில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது, இன்ற புதன்கிழமையும், நாளை வியாழக் கிழமையும், பேரிடர் பாதித்த பகுதிகளை அமைச்சர்கள் சென்று பார்வையிடவுள்ளதால், காணாமற் போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான திருத்தச் சட்டத்தின் மீதான விவாதத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி எடுத்துக் கொள்ளத் தீர்மானித் துள்ளனர். (ஐ -5)



உயர் நீதிமன்றின் நீதிபதி ஈவா வனசுந்தர பதில் கடமை நீதியரசராக நேற்று முற்பகல் பதவியேற்றார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் பதில் கடமைப்புரியும் நீதியரசராக அவர் பதவிப்பிரமாணம் செய்தார். (ஐ - 10)

## அடுத்த மாதம் பங்களாதேஷ் பயணிப்பார் மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 7
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் பங்களாதேஷுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று பங்களாதேஷ் அயலுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.
பங்களாதேஷ் தலைமை அமைச்சர் ஷேக் ஹசீனாவின் அழைப்பின் பேரில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜூலை மாதம் நான்கு நாள்கள் பயணமாக டாக்காவுக்குச் செல்லவுள்ளார்.
ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம், 16ஆம் திகதி வரை அவர் அங்கு தங்கியிருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, 5 இலட்சம் டொலர் நிதியை வியைக் கொடையாக வழங்குவதாகவும் பங்களாதேஷ் அறிவித்துள்ளது. (ஐ - 10)

# படையினருக்கு ஆதரவளிக்க அமெரிக்கா தயார்

## அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7
இலங்கைப் படையினருக்கு, ஆதரவையும், தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதற்கு அமெரிக்கா தயார் நிலையில் உள்ளது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்தார்.
இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவுக்கும், அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புக்கும் இடையில் சிறப்புக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இடர்களின் போது முப்படைகளின் கடப்பாடு மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான முயற்சியில் முப்படைகளின் பங்களிப்பு தொடர்பாக அமெரிக்கத் தூதுவருக்கு, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விளக்கமளித்தார்.
பாதிக்கப்பட்ட பகுதிகளை இரவில் சென்றடைவதற்கான கருவிகள், மற்றும் தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.
இலங்கைப் படையினருக்கு இடர் மீட்பு ப்பணிகளுக்குத் தேவையான கருவிகள், தொழில்நுட்பங்கள் மற்றும் நிபுணத்துவ ஆற்றலை அமெரிக்கா வழங்கும் என்று அமெரிக்கத் தூதுவர் உறுதியளித்தார்.
இந்தப் பேச்சுக்களின்போது அமெரிக்கத் தூதரக துணைப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக்கப் இங்கிலிஸ் மற்றும் இலங்கை முப்படைகளின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ -10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தார்மீகப் பொறுப்பேற்பதே தர்மத்தின் வழியாகும்

வடக்கு மாகாண சபை அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் மற்றும் த.குருகுலராசா இருவரும் பதவி விலக வேண்டும் என்று ஊழல், மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய முதலமைச்சர் நியமித்த குழு பரிந்துரைத்த விடயம் தற்போது பெரிதும் பேசுபொருளாகியுள்ளது. அந்தப் பரிந்துரையை அடுத்தும், அமைச்சர்கள் இருவரும் தமது பதவியில் இருந்து தாமாகவே விலகிச் செல்வதற்குத் தயாராக இல்லை என்பது இந்த விவாதத்தை இன்னும் சூடாக்கியுள்ளது.

இதனால், முதலமைச்சர் அவர்கள் இருவரையும் பதவி நீக்கித் தனது நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவாரா என்கிற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியே கசிந்ததை அடுத்து, அது ஓர் அரசியல் சார்புக் குழு என்று அதன் நியாய வலுவைத் தரமிறக்கும் வகையிலான கருத்துக்கள் அமைச்சர்கள் தரப்பிலிருந்து கூறப்பட்டு வருகிறது. இது மிகவும் கவலைக்குரியது. அவ்வாறான அதிருப்தி இருந்திருக்குமாயின் விசாரணைக்கு முன்னரே அவர்கள் அதனை வெளிப்படுத்தியிருக்கவேண்டும். அதைவிடுத்து அறிக்கையும் வெளியான பின்னர் விசாரணைக் குழுவில் குறைசொல்வதும் பிழை பிடிப்பதும் ஏற்புடையது அல்ல.

விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றுக்குப் பதிலளிப்பதற்கு அமைச்சர்களுக்கு அவகாசம் வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்திருக்கிறார். ஆனால், அமைச்சர்கள் பதிலளிப்பதற்கான போதிய அவகாசத்தையும் வாய்ப்பையும் விசாரணைக்குழு வழங்கியே இருந்தது.

அந்தக் குழுவின் முன்பாக, நீதிபதிகளின் முன்பாகத் தமது எதிர் வாதத்தை வைத்து தம்மை நியாயப்படுத்த முடியாத அமைச்சர்கள் மக்கள் முன்பாக நியாய வாதம் வைப்பது என்பது ஏற்புடையதல்ல. அது மக்களை ஏமாற்றும் செயல்.

தம்மைக் குற்றவாளிகள் என்று விசாரணைக் குழு ஒன்று அறிவித்த பின்னர் அதனை ஏற்றுக்கொண்டு பதவியிலிருந்து விலகிக்கொள்வதே பொறுப்பான அமைச்சர்கள் செய்யக்கூடிய பொறுப்பான செயல். அவர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகக் கருதினால் அது குறித்து மேன்முறையீடு செய்யலாம் அல்லது மற்றொரு நீதி விசாரணைக் குழுவை நியமிக்கும்படி கோரலாம். ஆனால், அறிக்கை தயாரிக்கப்படும் வரை விசாரணைக் குழுவை ஏற்றுக்கொண்டிருந்துவிட்டு அறிக்கை தமக்குச் சாதமற்றதாக வந்ததும் விசாரணைக் குழுவைத் தூற்றுவது ஏற்புடையதல்ல.

அவர்கள் அப்படிச் செய்வது வடக்கு மாகாண முதல மைச்சருக்கும் கடும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். தான் நியமித்த அமைச்சர்களைத் தானே பதவி நீக்கம் செய்யும் நிலை ஏற்படுவதை அவர் விரும்பமாட்டார். அது மிகமோசமான ஓர் அரசியல் நிலைப்பாடாக அமைந்துவிடும்.

தான் நியமித்த விசாரணைக் குழு அமைச்சர்கள் இருவரைக் குற்றவாளிகளாகக் கண்டு அவர்கள் பதவி விலகவேண்டும் என்று பரிந்துரைத்த பின்னர் அவர்களைப் பதவியில் நீடிக்க அனுமதிப்பது முதலமைச்சரின் நிர்வாக நேர்த்தியைக் கேள்விக்குறியாக்கிவிடும்.

அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக மாகாண சபையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது ''அவர், பனங்காட்டு நரி, சலசலப்புகளுக்கு அஞ்சமாட்டார்'' என்று பொது இடத்தில் உரையாற்றி அவரைக் காபந்து பண்ணியவர் முதலமைச்சர். அந்தளவுக்கு அவர் நம்பிக்கை வைத்திருந்த ஒருவரை, அவர் நியமித்திருக்கும் குழுவே குற்றவாளி என்று கண்டறிந்த பின்னும் அவரைத் தொடர்ந்தும் பதவியில் நீடிக்க அனுமதிப்பது முதலமைச்சரின் நம்பகத்தன்மையையே கேள்விக்குறியாக்கிவிடும்.

இதற்குத் தீர்வாக, அமைச்சரவையையே முற்றுமுழுதாக மாற்றியமைக்குமாறு ரெலோ அமைப்பின் செயலாளர் சிறிகாந்தா கேட்டிருக்கிறார். இப்போது அப்படி முழுதாக மாற்றியமைப்பதும் நியாயமானது அல்ல. அப் படி நடந்தால் குற்றவாளியோடு சேர்ந்து நிரபராதியும் தண்டிக்கப்படுவதுதான் நீதி என்றாகிவிடும். இப்படிப்பட்ட சிக்கல்கள் எல்லாவற்றையும் தவிர்க்க அமைச்சர்கள் இருவரும் அறிக்கையின் கண்டடைவுகளுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகுவதே நல்லது. அதன் பின்னர் அவர்கள் தமக்கான நியாயத்தைத் தேடி மு[illegible]மையாகப் போராடலாம்.

# செய்மதித் தொழில்நுட்ப அமைப்பில் இலங்கை இணையாததே இயற்கை இடர்ப் பாதிப்பு உயர்வடையக் காரணம்

## இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு



தமிழில் -வி.எஸ்.ரீ

எமது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நாம் இதுவரை நவீன செய்மதித் தொழில்நுட்ப அமைப்பில் இணைந்து செயற்படத் தயாராகவில்லை. சிங்கப்பூர் சிறிய நாடாயினும் அது சிறப்பான நகரத் திட்டமிடல் முறையைக் கொண்டுள்ளது. நாமும் நவீன நடைமுறையில் இணைந்து கொண்டால் , இத்தகைய இயற்கை இடர்களால் கடும் பாதிப்புக்கு முகம் கொடுக்க நேராது என இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா அண்மைய நாட்டின் இயற்கை இடர் குறித்து சிங்கள அச்சு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது கருத்து வெளியிட்டிருந்தார். குறித்த நேர்காணலின் விவரம் கீழே தரப்படுகிறது.

**கேள்வி:** அடுத்தடுத்து இரு இடர்களை நாடு சந்திக்க நேர்ந்துள்ளமை குறித்து என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** உண்மைதான். இந்த முறை மழைக்கால ஆரம்பத்துடன் கடும் மழை காரணமாக மண் சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகாலம் இத்தகைய [illegible] இன்று இவ்விதம் ஏற்பட்டு வருகிறது. இத்தகைய சிக்கல்களுக்கு முகம் கொடுக்க எமது மக்களை எவ்விதம் தயார்ப்படுத்துவது என்பது குறித்து நாம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்.

**கே:** 1953 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாடு சந்தித்த கடும் வெள்ள இடர் இது. இடர் முகாமைத்துவ அமைச்சர் என்ற ரீதியில் இது குறித்து என்ன கருதுகிறீர்கள்?

**ப:** உண்மையில் பாரதூரமானதுதான். மக்களது உயிர்களுக்கு மட்டுமல்லாது சொத்துக்கள், குடியிருப்புக்களுக்கும் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

**கே:** மீரியபத்த, மீதோட்டமுல்ல இடர்களையடுத்து தற்போது இந்த வெள்ள இடர் உண்மையில் நாட்டுக்குத் தற்போது கெட்டவேளையா?

### சுற்றுச்சூழல் சுகாதாரம் பேணப்படாமையே இயற்கை இடர் பாதிப்புக்குக் காரணம்

**ப:** இன்று முழு உலகத்துக்கும் கெட்ட வேளையே. மனிதர்களது செயற்பாடுகள் காரணமாக இந்தப் பூமியின் இயங்குநிலை வழமையிலிருந்து மாறுபட்டு இயற்கை இடர்கள் உலகின் பல பகுதிகளில் இடம்பெறுகின்றன. அந்தவகையில் எமது நாட்டின் சுற்றுச்சூழல் பாதிப்பு இத்தகைய இடர்கள் ஏற்பட முக்கிய காரணமாகின்

**கே:** பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த நாட்டில் நகர நிர்மாணத்தை திட்டமிட்டு மேற்கொள்ள இயலாதிருப்பதற்குக் காரணமென்ன?

**ப:** நாம் இப்போது கூட நவீன செய்மதித் தொழில்நுட்ப நடைமுறையில் எம்மை இணைத்துக் கொள்ளத் தயாராய் இல்லாதிருப்பதே அதற்கான காரணம். சிங்கப்பூர் ஒரு சிறிய நாடாயினும், சிறந்த நகர நிர்மாணத் திட்டங்களை அந்த நாடு மேற்கொள்கிறது. நாமும் அந்த விதத்தில் செயற்படுவோமானால் இத்தகைய பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பிருக்காது.

**கே:** இடர் முகாமைத்துவ அமைச்சு என்ற ரீதியில் இத்தகைய இடர்களின்போது எத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**ப:** இருவித நடைமுறைகள் உள்ளன. இயற்கை இடரொன்று ஏற்படுவதற்கு முன்னர் பாதிப்பிலிருந்து விடுபட முற்கூட்டிய நடவடிக்கையைத் திட்டமிட்டு முன்னெடுப்பது இவற்றில் முதலாவதாகும். மற்றையது, இடரின் பின்னரான செயற்பாடு. இதில் மாவட்டசெயலர், பிரதேச செயலர், மற்றும் கிராமசேவகர்களை ஈடுபடுத்தி திட்டங்களை முன்னெடுக்கிறோம். இடர்முகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துக செயலகமொன்றை உருவாக்குதல், மீட்புப் பணிகளுக்குத் தேவையான உபகாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், இடர் இடம்பெற்ற பகுதிகளின் பௌதீக வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், போன்ற நடவடிக்கைகள் அதன்போது முன்னெடுக்கப்படும்.



### இடரால் பாதிப்புற்றோருக்கு அரசின் உதவிகள்

**கே:** தற்போது நாட்டில் இடம்பெறும் இயற்கை இடரில் சிக்கி உயிரிழப்போர், பாதிப்புற்றோருக்கு, சேதமுற்ற அவர்களது வீடுகளுக்கு அரசு வழங்கிய உதவிநிதி மற்றும் நட்ட ஈடு என்பவை குறித்து…?

**ப:**2015 ஆம் ஆண்டுவரை இயற்கை இடர் காரணமாக உயிரிழந்த ஒருவரது குடும்பத்துக்கு 13 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. பின்னர் நாட்டு மக்கள் அனைவருக்கும் இயற்கை இடருக்கு எதிராக காப்புறுதி செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் இயற்கை இடரில் சிக்கி உயிரிழக்கும் ஒருவரது குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படுகிறது. சொத்துக்கள் இழப்பு, வீடு இழப்பு என்பவற்றுக்கு 25 லட்சம் ரூபா வரை எம்மால் வழங்க இயலும்.

**கே:** இழப்புக்கள் குறித்த மதிப்பீடு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?

**ப:** குறித்த பிரதேசத்தில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. அதனைக் குறித்த பிரதேச மாவட்டச்செயலர் அனுமதித்த பின்னர் நாம் அனுமதிக்கப்பட்ட பணத் தொகையை வழங்குகிறோம்.

**கே:** அண்மைய இயற்கை இடர் குறித்துத் தெரிந்து கொண்டதும் அரச தலைவர் அவுஸ்திரேலியாவிலிருந்து உடனடியாக நாடுதிரும்பினார். ஆனால் நீங்கள் அமெரிக்காவுக்குச் சென்றீர்கள். தங்களைக் களத்தில் காணமுடியவில்லையே?

**ப:** இடர் முகாமைத்துவம் தொடர்பான ஐ.நாவின் மாநாடொன்றில் பங்கேற்பதற்காகவே நான் அமெரிக்கா சென்றிருந்தேன். பன்னாடுகளின் அரசதலைவர்களுக்கான குறித்த மாநாட்டில் கலந்துகொள்ள அரச தலைவரது பணிப்புரையின் பேரிலேயே சென்றிருந்தேன். எமது நாட்டின் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் குறித்து அங்கு விரிவான விளங்கங்களை முன் வைத்திருந்தேன்.

**கே:** இலங்கையில் இடர் முகாமைத்துவம் தொடர்பாக ஏதாவது இணக்கப்பாடோ அல்லது உடன்படிக்கைகளோ அந்த மாநாட்டில் எட்டப்பட்டதா?

**ப:** இடர் முகாமைத்துவம் தொடர்பான பல தரப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் இடம்பெற்றன. இணக்கப்பாடோ அல்லது உடன்படிக்கை எதுவுமோ மேற்கொள்ளப்படவில்லை.

**கே:** நாட்டில் வெள்ள இடர் ஏற்பட்டிருந்த வேளையில், நீங்கள் வெளிநாடுப் பயணமொன்றை மேற்கொண்டதாக எழும் குற்றச்சாட்டு குறித்து…?

**ப:** நான் எனது அமைச்சின் ராஜாங்க அமைச்சரை பதில் அமைச்சராக நியமித்துவிட்டே சென்றிருந்தேன். குறித்த இடர் இடம்பெற்ற வேளையில் நான் இங்கேயே இருந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறேன். இருப்பினும் பயிற்றப்பட்ட இடர்முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர்கள் இடரில் சிக்கிப் பாதிப்புக்கு உட்பட்டோருக்கு உரிய உதவிகளை மேற்கொண்டிருந்தனர்.

**கே:** நீங்கள் என்ன சமாதானம் கூறினாலும், இடர் இடம்பெற்ற முன்னைய சந்தர்ப்பங்களில் அரச இயந்திரம் செயற்பட்ட அளவுக்கு, இந்தமுறை அது சிறப்பாகச் செயற்படவில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறதே?

**ப:**அது முற்றிலும் பொய்யானது. இடர் ஏற்படப்போவது குறித்து எமது அதிகாரிகள் முற்கூட்டியே மக்களை எச்சரித்திருந்தனர். அதைஏற்று குறித்த பிரதேசங்களிலிருந்து வெளியேறியோர் உயிர் தப்பிப் பிழைத்துள்ளனர். அதனை ஏற்றுச் செயற்படாத பலர் உயிரிழக்க நேர்ந்தது. இடர் இடம்பெற்ற பின்னர் முப்படையினர் தரப்பும், இடர் முகாமைத்துவ மத்திய நிலையமும் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவு மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்திருந்தன.

### அரசு உதவுவதற்கு முன்பே பொதுமக்கள் பாதிப்புற்றோருக்கு உதவினரா?

**கே:** உண்மையில் நாட்டின் பொதுமக்கள் அரசின் உதவிகள் வழங்கப்படும்வரை காத்திருக்காது தாமாக முன் வந்து இடரால் பாதிப்புற்றோருக்கு உதவியமை குறித்து…?

**ப:**நான் அதனை ஏற்றுக் கொள்கிறேன். இடரால் பாதிப்புற்ற 78 ஆயிரம் பேர்வரையிலானவர்களுக்கு பொது மக்கள் வழங்கும் உதவிகளால் மூன்று வேளையும் உணவளிக்க இயலாது. இத்தகைய உதவிகளைச் செய்ய முயன்ற தரப்பினர்களில் பலர் தமது தனிப்பட்ட வாய்ப்புக்காக அவ்விதம் செயற்பட்டதாக தகவல்கள் கிட்டியிருந்தன. அரசு இடர் காரணமாக இடம் பெயர்ந்த அனைவருக்கும் மூன்றுவேளை உணவும், நாளொன்றுக்கு ஆளுக்கு மூன்னூறு ரூபா வீதம் பண உதவியும் வழங்கியது.

**கே:** எதிர்வரும் காலங்களில் இத்தகைய இடர் இடம்பெறவுள்ளமை குறித்து தகவல் கிட்டியதும் குறித்த பகுதிகளில் வசிப்போரை வற்புறுத்தி அந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்ற சட்டம் கொண்டுவரப் போவதாக நீங்கள் கூறியிருந்தீர்களே?

**ப:** அத்தகையதொரு சட்ட ஏற்பாட்டின் பேரில் முப்படையினருக்கும் அதிகாரம் வழங்கி பொதுமக்களை வெளியேற்ற ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**கே:** அத்தகைய விதத்தில் வெளியேற்றப்படும பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் வேலைத் திட்டம் அரசிடம் உள்ளதா?

**ப:** நிச்சயமாக இடம்பெயர்வோருக்கு அத்தகைய வசதிகளை வழங்கியாக வேண்டும். தற்போது அத்தகைய சந்தர்ப்பங்களில் இடம்பெயர்வோரை வணக்க ஸ்தலங்களிலும், பாடசாலைகளிலும் தங்க வைத்துப் பராமரிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய தேவைக்கென நாம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் மூன்று இடைத் தங்கல் நிலையங்களை அமைத்து வருகிறோம்.

**கே:** இடம்பெற்ற இடருக்கு நிவாரண உதவியாக வெளிநாடுகள் அனுப்பி வைக்கும் உதவிகள் முன்னைய அரசின் காலத்தில் போன்று இந்த முறையும் அரசின் திறைசேரியை நிரப்பப் பயன்படுத்தப்படுமா?


**ப:** இல்லவே இல்லை. கிடைக்கும் உதவிகள் யாவும் உரிய முறையில் பட்டியலிடப்பட்டு, பேணப்படுகின்றன. விரும்பிய எவரும் அமைச்சுக்கு வந்து அந்த விவரங்களைப் பார்வையிட முடியும்

**கே:** அண்மைய வெள்ள, மண்சரிவு இடர்கள் அரசின் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவும் பயன்படுத்தப்படக்கூடுமா?

**ப:** நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துமொன்றாக, தடையை உருவாக்கும் ஒன்றாகவே இந்த இடரைக் கருத வேண்டும். உண்மையில் வேறு வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதிகளைக் கூட அரசு இத்தகைய இடர்நிவாரணப்பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டி ஏற்படும்.

**கே:** கடைசியாக ஒரு கேள்வி, எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் இடம் பெறுமானால் தேர்தல் குறித்த சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்திட்டங்கள் என்னவாயிருக்கும்?

**ப:** நாம் ஐ.தே.கட்சியுடன் இணைந்து அரசை நடத்திச் சென்றாலும், தேர்தலில் தனித்தனியாகத்தான் போட்டியிடுவோம். ஏன் மாகாணசபைத் தேர்தலிலும் கூட நாம் தனித்தனியாகவே போட்டியிடவுள்ளோம். எனத் தெரிவித்தார்



## கருத்துக்கள்

சண்முகராசா வடிவேலு
வடமாகாண அமைச்சர்களான ஐங்கரநேசன், குருகுலராஜா ஆகியோர் மீதான ஊழல் மற்றும் நிர்வாக மோசடி குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில் அவர்களை பதவி விலகுமாறு முதலமைச்சர் அமைத்த விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது.
#செய்தி
இன்று (05.06.2017) சுற்றாடல் தினமாகும். சூழலுக்கு ஒவ்வாத கேடுகெட்ட கழிவுகளை உரிய முறையில் அகற்றுவோம். தொடர்ந்தும் எஞ்சியுள்ள நச்சுக் கழிவுகளை அகற்றி சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கு உறுதி பூணுவோம்!
#தினம்

மதுரைக்கு வந்த சோதனை!!!
அப்ப பாண்டிய மன்னர் என்ன செய்யப்போறார்?
மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டே "பாலைக்குடிப்பாரா!" மன்னாதி மன்னர்?
மன்னாதி மன்னரின் அரசவையில் உள்ள இன்னொரு பெருமகனின் "தேருக்கான" அனுமதிப்பத்திர மோசடியும் வெளிப்பட்டுள்ளது.
(இந்தப் பேப்பரை வடிவாய் பாருங்கோ)
"மன்னாதி மன்னா" நீவிர் ஆழ்ந்த நித்திரையில் இருந்து முழிக்க வேண்டும்!
#தமிழ்பொடியன்

ஐங்கரநேசன், குருகுலராஜாவை பதவி நீக்கினால் மட்டும் போதாது…. ஊழல், மோசடிகள் மீது சரியாக விசாரித்து உரிய தண்டனை வழங்க வேண்டும். வலிகாமம் பிரதேசத்தில் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்க காரணமான குடிநீரில் கழிவோயில் பிரச்சினையின்போது சுன்னாகம் நொதேர்ன் பவருடனான டீலை அமைச்சர் ஐங்கரநேசன் தெளிவுபடுத்த வேண்டும்
Watercrisisjaffna

கிழிஞ்சது தமிழர் அரசு! வடக்கின் முதலாவது மாகாண சபையும் அதன் முதல் அமைச்சர்களும் என்ற பெருமையோடு இதுவும் சேர்ந்துகொள்ளும்.
முருகையா தமிழ்ச் செல்வன்

இருவரும், முதலமைச்சர் இல்லாதபோது பதில் முதலமைச்சராகக் கடமையாற்றியவர்கள் என்பது இன்னும் சிறப்பு
கே.கே. சந்திரகுமார்.

மாகாண சபைக்கே இந்தப் பாடாய் இருக்கு. தனிநாடு கிடைச்சா நல்லாத்தான் இருக்கும்.
செல்வராஜா டினேசன்.

இவர்கள் மீதான நடவடிக்கை உண்மை எனின் மின்கம்பத் தண்டனை வழங்க வேண்டும்!
சயானா ரமேஸ்

சில வருடங்களுக்கு முன்னர் நான் எனது முகப்பக்கத்தில் எழுதியபோது பெருமளவில் செம்புகள் பலர் வந்து வசைபாடினார்கள். சில செயற்திட்டங்கள் நிறுத்திவைக்கவேண்டி வந்தது.
இப்ப இதற்கு என்ன சொல்லப்போகினம்? உண்மைகள் என்றும் சாவதில்லை. பதிலளித்துத்தான் ஆகவேண்டும்!!!
புலோலியூர் யோகீசன்.

முதல் அமைச்சர் விக்னேஸ்வரன் இந்த அமைச்சர் நீக்கத்தை அனுமதிக்கமாட்டார். இதில் சுரேஷ் இற்கும் முதலமைச்சருக்கும் 'முறுகல்' ஏற்படுமா…?
சிவா முருகுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அதிவேக நெடுஞ்சாலைகளின் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பம்

### அரச வங்கிகளிடம் இருந்து நிதிமூலங்களை பெறத் தீர்மானம்

மத்திய அதிவேக நெடுஞ்சாலைகளின் இரண்டாம் கட்ட நிர்மாணப்பணிகளை முன்னெடுப்பதற்கு தேவையான நிதிமூலமான 23 பில்லியன் ரூபா தொகை மதிப்பீட்டினை இரண்டு அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள அரசு தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையானதாக கருதப்படுகின்ற வெவ்வேறு பகுதிகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பது என்ற எண்ணக்கருவின் அடிப்படையிலே இந்தச் செயற்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறப்படுகிறது.

இதன் பிரகாரம் 23.2 பில்லியன் ரூபாயை தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படவுள்ளதான மேற்படி நிதித்தொகையானது மீரிகம முதல் குருநாகல் வரையான 39.29 கிலோ மீற்றர்கள் தொலைவினைக் கொண்டதான அதிவேக நெடுஞ்சாலைகளின் 2 ஆம் கட்ட பணிகளை முன்னெடுக்கப் பயன்படுத்தப்படவுள்ளமை நோக்கத்தக்கது.

## நுகர்வோர் சட்ட திட்டங்களை மீறுவோர் மீது நடவடிக்கை

### கைது செய்வதற்கு விசேட சோதனைப் பிரிவு ஆரம்பம்

நுகர்வோர் சட்ட திட்டங்களை மீறுவோருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அவர்களைக் கைது செய்வதற்குமாக புதிதாக விசேட சோதனைப் பிரிவொன்றை தற்போது நியமித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி பிரதேச ரீதியாக நிறுவப்பட்டுள்ள சுற்றிவளைப்பு பிரிவுகளுக்கு மேலதிகமாக இந்த விசேட பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிஸ்மத் டீன் தெரிவித்துள்ளார்.

පාරිභෝගික කටයුතු පිළිබඳ අධිකාරිය
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
CONSUMER AFFAIRS AUTHORITY

இத்தகைய பிரிவுகள் ஒவ்வொன்றும் தங்களுக்கென தனியான தொடர்பு இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெ டுப்பதற்கான அதிகார மேற்படி விசேட பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தவிர,நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழாக இந்தப் புதிய பிரிவுகள் இயங்குநிலை பெறவுள்ளமை நோக்கத்தக்கது.

# கடந்த ஆட்சியில் 110 மில்லியன் ரூபா நிதி இழப்பு நட்டமாகப் பதிவாகியுள்ளது




கடந்த ஆட்சியிலேயே அதிக நிதி மூலங்களின் இழப்பு நட்டமாக ஏற்பட்டுள்ளதான தகவல் நிதி அமைச்சகத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 110 மில்லியன் ரூபா நிதி இழப்பானது நட்டமாக பதிவகியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெற்ற போதே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவிர,11 அரச நிறுவ னங்களில் இடம்பெற்றுள்ளதான மோசடிச் செயற்பாடுகளின் காரணமாக ஏற்பட்டுள்ளதான நட்டத்தை ஈடுசெய்ய தொடர்ந்தும் மக்கள் மீதே வரிச் சுமை திணிக்கப்படும் விடயம் தொடர்பிலும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், "110 மில்லியன் ரூபாநட்டம்என்பதுமஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்திலேயே ஏற்பட்டது.

ஆனால் நல்லாட்சி அரசானது மக்கள் மீதாக எந்த வகையான நிதி சார் சுமைகளையும் திணித்துவிடாத வகையிலே ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறோம். அன்று நிதி ஈட்டங்களை வீண் விரையம் செய்து நிதி மூலங்களிடையே பாரிய நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்தவர்களே தற்போது அதிக சத்தங்களையும், கோசங்களையும் எழுப்புகின்றனர்.

இந்த விடயங்களை பத்திரிகைகளிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் காண முடிகின்றது. இவை நேற்று அல்லது நேற்று முன்தினம் இடம்பெற்ற விடயங்கள் அல்ல.

அனைத்துமே மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றவைகளேயாகும்" - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'இ' வணிகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் 'சிம்பிளெக்ஸ்'

வீட்டு வாசல்களுக்கே பொருட்களை கொண்டு வந்து விநியோகிக்கும் இ வணிக சேவை வழங்குநரான 'சிம்பிளெக்ஸ் டிலிவெறி'தனது செயற்பாடுகளை நாடு முழுமைக்குமாக விஸ்தரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி மிகவும் குறுகிய காலப்பகுதியில் வாடிக்கையாளர்களின் பொருள்களை நாட்டின் பின்தங்கிய பகுதிகளுக்கும் துரிதமாக கொண்டு சென்று விநியோகிக்கும் திறனை 'சிம்பிளெக்ஸ் டிலிவெறி'கொண் டுள்ளதாக கூறப்படுகிறது.

முக்கியமாக சிம்பிளெக்ஸ் டிலிவெறி செயற்பாடுகளுக்கு சிங்கப்பூர் மற்றும் இலங்கையை தளமாகக் கொண்ட உள்நாட்டுத் தொழில்நுட்பம் சார் வியாபாரங்களில் முதலீடுகளை மேற்கொள்ளும் வென்ச்சர் கப்பிட்டல் நிறுவனமான பி.ஓ.வி கப்பிட்டல் குறிப்பிடத்தக்களவு முத லீடுகளை மேற்கொண்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

இது குறித்து கருத்துரைத்துள்ள டறஸ் சீறிலங்காவின் சரக்குக் கையாளல் பிரிவின் தலைமை அதிகாரி தர்ஷிக அத்தநாயக்க,

சிம்பிளெக்ஸ் டிலிவெறி என்பது டறஸ் இன் பெறுமதி வாய்ந்த பங்காளராகக் கடந்த இரு ஆண்டு காலமாக செயலாற்றி வந்துள்ளது. இதனூடாக சிறந்த சேவை மற்றும் விநியோகம் போன்றன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாகச் சிறப்பான வளர்ச்சியை இவை பதிவு செய்துள்ளதுடன் மறுநாள் விநியோகச் செயற்பாடுகளை ஒன்லைன் கண்காணிப்பு சேவைகளுடன் வழங்கி வருகிறது.

நிறுவனத்தினால் தொடர்ச்சியான செயன்முறை மேம்படுத்தல்கள் பின்பற்றப்படுகின்றன அத்துடன் உயர் வாடிக்கையாளர் அனுபவ நியமங்களைப் பேணி வருகிறோம்" - என்றார்.




## அரச நிறுவனங்களில் இருந்து அதிக நிதி இழப்பு

### கோப் குழுவின் தலைவர் தெரிவிப்பு



கடந்த 15 மாத காலப்பகுதியில் 11 ஆயிரம் கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை மதிப்பீடுடைய நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதான தகவல் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

லாப நட்டம் தொடர்பான கோப் குழுவின் விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி 2015 மே மாதம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியிலேயே 15 அரச நிறுவனங்களில் இருந்தான அதிக நிதி இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகசதொச, மகநெகும, இலங்கை கிரிக்கெட் மற்றும் தேசிய லொத்தர் சபை போன்றதான நிறுவனங்களும் நட்டமடைந்துள்ள நிறுவனங்களில் அடங்கியுள்ளது. தவிர,சூரியபுர விளையாட்டு மைதானங்களுக்கு உரிமையாளர்கள் இல்லாத நிலைமை காணப்படுவதாகவும் செலுத்தப்பட்டுவருகின்றதான 53 பில்லியன் ரூபாவானது துறைமுக அதிகார சபையாலா அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினாலா செலுப்படுகின்றது என்பதான கேள்வி எழுவதாகவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் காரணமாக 530 கோடி ரூபா தொகை மதிப்பீடுடைய நிதி இழப்பாக ஏற்பட்டுள்ளதாகவும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தற்றதான திட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக 57 ஆயிரம் மில்லியன் ரூபா தொகை மதிப்பீடுடையதான நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் குறித்துக்காட் டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு மில்லியன் கணக்கான டொலர்களும், யூரோக்களும் கிடைத்திருந்தது அந்த நிதித் தொகை மதிப்பீடானது செலவிடப்பட்ட விதம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதுடன் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றின் மூலம் ஏற்பட்டுள்ள நட்டம் குறித்தும் அவை சார்ந்து நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விவாதம் மற்றும் உரிய நடவடிக்கைகள் குறித்தும் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தியால் கருத்துரைக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

6/6/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -6.79 | 6,669.53 | 6,676.32 |
| S&P SL20 | -2.40 | 3,836.93 | 3,839.33 |
| வியாபாரப்புரள்வு | | 468,285,792 | 395,417,120 |
| உள்நாடு:- கொள்வனவு | | 221,917,248 | 243,768,928 |
| விற்பனை | | 356,358,176 | 345,603,488 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 246,368,528 | 151,648,208 |
| விற்பனை | | 111,927,600 | 49,813,648 |




| கம்பனி-அதிகூடிய பங்குபரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| எக்போ லங்கா | EXPO.N | 7.00 | 11,281,197 | 78,940,390 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 169.00 | 422,717 | 71,717,370 |
| எல் பி பைனான்ஸ் | LFIN.N | 135.00 | 425,290 | 57,391,567 |
| பிறவுன்ஸ் கப்பிற்றல் | FLCH.N | 3.60 | 11,059,752 | 38,711,486 |
| சம்பத் வங்கி | SAMP.N | 297.00 | 126,512 | 37,569,162 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி - உரிமை | COMB.R | 20.90 | 700,656 | 14,031,828 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 134.00 | 86,490 | 11,398,810 |
| ஹோறன பொருந்தோட்டம் | HOPL.N | 25.50 | 425,407 | 10,643,072 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 134.50 | 65,310 | 8,809,133 |
| சனச டெவலப்மென் வங்கி | SDB.N | 110.00 | 77,177 | 8,397,860 |

**Workshop**

முதலீட்டு உத்திகள் பயிற்சிப்பட்டறை

பங்குலாபம்
வலி[illegible] ரூபா 3.00
அல[illegible] ரூபா 2.20

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 231 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் தீக்கிரையானதில் 24 பேர் பரிதாபச் சாவு

### இந்தியாவில் துயரம்

புதுடெல்லி, ஜூன் 7
இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு டிராக்ரரும் பேருந்தும் மோதி, பேருந்து தீப்பற்றி எரிந்ததில் 24 பேர் உயிரிழந்தனர்.

41 பயணிகளுடன் டெல்லியில் இருந்து சென்ற பஸ்ஸே அவ்வாறு விபத்துக்குள்ளானது. 24 பேர் உடல்கருகி உயிரிழந்தனர்.

ஏனையவர்கள் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகிறது.

இந்த அசம்பாவிதத்துக்கு இந்திய தலைமை அமைச்சர் மோடி இரங்கல்தெரிவித்தார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் (இந்திய மதிப்பில்) ரூபா வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். (ம)



உலகப் புகழ்பெற்ற லண்டன் மேம்பாலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை கண்டித்து நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் பேரணிகள் நடத்தப்பட்டன. 'ஆயுத கலாசாரத்துக்கு எதிராக நாம் தேனிக்கள் போல் ஒன்றுபடுவோம்', 'ஐ.எஸ்.ஐ.எஸ். உலகின் பொது எதிரி', 'பிரிட்டனே உன்னை நேசிக்கிறேன்' உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பாதாகைகளை பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## அல் ஜசீரா ஊடகம் சவூதியில் முடக்கம்

ரியாத், ஜூன் 7
கட்டார் நாட்டுடனான தூதரக உறவுகளை முறித்துக் கொள்வதாக சவூதி, பஹ்ரைன், எகிப்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் அறிவித்துள்ள நிலையில், கட்டார் நாட்டின் தொலைக்காட்சி அலைவரிசையான அல் ஜசீராவை சவூதி முடக்கியது.

கட்டாருடன் உறவை முடிவுக்குக் கொண்டுவருகிறோம் என்று சவூதி அறிவித்து சில மணிநேரங்களிலேயே இரு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகியன நிறுத்தப்பட்டன.

இது தொடர்பில் குழப்பம் நீடித்துவரும் நிலையில் கட்டாரின் தொலைக் காட்சி அலைவரிசைகளையும் சவூதி நிறுத்தியது. பன்னாட்டு ஊடகமான அல் ஜசீராவையும் சவூதி முடக்கியது. (ம)



## அ.தி.மு.க. ஆட்சியை விரட்டியடிக்க மக்கள் எதிர்பார்ப்பு

### ஸ்டாலின் ஆவேசம்

சென்னை, ஜூன் 7
"அ.தி.மு. கழகத்தின் ஆட்சியை அடியோடு தூக்கி எறியவே தமிழக மக்கள் விருப்பப்படுகிறார்கள்" இவ்வாறு தெரிவித்தார் தி.மு. கழகத்தின் செயல் தலைவர் ஸ்டாலின்.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். "சட்டசபை கூட்டத்தொடர் நடைபெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டு உள்ளது. ஆர். கே.நகர் இடைத்தேர்தல் கைவிடப்பட்டவுடனேயே சட்டசபை கூட்டத்தொடர் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் கூட்டப்படவில்லை. எதிர்க்கட்சியினராகிய நாங்கள் சபாநாயகரை சந்தித்து சட்டசபையை கூட்ட வேண்டும் என்று வலியுறுத்தினோம். இப்போது சட்டசபை கூட்டத்தொடர் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கன. தி.மு.க. எப்போதுமே மக்கள் பிரச்சினைக்கு குரல் கொடுக்கும்.

இந்த கூட்டத்தொடரிலும் மக்கள் பிரச்சனையை தெளிவாக எடுத்துரைப்போம். இந்த ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும், உடனடியாக ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்று நல்லாட்சி அமைய வேண்டும் என்று த்மிழக மக்கள் எதிர் பார்க்கிறார்கள். எவ்வளவு சீக்கிரம் இந்த ஆட்சி மாற்றம் ஏற்படுகிறதோ அவ்வளவு சீக்கிரம் மக்களுக்கு நல்லது" என ஸ்டாலின் மேலும் தெரிவித்தார். (ம)

## ஓ.பி.எஸ். - இ.பி.எஸ். இணைப்பு விரைவில்



சென்னை, ஜூன் 7
மூன்று திசைகளில் அ.தி.மு.க. பயணித்து வரும் நிலையில், ஓ.பன்னீர்செல்வம் அணியும், எடப்பாடி பழனிசாமி அணியும் இணைவதற்கான இறுதிக்கட்ட பேச்சு நடைபெற்று வருகிறது என்று தகவல் வெளியாகி உள்ளது.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு சசிகலா குடும்பத்தினரின் ஆதிக்கத்தை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தனி அணியை உருவாக்கியதால் அ.தி.மு.க. இரண்டாக உடைந்தது. சசிகலா சிறைசென்ற பிறகு அவரது அக்கா மகன் டி.டி.வி.தினகரன் கட்சிப் பொறுப்பைக் கவனித்தார்.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் இரு அணிகளும் இரட்டை இலை சின்னத்தை கேட்டதால், தேர்தல் ஆணையம் கட்சியையும், சின்னத்தையும் முடக்கியது. எடப்பாடி பழனிசாமி அணி அ.தி.மு.க. (அம்மா) என்றும், ஓ.பன்னீர்செல்வம் அணி அ.தி.மு.க. (புரட்சித்தலைவி அம்மா) என்றும் அழைக்கப்பட்டது. இரட்டை இலை சின்னம் பெற லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டி.டி. வி.தினகரன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் தினகரன், சசிகலா இருவரையம் கட்சியில் இருந்து நீக்கிவிட்டு எடப்பாடி பழனிச்சாமி, பன்னீர் செல்வம் தரப்பினர் இணைந்து செயற்பட முடிவெடுத்தனர்.

இது தொடர்பான பேச்சு தொங்குநிலையிலேயே இருந்தது. தினகரனுக்கு பிணை கொடுக்கப்பட்டுள்ளது. அவர் சிறையில் இருந்து வந்து கட்சியில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட எத்தனிக்கும் நிலையில் ஓ.பன்னீர்செல்வம் அணியும், எடப்பாடி பழனிசாமி அணியும் இணைவதற்கான இறுதிக்கட்ட பேச்சு நடைபெற்று வருகிறது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## ஓர்லாண்டோவில் சூடு: ஐந்து பேர் உயிரிழப்பு

வொஷிங்டன், ஜூன் 7
அமெரிக்காவின் புளோரிடாமாநிலம்ஓர்லாண்டோ நகரில் உள்ள தொழிற் பூங்காவில் நேற்றுமுன்தினம் மர்ம நபர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 5 பேர் உயிரிழந்தனர்.

ஊழியர்கள் வழக்கம் போல் பணிக்கு வந்து கொண்டிருந்த போது திடீரென துப்பாக்கி ஏந்திய மர்ம நபர் ஒருவர் கண்மூடித்தனமாக சுட்டார். இதில் பலர் தோட்டாக்கள் பாய்ந்து உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலால் ஓர்லான்டோவில் பதற்றம் ஏற்பட்டது. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தாக்குதல் நடத்திய நபர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பதவி நீக்கப்பட்டவர் என்றும் விரக்தியில் இதுபோன்று நடந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## 10,357 மில். மெற்றிக் தொன் கார்பனை வெளியிடுகிறது சீனா

உலகை வெப்பமயமாதலில், சீனாவின் பங்கு அதிகமாக உள்ளது. அந்த நாடு 10 ஆயிரத்து 357 மில்லியன் மெற்றிக் தொன் கார்பனை ஆண்டுதோறும் வெளியிடுகிறது என்று கார்பனுக்கு எதிரான உலகளாவிய அமைப்பு தகவல் வெளியிட்டது.

புவி வெப்பமயாதல் பெரும் சவாலாக உள்ள நிலையில், அதிக கார்பரை வெளியிடும் 10 நாடுகளை கார்பனுக்கு எதிரான உலகளாவிய அமைப்பு பட்டியலிட்டது. சீனா முதலிடம் பிடித்தது.



5 ஆயிரத்து 414 மில்லியன் மெக்ரிக் தொன்னை வெளியிடும் அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2 ஆயிரத்து 274 மில்லியன் மெக்ரிக் [illegible] வெளியிடும் இந்தியா [illegible]வது இடத்தில் உள்ளது. ஆயிரத்து 617 மில்லியன் மெற்றிக் [illegible] நான்காவது இடத்தில் உள்ளது. ஆயிரத்து 237 மில்லியன் மெற்றிக் தொன்னை வெளியிடும் ஜப்பான் ஐந்தாவது இடத்தில் உள்ளது. இந்த ஐந்து நாடுகளுமே ஆயிரம் மில்லியன் மெற்றிக் தொன்னுக்கு அதிகமான கார்பனை ஆண்டுதோறும் வெளியிடுபனவாக உள்ளன. ஏனைய நாடுகள் ஆயிரம் மில்லியன் மெற்றிக் தொன்னுக்கு உட்பட்ட அளவிலேயே கார்பனை வெளியிடுகின்றன.

798 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் ஜேர்மனி ஆறாவது இடத்திலும், 648 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் ஈரான் ஏழாவது இடத்திலும், 601 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் சவூதி அரேபியா எட்டாவது இடத்திலும், 592 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் தென்கொரியா ஒன்பதாவது இடத்திலும், 557 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் கனடா 10ஆவது இடத்திலும் உள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விமான விபத்தில் நால்வர் உயிரிழப்பு

*ஜப்பானில் சம்பவம்*

டோக்கியோ, ஜூன் 7
ஜப்பானில் பனியால் மூடப் பட்டுள்ள வடக்கு அல்ப்ஸ் மலைப் பகுதியில் சிறிய ரக விமானம் ஒன்று மோதி விபத்துக் குள்ளானதில் நால்வர் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினம் இந்த அசம்பா விதம் ஏற்பட்டுள்ளது.
நான்கு பேருடன் பயணித்த சிறிய ரக விமானமே விபத்துக் குள்ளானது.
நால்வரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனைக் குக் கொண்டு செல்லும் வழி யில் உயிரிழந்தனர் என்று டோயாமா மாகாணத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரி வித்தார். (ம)

# மேற்கு மோசூலில் பெரும் துயரம்



பக்தாத், ஜூன் 7
ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மேற்கு மோசூலில் நடைபெற்று வரும் போர் காரணமாக அந்த நகர் தற்போது உச்சக்கட்ட துன்பியல் நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளதுஎன்று ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித் தது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப் பற்றி அவற்றை ஓர் தனி நாடு என்று அறிவித்தி ருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப் பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நக ரான மோசூல் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கடந்த ஜனவரியில் மீட்கப் பட்டது. மேற்குப் பகுதிக் கான போர் தற்போது நடைபெற்று வருகிறது.
90 வீதமானவை கைப் பற்றப்பட்டிருந்த நிலை யில் எஞ்சியுள்ள 2 லட்சம் மக்களின் பாதுகாப்புக் கருதி தாக்குதல்களை நிறுதியிருந்தது ஈராக் அரச படை. "தாக்குதல் களை மீண்டும் ஆரம்ப விக்கவுள்ளோம்.
எனவே மக்கள் பாதுகாப் பான இடங்களுக்குச் செல்ல வேண்டும்'' என்று கடந்த வாரம் அரச படைகளால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
இதனையடுத்து ஐ.எஸ ஸின் பிடியிலிருந்த தப் பிச் செல்லமுற்பட்டவர் களை அந்த அமைப்பு படுகொலை செய்தது.
இந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் தாக்குதல்கள் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் பின் பிடியில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்கள் தொடக்கம் 2 லட்சம் மக் கள் வரை உள்ளனர். அவர்கள் கடும் துன்பியல் நிலைமைகளை சந்திக் கின்றனர்.
மேற்கு மோசூலில் மனி தப் பேரவல நிலை ஏற்ப டும் சாத்தியமுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித் தது. (ம)



## பாலமா அல்லது பூங்காவா?

தென்கொரியத் தலைநகர் சியோலில் உள்ள 'சியோல் ஸ்டேசன் மேம்பாலத்தை, பாலமா அல்லது பூங்காவா என்று அடையாளம் தெரியாத அளவுக்கு மாற்றி வியக்க வைத்துள்ளது அந்த நாடு.
தென் கொரிய தலைநகர் சியோலில் கிழக்கு மற்றும் மேற்குப்பகுதிகளை இணைக் கும் விதத்தில் 40 ஆண்டுக ளுக்கும் மேலாக மிக நீண்ட பாலம் இயங்கிவந்தது. 'சியோல் ஸ்டேசன்' என்று அழைக்கப்பட்ட இந்தப் பாலம், தென் கொரியாவின் முக்கிய அடையாளமாகவும் பொருளா தார வளர்ச்சியைக் குறிப்ப தாகவும் இருந்தது.
2012ஆம் ஆண்டு ஆயிரத்து 24 மீற்றர் நீளமுள்ள இந்தப் பாலத்தைப் பரிசோதித்த போது, இன்னும் 3 ஆண்டுக ளுக்கே போக்குவரத்து நெரிச லைத் தாங்கும் என்று நிபு ணர்கள் தெரிவித்தனர். உடனே பாலத்தை இடித்து விட்டு, புதிதாகக் கட்டுவதற்கு அரசு திட்டமிட்டது.
2015ஆம் ஆண்டு மூடப்பட்ட பாலம், சில நாள்களுக்கு முன்பு மீண்டும் திறக்கப் பட் டது. இந்த முறை சாலைகளில் வாகனங்களும் பாலத்தில் மனிதர்களும் செல்லும்படி அமைத்துவிட்டனர்.
பாலத்தில் தொங்கும் தோட்டத் தையும் அமைத்திருக்கின்ற னர். 645 மிகப்பெரிய தொட் டிகளில் 228 வகை தாவரங் களை வைத்திருக்கிறார்கள். இவற்றில் ஆளுயர மரங்க ளும் உண்டாம். இது பாலமா அல்லது பூங்காவா? (ம)



வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவைப் பதவி விலக வேண் டும் என்று அங்கு ஆரம்பிக்கப்பட்ட இளைஞர்கள் போராட்டம் தற்போது உச்சக்கட்டமாக நடைபெற்று வருகிறது. போர்க் களத்தில் காயமடைந்த இளைஞர் ஒருவரை, மருத்துவமனைக்கு மீட்டுச் செல்லும் ஒளிப்படமே இது. மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஒன்றிணைந்து ஓர் குழுவாக அங்கு செயற்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## அணு விநியோக நாடுகளில் இந்தியா சேர சீனா எதிர்ப்பு

அணு விநியோக நாடுகள் அமைப்பில் (என்.எஸ். ஜி.) இந்தியா உறுப்பினராவது மிகவும் சிக்கலானது என, சீனா மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்தது. அணு மூலப்பொருள் விநியோகிக்கும் நாடுகளின் அமைப்பில் அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஆஸ்திரே லியா உள்ளிட்ட 48 நாடுகள் உறுப்பினராக உள் ளன. இதில் இந்தியா உறுப்பினராகச் சேர பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு அந்த அமைப்பில் உள்ள பல்வேறு நாடுகளும் ஆத ரவு தெரிவித்து வருகின்றன. என்எஸ்ஜி அமைப் பைப் பொறுத்தமட்டில் ஒரு நாடு எதிர்ப்பு தெரிவித் தால்கூட புதிதாக விண்ணப்பிக்கும் நாடு உறுப்பின ராக முடியாது. இந்தியா என்எஸ்ஜியில் சேருவதற்கு சீனா தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாததால் இந்தியாவை உறுப்பின ராக்க முடியாது என்றும், இந்தியாவுக்காக விதிகளில் விலக்கு அளித்தால் பாகிஸ்தான் உள்ளிட்ட மற்ற நாடுகளையும் சேர்க்க வேண்டும் என்றும் சீனா வலியுறுத்துகிறது. (ம)

## அமெரிக்கா என்ன செய்தல் வேண்டுமென்று உலக நாடுகள் தெரிவிப்பது அவசியமற்றது

*அமெரிக்கத் தூதர் ஹாலே கொதிப்பு*

பாரிஸ் ஒப்பந்த விவகாரத்தில் அமெ ரிக்கா என்ன செய்ய வேண்டும் என்று உலக நாடுகள் ஆலோ சனை வழங்குதல் அவசிய மில்லை என்று தெரிவித்தார் ஐக் கிய நாடுகள் சபைக்கான அமெரிக் கத் தூதர் நிக்கி ஹாலே.
புவி வெப்பமாதல் தொடர்பில் உலக வானிலை ஆய்வு மையம் எச்சரித் ததை அடுத்து உலக வெப்பமயமா தலுக்கான பரப்புரையை பெரும் எடுப்பில் ஆரம்பித்தது பிரான்ஸ். அமெரிக்காவும் இணைந்து செயற் பட்டது. இதன்விளைவாக ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்கமைப்பில் உலகத் தலைவர்களை ஒன்றி ணைத்து பிரான்ஸின் தலை நகர் பரிஸில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி பெரும்கூட்டம் நடத்தப்பட்டது.
உலக வெப்பநிலையை 2 செல்சியஸ் குறைவடையச் செய்தல், ஆயுத மற்றும் அணுவா யுத பயன்பாடுகளைத் தவிர்த்தல், தேவையற்ற போர்ப் பயிற்சி களைக் குறைத்தல், அமில வாயு வெளியேற்றத் தைக் கட்டுப்ப டுத்தல் போன்ற வரலாற்று முக் கியத்துவம் மிகுந்த முடிவு கள் எடுக்கப்பட்டன. இந்த ஒப்பந் தம் படிப்படியாக நடைமுறைப்படுத் தப்பட்டு வந்த வேளையில் அதிலி ருந்து வெளியேறியது அமெரிக்கா.
"அமெரிக்கா பில்லியன் கணக்கான டொலர் களை இந்த ஒப்பந்தத்துக் காகக்ச் செலவிடுகிறது. ஆனால் சீனா, இந்தியா போன்ற நாடுகள் குளிர்காய் கின்றன" என்று விமர் சித்திருந்தார் ட்ரம்ப். அமெரிக்கா வின் இந்த முடிவுக்கு உலகத்தலை வர்கள் கடும் கண்டனம் தெரிவித் திருந்த நிலையில் இவை அவசிய மற்றவை என்று சாடினார் ஹாலே.
"எங்கள் சுற்றுப்புறச் சூழலை நாங் கள் எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று மற்ற நாடுகள் கூறி வருகின்றன. ஆனால் அமெரிக்கா என்ன செய்ய வேண்டும், எங்கள் நாட்டுக்கு எது உகந்தது என்பதை நாங்களே தீர்மானிக்க வேண்டும் என்றே அமெரிக்காவில் இருக்கும் எவரைக் கேட்டாலும் கூறு வார்கள். எனவே இந்தியா, சீனா, பிரான்ஸ் போன்ற நாடுகள் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அறிவுரை வழங்கத் தேவையில்லை" என ஹாலே மேலும் தெரிவித்தார். (ம)



நிக்கி ஹாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் அதன் வழி எழுந்த முதல் தமிழ் நூலும்

பா.பாலாஜினி


தமிழ் நாட்டுக்கு அடுத்தபடியாக நீண்ட நெடுங்காலமாகத் தமிழர்கள் வாழ்ந்து வரும் நாடாக விளங்குவது இலங்கையே ஆகும். இலங்கையிலும் ஆரம்ப காலங்களில் இலக்கிய முயற்சிகள் நடந்திருந்தமைக்கான சான்றுகள் அதிகமாகக் கிடைத்துள்ளன. இலங்கையினுடைய தமிழ் இலக்கிய வளர்ச்சியானது ஈழத்து பூதந்தேவனாருடனேயே ஆரம்பிக்கின்றது. எனவே இலங்கையின் தமிழ் இலக்கியவாதிகளும் ஒருவரான இந்தப் பூதந்தேவனார் ஈழத்துப் பூதந்தேவனார். மதுரை ஈழத்து பூதந்தேவனார் என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றார்.

### ஈழத்து பூதந்தேவனார்

வரலாற்று ஆய்வாளர்கள் சிலர் இவர், இலங்கை நாட்டைச் சேர்ந்தவரல்லர் என்றும் தமது கருத்துக்களை தெரிவித்து உள்ளனர். ஆனாலும் தமிழ் நாட்டுக்கு அருகில் இருந்த எமது நாட்டிலும் தமிழ் நாட்டினுடைய செல்வாக்கினாலும் இலக்கிய முயற்சிகள் நடந்திருக்கலாம் என்றும் அதற்கு இலங்கையைசேர்ந்தபண்டையபுலவரானபூதந்தேவனர் பங்களிப்பு செய்திருக்கலாம் என்றும் கூறமுடியும். ஏனெனில் பண்டைய காலம் தொட்டு இலங்கைக்கும், தமிழ் நாட்டுக்குமிடையே தொடர்புகள் காணப்பட்டடையினால் அங்கு நடைபெறும் மாற்றங்களின் விளைவுகள் இலங்கையில் ஏற்பட்டிருக்கக் கூடும்.

ஈழத்துப் பூதந்தேவனார் எனும் நாமமானது இந்தப் புலவர் இலங்கையை சேர்ந்தவர் என்பதையும், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் எனும் நாமமானது இலங்கையில் பிறந்த இந்தப் புலவர் மதுரையில் வாழ்ந்திருக்கின்றார் என்பதையும் தெளிவாக உறுதிப்படுத்தி நிற்கின்றது. ஈழத்து பூதந்தேவனாரின் ஏழு செய்யுள்கள் சங்க இலக்கியங்களான அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றில் காணப்படுகின்றன. அவ்வாறான செய்யுள்கள் பூதந்தேவனாரினுடைய கவியாற்றலைபுலப்படுத்திநிற்கின்றன. இவரோடு சேர்ந்த சங்க காலத்தில் வாழ்ந்த சமகாலப் புலவர்களாக பரணர்,நக்கீரர்,மதுரைக்கணக்காயனார்முதலியவர்களைக் குறிப்பிடலாம் பூதந்தேவனார் சங்ககாலத்தின் பிற்காலப்பகுதியான கி.பி 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாமென பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை கருதுகின்றார்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இலங்கைப் புலவரான ஈழத்து பூதந்தேவனார் இயற்றிய எந்தக் இலக்கியங்களிலுமேஇலங்கைபற்றியஎந்தகுறிப்புக்களும் இல்லை. இவ்வாறாக பூதந்தேவனாருடைய இலக்கியப் பணியானது தமிழ் நாட்டிலேயே இடம்பெற்றமையால் இலங்கையைப் பற்றிப் பாடுவதற்கு அவருக்கு வாய்ப்புக்கள் இல்லாது போயிருக்கலாம். இவ்வாறாக இலங்கை அறிவதற்குஇதுவரைபோதியசான்றுகள்கிடக்கவில்லை. இவ்வாறான கருத்துப் போக்குகளுக்கு மத்தியில் இலங்கையில் தோன்றிய முதல்நூல், அதாவது காலத்தால் முந்திய தமிழ் நூல் தொடர்பாக நாம் குறிப்பிட வேண்டியவர்களாகி உள்ளோம். இலங்கையில் தமிழ் இலக்கியங்கள் தொடர்ச்சியாக தோற்றம் பெறுவதற்கு முன்னர். ஆரம்பகாலத்தில்சோதிட, வைத்திய நூல்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இந்த வகையில் தம்பதெனியாவை ஆட்சி புரிந்த நான்காம் பராக்கிரமபாகுவின் (இரண்டாம் பண்டித பராக்கிரமபாகு) ஆட்சிக் காலத்தில் அவனது அரசசபைப் புலவராக விளங்கிய தேனுவரை எனும் இயற்பெயரைக் கொண்டவரான போசராச பண்டிதர் என்பவரால் மன்னனினுடைய வேண்டுகோளுக்கு இணங்க கி.பி 1310 ஆம் ஆண்டு சரசோதி மாலை எனும் நூலை இயற்றினார். அவ்வாறு இயற்றிய அந்த நூலை மன்னனினுடைய அரசசபையிலேயே வைத்து போசராச பண்டிதர் வெளியிட்டிருக்கின்றார்.



### தந்தையின் பெயரில் சரசோதி மாலை

போசராசரினுடைய தந்தையின பெயர் சரசோதி என்பதாகும். அவர் அதை அடிப்படையாகக் கொண்டே அந்த நூலுக்கு சரசோதி எனும் பெயரை வழங்கியுள்ளார். விருத்தப்பாவினால் அமைந்த இந்த நூல் பன்னிரு பாடலங்களையும் 934 செய்யுள்களையும் கொண்டமைந்துள்ளது. நூலினுடைய பாயிரத்திலும் சரி வேறு இடங்களிலும் சரி பராக்கிரமபாகு மன்னனை நூலாசிரியர் பெருமையாக பாடி உள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இந்த நூலினுடைய சிறப்புக்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலடிகளைக் கூறலாம்.

பூமாது மேவு தோளான்
பொற்கமலத்து வாழு
மாமாது சேரு மாரபன்
மாமணி நாட னெங்கோன்
காமானுஞ் செங்கை வள்ளல்
கதிரவன் மரபில் வந்தோன்
பாமாலை சூடு மீளிப்
பராக்ரம வாகு பூவன்

இரவினிற் பத்தி னொன்று
இந்துபன் னொன்றி லொன்று
வரபுதன் மூன்றி னொன்று
மண்மகற் கொட்டி லொன்று
இருபதி னொன்று காரிக்
கியல்புடை கூளி கொள்ளும்
குருபுகர் இரண்டு நன்றாங்
கொழுந்சூடு மிதிப்பதற்கே

இலங்கையிலே தோன்றிய தமிழ் நூல்களுள் காலத்தால் முந்தியது என்ற பெருமை இந்த நூலுக்கு உண்டு எனவே இவை தொடர்பாக அறிந்திருக்க வேண்டியதும் கடமையாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றினுடைய தொடர்நிலை பாதிக்கப்பட்டமைக்கு முக்கியமாக ஒரு காரணம் சொல்லப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் வாழ்ந்த புலவர்களை ஆதரிக்கின்ற வழக்கம் ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் வரையும் இலங்கையில் காணப்படவில்லை. அவ்வாறாகத் தம்மை ஆதரிக்கும் அரசு போன்ற நிறுவன ரீதியான புரவலர்கள் இலங்கையில் இல்லாதிருந்தமையின் காரணமாகத்தான் இயல்பான ஒரு நாட்டம் மற்றும் கவர்ச்சி என்பன தமிழ் நாட்டின் மேல் ஏற்பட்டிருக்கலாம்.

### சோழர் ஆட்சியில் தமிழின் வளர்ச்சி

இது எவ்வாறாக இருந்தாலும் இலங்கையில் சோழராட்சியின்போது தமிழ் வளர்ச்சியுற்றிருக்கின்றது என்பதை ஆங்காங்கே கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அந்த கல்வெட்டுக்களில் தமிழ்ச் செய்யுள்கள் குறிப்பிட்டுள்ளன. அநுராதபுரம், கோட்டகம, பண்டுவஸ்நுவர முதலிய இடங்களில் இவ்வாறான கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையில் எழுந்தவையாகும் இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் இலக்கிய முயற்சிகள் நடந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. ஆயினும் அவை பற்றி

> இலங்கைப் புலவரான ஈழத்து பூதந்தேவனார் இயற்றிய இலக்கியப் படைப்புக்களில் இலங்கை பற்றிய எந்த குறிப்புக்களும் இல்லை. இவ்வாறாக பூதந்தேவனாருடைய இலக்கியப் பணியானது தமிழ் நாட்டிலேயே இடம்பெற்றமையால் இலங்கையைப் பற்றிப் பாடுவதற்கு அவருக்கு வாய்ப்புக்கள் இல்லாது போயிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு நாடக வரலாற்றின் இரட்டையர்கள்

வந்தியத்தேவர்

நெடுந்தீவு நாடக வரலாற்றின் உச்ச ஆண்டாக 1964ஆம் ஆண்டு காணப்பட்டது. கட்டமான ஆண்டாக தீவின் பிரபல நடிகர்களாக விளங்கிய வே. இராசலிங்கம், மு.அமரலிங்கன் ஆகியோர் எல்லாளன் நாடக மன்றம் என்ற பெயரில் நாடக மன்றம் ஒன்றை அமைத்து

*தொண்டை மண்டலத்*
*தரசிளம் குமரன்*
*சோழநாடு தந்த*
*ஈழத்தின் இறைவன்* என எல்லாள மன்னனின் புகழை விழிக்கும் மன்றத்தின் கீதத்துடன் யார் கட்டியதாலி முழங்கும் முரசு, விடைகொடு தாயே . எங்கிருந்தாலும் வாழ்க, காசியப்பன் போன்ற சமூக வரலாற்றுக் கதைகளைக் கொண்ட பல நாடகங்களை மேடையேற்றி மக்களின் வரவேற்பைப் பெற்றனர்.

**நாட்டுக் கூத்துக்குப் பெயர்போன இடம்**


முன்னர் நெடுந்தீவு நாட்டுக் கூத்துக்குப் பெயர்போன இடமாக இருந்தது. பழம்பெரும் நாட்டுக் கூத்துக் கலைஞர்களான செல்லத்தம்பி, கிலேயர், நாகமுத்தர், இளையதம்பி, நாகேந்திரர், வேலுப்பிள்ளை, மதியாபரணம் போன்ற பலர் நாட்டுக் கூத்தை அரங்கேற்றி வந்தனர். இந்தக் கால கட்டத்தில் யாழ்.நகரில் மேடையேறிய நாடகங்கள் சிலவற்றைப் பார்த்து லயித்த இராசலிங்கம், அமரலிங்கன் ஆகிய இருவரும் நெடுந்தீவிலும் இது போன்று மேடை நாடகங்களை அரங்கேற்ற வேண்டும் என விரும்பியதுடன் அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டனர். பாடசாலை மாணவர்களாக இருந்த போதிலும் ஒரு நாடகத்தை எப்படியாவது முதன் முதலில் நெடுந்தீவில் அரங்கேற்ற வேண்டும் எனத் தீர்மானித்து 1950களில் மதுவிலக்கு என்னும் நாடகத்தைத் தயாரித்து புனித சவேரியார் பாடசாலையில் அதனை மேடையேற்றினர். நெடுந்தீவில் முதன் முதலில் நடிக்கப்பட்ட மேடை நாடகம் இது என்பதால் அங்கு நாடகத்தை அறிமுகம் செய்தவர்கள் என்ற சிறப்புக்குரியவர்களாகவும் இருவரும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

மதுவிலக்கு நாடகம் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்களின் வரவேற்பைப் பெற்றதால் மேலும் நல்ல கதையம்சம் பொருந்திய நாடகங்களைத் தயாரித்து வழங்க வேண்டும் என்ற ஆர்வம் தமக்குள் ஏற்பட்டதாகக் கூறிய அமரலிங்கன் வீரபாண்டிய கட்டப்பொம்மன், மதுரை வீரன், வணங்காமுடி போன்ற பல சிறந்த திரைப்படங்களைப் பார்த்து ஆர்வத்துடன் நடிப்பைப் புரிந்து கொண்டோம் என்றார் வணங்காமுடி, கட்டப்பொம்மன், சிவாஜியைத் தன்னால் மறக்க முடியாது எனக் குறிப்பிட்ட இராசலிங்கம் பாடசாலை மாணவர்களாக இருந்த சமயம் சங்கீத ஆசிரியராகப் பணியாற்றிய பாலசுந்தரம் எமக்கும் ஏனைய பல மாணவர்களுக்கும் நாடகப் பயிற்சிகளை வழங்கி உற்சாகமூட்டினார் எனவும் தெரிவித்தார்.


**சிறப்பு நாடகக் கலைஞர்கள்**

நாடகத்தில் நடிப்பதில் ஆர்வம் கொண்டு பின்னாளில் சிறந்த நாடகக் கலைஞர்களாக விளங்கிய வே.பேரம்பலம் , கு.திசைராஜா, அ.திருநாவுக்கரசு, அ.லெ.அரியநாயகம், ப.குணரத்தினம், ம.சவிரி முத்து, மு. இராயப்பு போன்ற முன்னணிக் கலைஞர்களுடன் க.மருதையினர் செ.மகேசு போன்ற வயதில் குறைந்த கலைஞர்களையும் இணைத்துப் பாடசாலை விழாக்களிலும் நெடுந்தீவின் பல்வேறு பிரிவுகளிலும் தொடர்ச்சியாக நாடகங்களைத் தயாரித்து நெறிப்படுத்தி மேடையேற்றி வந்தனர்.

1958 களில் முதன் முதலில் சக்தி நாடக மன்றத்தை அமைத்து ஒரே ரத்தம் , அண்ணா , உரிமைக்குரல் போன்ற பல நாடகங்களையும் அரங்கேற்றியிருந்தனர். வாரந்தோறும் பாடசாலையில் நடக்கும் மாணவர் மன்றக் கூட்டத்தில் சிறுவர்களைக் கொண்டு அவர்களுக்கு நடிப்புப் பயிற்சி வழங்கி நாடகங்களை நிகழ்த்தி வந்ததன் மூலம் சிறந்த பல நாடக நடிகர்கள் இங்கு உருவாக முடிந்தது. இந்த இரு கலைஞர்களும் 1960களில் பதவிகளின் நிமித்தம் வெளிமாவட்டங்களுக்குச்சென்றதால் இடைக்காலத்தில் நாடக நிகழ்வுகளில் தொய்வு ஏற்படுவதை அவதானித்த இயக்குநர் சபா (வே. சபாரத்தினம்) திருநாவுக்கரசு ஆகியோர் நாடகங்களை மேடையேற்றி அதனைப் பாதுகாத்து வந்தனர்.



வே.இராசலிங்கம்



மு.அமரலிங்கன்

1964 களில் மீண்டும் நெடுந்தீவில் பல்வேறு நாடகங்களை மேடையேற்றி அதன் வளர்ச்சிக்காக அமரலிங்கன் இராசலிங்கம் ஆகிய இருவரும் முழு வீச்சுடன் செயற்பட்டு நாடகத்துறைக்குப் புத்துயிரூட்டினர். இருவரும் தாங்கள் கடமையாற்றிய இடங்களில் அங்குள்ள நடிகர்களுடன் இணைந்து பல்வேறு நாடகங்களிலும் நடித்துள்ளனர். ஹட்டன் பொஸ்கோ கல்லூரியில் அருட்சகோதரர் அல்போணஸ் அடிகளாரின் இருபது வெள்ளிக்காசு நாடகத்தில் நடித்ததை நினைவு கூர்ந்தார் அமரலிங்கன்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் பிரபல நடிகர்களாக விளங்கிய பற்குணம், துரைசிங்கம் ஆகியோருடன் பல்வேறு நாடகங்களில் இணைந்து நடித்துள்ளதாகவும் அதன் மூலம் வெளியிடங்களிலும் அறிமுகம் கிடைத்ததாகவும் குறிப்பிடுகின்றனர். அந்தக் காலத்தில் பெண்களையும் சேர்த்துக் கொண்டு நாடகங்களில் நடிப்பதென்பது எதிர்ப்புக்களை உண்டாக்கும் ஒன்றாகக் காணப்பட்டது. நாற்பத்தி ஐந்து வருடங்களுக்கு முன் கிளிநொச்சி பராசக்தி தியேட்டரில் பெண்களும் சேர்ந்து நடிக்கும் நாடகம் ஒன்றை மேடையேற்றுவதற்கு முயன்ற போது அப்போது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரியால் தடைசெய்யப்பட்டுத் தானும் இராசலிங்கமும் விரட்டியடிக்கப்பட்ட சம்பவத்தையும் பகிர்ந்து கொண்டார் அமரலிங்கன்.

**புதிய உத்திகள்**

புதிய உத்திகளைக் கையாண்டு தமது தயாரிப்புக்களுக்கு ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைத் தேடிக் கொண்ட இவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளிலும் தமது நாடகங்களைக் கொண்டு சென்று அரங்கேற்றியுள்ளனர். தமிழன் கனவு, உரிமைக்குரல், காசியப்பன் போன்ற நாடகங்கள் வெளிமாவட்டங்களில் மேடையேற்றப்பட்டன. இவை அரசியல் சார்ந்தவையாகும்.

தமிழர்களது கலை, கலாசாரம், பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்பதிலும் நாடகங்கள் ஊடாக நல்ல சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்பதுடன் நாடகக் கலையில் நெடுந்தீவு நல்ல நடிகர்களைப் பெற வேண்டும் என்பதிலும் ஐம்பது வருடங்களாக அதன் வளர்ச்சிக்காக உழைத்த கலைஞர்கள் இராசலிங்கம், அமரலிங்கன் ஆகியோர் என்பதை மறுக்க முடியாது.

இங்கு மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பல சிறந்த கலைஞர்கள் வெளியுலகிற்குத் தென்படாமலே உள்ளனர். தமது கலைப்பணி குறித்த ஆவணங்கள் மற்றும் சான்றுகளைத் தொலைத்து விட்டுத் தாம் செய்த கலைச் சேவைக்கான ஆதாரமின்றி மறைந்து காணப்படுகின்றன. மூத்த கலைஞர்களான இராசலிங்கம், அமரலிங்கம் உட்படப் பலர் இடம்பெயர்வுகள் காரணமாக எல்லாவற்றையுமே இழந்து அரச விருதுகள் மற்றும் கௌரவங்களைப் பெறும் வாய்ப்புக்களைத் தவறவிட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**வரலாற்றுப் பக்கங்கள்**

கிருஷ்ணன் பஞ்சு, விசுவநாதன் ராமமூர்த்தி போன்ற தமிழக திரையுலக இரட்டையர்களைப் போன்று நெடுந்தீவு நாடக உலகின் இரட்டையர்களாக அதன் வளர்ச்சிக்காக உழைத்த இராசலிங்கம் தற்சமயம் லண்டனிலும், அமரலிங்கன் கொழும்பிலும் உள்ளார்கள். தீவின் கலை, கலாசாரப் பெருமைகளுக்காக தம்மை அர்ப்பணித்த இருவரும் ஏனைய கலைஞர்களும் எங்கிருந்தாலும் எமது மக்கள் மனங்களில் நீங்கா இடம்பெற்றவர்களாகக் காலமெல்லாம் நிலைத்திருக்க வேண்டும். நெடுந்தீவில் முதன் முதலாக மேடை நாடகத்தை அறிமுகப்படுத்தியவர்கள், அங்கிருந்து நாடகங்களை முதல் தடவையாக வெளிமாவட்டங்களுக்கும் கொண்டு சென்று மேடையேற்றியவர்கள் இவர்கள் என்பதை எமது வரலாற்றுப் பக்கங்களில் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

“தமிழர்களது கலை, கலாசாரம், பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்பதிலும் நாடகங்கள் ஊடாக நல்ல சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்பதுடன், நாடகக் கலையில் நெடுந்தீவு நல்ல நடிகர்களைப் பெற வேண்டும் என்பதிலும் ஐம்பது வருடங்களாக அதன் வளர்ச்சிக்காக உழைத்த கலைஞர்கள் இராசலிங்கம், அமரலிங்கன் ஆகியோர் என்பதை எவருமே மறுக்க முடியாது.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இசைத் துறையை மேம்படுத்தும் ஏழிசை மாலை நிகழ்வு

தென்னவன்

மனித மனங்களை ஸ்பரி சித்து வசப்படுத்தும் ஆற்றல் இசைக்கு மட்டுமே உண்டு. தினம் தினம் மேலெழுந்து நிற்கும் சவால்களால் மனம் சோர்ந்து விடாதிருக்க ஒரு அருமருந் தாகவும் இசை இருப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அவை வாய் வழி அசைவாக, தோல் துளை நரம்புக் கருவிகளாக இருக்க லாம். அவற்றிலிருந்து எழும் ஒலியான்வை இசையாக மாறுகின்றன. இசைக்கும் எமது இனத்துக்கும் மிக நீண்டகாலத் தொடர்பு கள் இருந்துள்ளன. ஒவ்வொரு இசைக்கும் தனித்துவமான மதிப்பு உண்டு. அந்த வகையிலே, ஒப்பாரியும் ஒரு இசையாக அமைந்து விடுகிறது. அவை ஒலிக்கும் சத் தத்திலிருந்தே அவற்றின் பெறுமதியை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

தென்மராட்சி பிரதேச மண் இசைப் பாரம்ப ரியமிக்கது. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே தென்னிந்தியப் பல்கலைக் கழகத்தில் இசைத் துறைப்பட்டம் பெற்ற சங்கீத பூசணம் பெரியார் வேலாயுதம் பிள்ளை அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இசைப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது ஆனாலும், இசைப் பாரம்பரியம் மிக்க இந்த மண்ணின் வளர்ச்சி பல்வேறு காரணங்க ளால் சிறைப்பட்டு விட்டதான ஒரு தன்மை வெளியை கடந்த சில கால வரையறை களினுள் உணரமுடிந்தது. இசை சுதந்திர மாக உலா வரல் வேண்டும். பிள்ளைகளது உள்ளத்தே ஊற்றெடுக்கப்படும் இசையா னது பாடசாலை வகுப்பறைகளில் மட்டு மல்ல எமது பிரதேசத்தில் சிறப்புற வளப்படுத் தப்பட்டு சமூகக் களத்தினில் அரங்கேற்றப்ப டல் வேண்டும் இசையின் தாய் வீடு கிராமங் கள் என்பர். கிராமத்து ஆலயச் சூழல்களும், ஆற்றங்கரைகளும், தோட்ட வெளிகளும் இசை மேடைகளாகக் களம் காண வேண்டும்.

### இசைத் துறையில் பட்டம்

பல்கலைக்கழகங்களில் இசைத்துறையில் பட்டம் பெற்ற பலர் தமது துறை சாராத வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்ட தால் அவர்கள் பெற்ற கல்வியின் தனித்து வங்கள் வீணடிக்கப்பட்டு வருவதை நாம் நேரடியாகக் காண்கின்றோம். பாடசாலைக ளில் இசையாசிரியர்களாக கடமையாற்றுப வர்களும் பாடசாலைக் கல்வியுடன் தமது செயற்பாடுளை நிறுத்தி விடுகின்றனர். இத னால் இசைத்துறையை ஆர்வத்துடன் கற்ற பலர் அதனை முன்னெடுத்துக் களம் அமைத்துக் கொடுக்க முன்வராத நிலையில் வீடுகளில் முடங்கியுள்ளதையும் காணமுடி கிறது. பெற்ற கல்வியை மேம்படுத்த ஆல யங்களில் நடத்தப்படும் விழாக்கள் மற்றும் வீடுகளில் நடைபெறும் மங்கல நிகழ்வுகளில் இவ்வாறான இசைத்துறையில் பட்டம் பெற் றவர்களை களம் இறக்கி அவர்களின் இசை ஞானத்தை வளப்படுத்த முயற்சிகளை மேற்கொள்வதில்லை.

இவ்வாறான இசைத்துறையில் பட்டம் பெற் றவர்களையும் அவர்களிடம் பயின்ற மாண வர்களையும் உள்ளடக்கிய ஏழிசை மாலை என்னும் இசை நிகழ்வுகளை நடத்த தென் மராட்சி கல்வி வலயத்தி னர் மேற்கொண்ட நட வடிக்கைளுக்கு தென் மராட்சிப் பிரதேச மக் கள் தலை வணங்க வேண்டும். தென்ம ராட்சி கல்வி வலயத்தி னரால் வலயப் பாடசா லைகளின் இசையாசிரி யர்கள் மூலம் மாதாந் தம் இசை நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் முதலாவது நிகழ்வு நடத்தப்பட்டது.

பாடசாலைகளில் கற்பிக்கும் இசையாசிரியர் கள் மற்றும் மாணவர்களுக்கு முதல் நிகழ் வாகவும் அயல் பாடசாலை இசையாசிரியர் கள் மாணவர்களுக்கு இரண்டாவது நிகழ் வாகவும் இசையாசிர்களைக் கொண்ட குழுவினரால் மூன்றாவது நிகழ்வாகவும் நடத்தி நிகழ்வுக்குப் பெருமை சேர்த்தனர். தொடர்ச்சியாக மாதத்தின் இறுதி வெள்ளிக் கிழமைகளில் தலா ஒரு பாடசாலையில் நடத்தி நான்காவது நிகழ்வை வலய நிகழ் வாக நடத்தி அதில் இசைத்துறையில் விற் பன்னர்களாகக் காணப்படுவோரை அழைத்து வந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். பிரதேசத்தில் இசையை வளர்த்தெடுக்கும் நிகழ்வாகவே அமைந்திருந்தன.

### சிறந்த மாதாந்த நிகழ்வு

அந்த வகையில் ஏழிசை மாலை நிகழ்வுகளை 13 பாடசாலை நிகழ்வுகளா கவும், 6 வலய நிகழ்வு களாகவும் மாதாந்தம் நடத்தி இசைத்துறையின் வளர்ச்சிக்கு தென்மராட்சி கல்வி வலயத்தினர் பெரும்பங்காற்றியுள்ள னர் எனலாம். பாடசா லைக் கல்வி, பரீட்சைகள் என்று மாணவர்கள் இருந்துவிடாமல் மாண வர்களை பல்துறைசார்ந்த மேலும் ஊக்கமடையச் செய்யும் நிகழ்வுகளாக வும் இவை இருந்தன எனலாம். இந்த மாதம் எந்தப் பாடசாலையில் ஏழிசை மாலை நிகழ்வு நடைபெறுகிறது எனக் கேட்டுப் பெற்றோர் சென்று பார்வையிடும் அளவுக்கு ஏழிசை மாலை நிகழ்வு தென்ம ராட்சிப் பிரதேச மக்களிடம் ஆழமாகப் பதிந் துள்ளது எனலாம். இவ்வாறான நிலை மைக்குக் களம் அமைத்துக் கொடுத்த வல யக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் மற்றும் வலய சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநேசன் ஆகியோர் பாராட் டப்பட வேண்டியவர்களே.

2017 மே மாத ஏழிசை மாலை நிகழ்வு வலய நிகழ்வாக அண்மையில் தென்ம ராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன. நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலராகக் கடமையாற்றி தற்போது வட மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேல திக கல்விப் பணிப்பாளர் (பொதுநிர்வாகம்) ஆகக் கடமையாற்றும் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபுவும் கலந்து கொண்டனர்.

### சிறந்த இசைக் கச்சேரி

தென்மராட்சிப் பிரதேசத்தில் இசைத்துறைக் குப் பெரும் பங்காற்றிவரும் சங்கீத வித்து வான் பொன்.ஸ்ரீவாமதேவனின் இசைக்கச் சேரி முதலில் இடம்பெற்றது. சுமார் ஒன் றரை மணிநேரம் இடம்பெற்ற இசைக்கச் சேரியில் இசையின் மகத்துவத்தை எந்த வகையில் செவிகளுக்கு இன்பம் இவை அளிக்கலாம் என்பதை நன்குணர்ந்தவராக தனது இசையாற்றல் வெளியை வெளிப்ப டுத்தியிருந்தார். உண்மையில் ஒன்றரை மணிநேரத்தில் ஐந்து பாடல்களா என்னும்



போது எமக்கே ஆச்சரியமாக இருந்தது. மண்டபம் நிறைந்து காணப்பட்ட மக்கள் இசையின் ஆழத்தை நன்கறியும் விதத்தில் இசையால் கவர்ந்திருந்தார். அவரின் பாடல் களுக்குப் பார்வையாளர்களாகக் காணப் பட்ட அனைவரின் கைகளும், கால்களும் தாளம் போட்டதைக் காணமுடிந்தது. இவ ரின் பாடல்களுக்கு அணிசேர் கலைஞர்க ளாக வயலின் இசையை கோப்பாய் ஆசிரி யர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கே.குகபரனும் மிருதங்க இசையை கொக் குவில் இந்துக் கல்லூரி இசையாசிரியர் எஸ்.துரைராஜாவும் கஞ்சிரா இசையை வங்கி அலுவலர் பி.ஞானவேலும் கீபோட் இசையை எஸ்.நிமலனும்வழங்கியிருந்தனர். தென்மராட்சிக் கல்வி அபிவிருத்திக் கழகத் தினரால் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் வய லினிசை அடுத்து இடம் பெற்றி ருந்தது. பங்குபற்றிய மாணவர் களுக்கு கன்னி மேடையேற்றம் என்பதால் மேடைக் கூச்சம் அவர் களிடத்தில் இருந்தது எனலாம். இருந்த போதிலும் அவர்களின் முயற்சி நன்றாக அமைந்திருந் தது. பாராட்டத்தக்கது. அடுத்து ஒன்பது மாணவர்கள் பங்குபற் றிய மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவர்களின் குழுப்பாடல் நிகழ்வு இடம்பெற் றது. ஒழுங்கப்பட்ட நேரத்தில் தமது பணிகளை சிறப்பா கச் செய்தனர். குழுவில் பங்குபற்றிய மாணவர்க ளின் கை ஒலிகள் ஒரே விதமாக அமைந்திருந்த மையும், ஒரே விதமாகக் குரலை ஏற்ற இறக்கத்து டன் இசைத்தமையும் சிறப்பாக அமைந்திருந் தன. பயிற்சியாளர்களுக் கும் வாழ்த்துக்கள்.

### புதிய முயற்சிகள்

அடுத்து வலயப் பாடசா லைகளின் இசையாசிரியைகளின் ஒருங்கிணைவில் உருவான காற்றினிலே வரும் கீதங்கள் என்னும் புதிய நிகழ்வு மேடையேற்றப்பட்டன. வலய சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகரின் தலை மையில் நடைபெற்ற நிகழ்வானது சிறப்புற அமைந்திருந்தது. அனைவராலும் பாராட் டப்பட்டது. கர்நாடக இசையுடன் சினிமாப் பாடல்களையும் உள்வாங்கி பாடல்களை இசைத்தமை நிகழ்வை புதிய கோணத்தில் தனித்துவம் செய்தது. தாம் இசைத்துறை யில் பட்டம் பெற்றவர்கள் என்பதைச் சொல் லாமல் சொல்லும் அளவுக்கு அவர்களின் குரல்வளங்கள் அமைந்திருந்தன. இசையா சிரியைகளின் புதிய முயற்சிக்கு வாழ்த்துக் கள். இவ்வாறான திறமையுள்ளவர்களை சமூகம் இன்னமும் ஏற்றுக் கொள்ளாதது வேதனையளிக்கிறது. இசையில் புகழ்பெற் றவர்கள் தாம் பங்குபற்ற வேண்டுமென்ற நிலையை மாற்றி இந்த ஆசிரியைக ளுக்கும் எமது விழாக்களில் முன்னு ரிமை கொடுத்து அவர்களின் குரல்வ ளங் களை நாடறியச் செய்யவேண்டியது தமது கடமை என்ப தைப் பலர் மறந்து விடுகின்றனர். பல லட்சம் ரூபா செலவ ளித்துத் தென்னிந்தி யாவிலிருந்து புகழ் பெற்ற இசையாளர் களை அழைத்து நிகழ்வுகளை நடத்தும் எமது பெரியார்கள் எமது நாட்டிலும், எமது கிராமதர்தி லும் இசை வல்லுநர்கள் உள்ளனர் என்பதை மறந்துள்ளமை வேதனையளிக்கிறது.

அடுத்து இடம்பெற்ற தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் மிருதங்க இசைக் கச்சேரி யும் பார்வையாளர்கள் அனைவரையும் ரசிக்கச் செய்த நிகழ்வாக அமைந்திருந்தன. யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட இசைத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் சி.மகேந்திரனின் நெறியாள்கைகளில் பயின்ற மாணவர்களின் மிருதங்க இசை யாற்றல்களும் சிறப்பாகக் காணப்பட்டன பாராட்டுக்கள்.

தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஏழிசை மாலை நிகழ்வு ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கடந்த வார நிகழ்வு வரை சிறப் பாகச் செயற்பட்டு பிரதேசத்தில் இசைத்து றைக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து இசையை மேம்பட வைத்த சங்கீதபூசணம் அமரர் அ.கி.ஏரம்பமூர்த்தியின் புதல்வியும், தென்மராட்சிக் கல்வி வலய சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான திருமதி புனிதகுமாரி ஈழநேசன் நிகழ்வில் விருந்தினர்களால் பொன்னடை போர்த்தி நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

அடுத்து வலய இசைஆசிரியர்களின் மெல் லிசையும் இடம்பெற்றது. இசையை எந்த விதத்தில் கேட்டாலும் இசை இசைதான் அதற்கு மாற்றீடு இல்லை என்றே கூறலாம்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2017 ஆனி மாத பலன்



## மேடம்

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை ரகசியமாகவே வைத்திருக்கும் மேட ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் எதிலும் நிதானமாக செயற்படுவது நன்மை தரும். ராசிக்கு ரண, ருண, ரோகாதிபதி புதன் தனஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல்நலத்திற்கு செலவு செய்ய வேண்டி நேரலாம். எதிர்பார்த்த பணவரத்து தாமதமாக வந்து சேரும். எந்த வாக்குறுதியும் கொடுக்கும் முன்பு யோசித்து செயற்படுவது நல்லது. மற்றவர்களின் செயல்கள் கோபத்தைத் தூண்டுவதாக இருக்கலாம். தொழில் ஸ்தானாதிபதி அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்தாலும் தொழில் ஸ்தானத்தை பாக்கியாதிபதி குரு பார்ப்பது சிறப்பு. தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்.

வாடிக்கையாளர்களிடம் அனுசரித்துச் செல்வது அனுகூலம் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அவசரப்படாமல் நிதானமாகப் பணிகளைக் கவனிப்பது நல்லது. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருப்பது பலம் என்றாலும் குடும்ப ராசியை சனி பார்ப்பது இன்னும் பலம் சேர்க்கும். குடும்பத்தில் சிறுசிறு மனவருத்தங்கள் ஏற்படும் வகையில் சூழ்நிலை இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் முன்னேற்றத்தில் தடை தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை. பொருள்களைக் கவனமாகப் பாதுகாப்பது நல்லது. பெண்கள் எந்த வாக்குறுதியையும் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

கோபத்தைக் குறைப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு திடீர்ச் செலவுகள் ஏற்படலாம். வெளிவட்டார பழக்க வழக்கங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. ஆயுதம், நெருப்பு இவற்றைக் கையாளும்போதும், வாகனங்களில் செல்லும்போதும் கவனம் தேவை. அரசியல் துறையினர் எந்தக் காரியத்திலும் அவசர முடிவு எடுக்காமல் இருப்பதும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நல்லது. திட்டமிட்டபடி காரியங்களை செய்து முடிப்பீர்கள். பணவரத்து தாமதப்பட்டாலும் கையில் இருப்பு இருக்கும். முக்கியமான பணிகள் தாமதமாக நடக்கும். மாணவர்களுக்கு கல்விக்கு தேவையான புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவது பற்றிய கவலை நீங்கும். படிப்பில் ஆர்வம் உண்டாகும்.

**பரிகாரம்:** முருகனுக்கு பால் அபிஷேகம் செய்து வணங்கி வர பல நாட்களாக இழுபறியான காரியம் வெற்றிகரமாக முடியும். மனக் கவலை நீங்கும்.



**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய்.



## நாடகப் பிரதியின் வெளியீட்டு விழா

மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகமன்ற மாணவர்களால் வெளியிடப்பட்ட `முயற்சி' எனும் நாடகபிரதியின் நூல் வெளியிட்டு விழா கல்லூரியின் வி.எஸ். துரைராஜா திறந்தவெளி அரங்கில் மன்றத்தின் தலைவர் தி.திஸ்னுகன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நவாலி சென் பீட்டஸ் றோ.க.த.க பாடசாலை அதிபர் த.ரமேஸ் கலந்துகொண்டார். நிகழ்வில் வாழ்த்துரையை கல்லூரி முதல்வர் எம்.இந்திரபாலாவும், வெளியீட்டுரையை கல்லூரியின் மூத்த ஆசிரியரும் தமிழ்சங்க பொறுப்பாசிரியருமான ஞான.திருக்கேதீஸ்வரனும், பொறுப்பாசிரியர் உரையை எஸ்.ரி.அருள்குமரனும் நிகழ்த்தினர்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1654-பதினாலாம் லூயிஸ் பிரான்சின் அரசராக முடிசூடினார்.

1692-ஜமேக்காவில் ஏற்பட்ட 3நிமிட புவியதிர்ச்சியில் 1600 பேர் சாவடைந்தனர் 3000 பேர் வரை கடுங்காயங்களுக்கு உள்ளாகினர்.

1810-ஆர்ஜன்ரினாவில் கசட்டாடி புவனெயஸ் அயர்ஸ் புதினப் பத்திரிகை முதன்முதலாக வெளியிடப்பட்டது.

1862-ஆபிரிக்க அடிமை வியாபாரத்தைத் தடுக்கும் லையன்ஸ் சீவோட் ஒப்பந்தத்தில் ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராஜ்யமும் ஒப்பமிட்டன.

1892-தொடருந்து ஒன்றில் வெள்ளையர்கள் மட்டும் பெட்டி இருக்கையிலிருந்து இறங்க மறுத்த ஹேமர் பிளஸ்ஸி கைது செய்யப்பட்டார். வழக்கு விசாரணையில் அவர் தோல்வியடைந்தார்.

1893 -மோகனதாஸ் காந்தி தனது முதலாவது சட்ட மறுப்புப் போராட்டத்தைத் தொடங்கினார்.

1944 -இரண்டாம் உலகப் போர் 350 கிறெற்றன் யூதர்களையும் 250 கிறெற்றன் பிரிவினை வாதிகளையும் சுமந்து சென்ற டேன் நீராவிக் கப்பல் சன்ரோனிக்குஅப்பால் மூழ்கியதில் ஒருவரும் தப்பிப் பிழைக்கவில்லை.

1948-தனது நாட்டை கம்யூனிஸ்ட் நாடாக ஆக்கும் மே 9 தின அரசமைப்பில் ஒப்பமிடாதிருக்க செக்கோஸ்லேவிய அரச தலைவர் எட்வட் பென்ஸ் பதவியைத் துறந்தார்.

1967-இஸ்ரேலிய படைகள் ஜெருசலமினுள் பிரவேசித்தது.

1975-கிரிக்கட் உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது.

1977-இரண்டாம் எலிசபெத் மகா ராணியின் வெள்ளிவிழா நிகழ்வை 500 000 000 பேர்தொலைக்காட்சியில் பார்வையிட்டனர்.

1981 -ஒப்பரேஷன் ஒபேரா எனும் நடவடிக்கையில் இஸ்ரேலிய விமானப்படைகளால் ஈராக்கிய அணுஉலை தகர்க்கப்பட்டது.

1992-ஈழ அகதிகள் விடயம் தொடர்பாக ஜெனிவாவில் ஆராய்வு.

1992-தாம் ஆட்சிக்கு வந்தால் பிரபாகரனைக் கைது செய்வாராம் லலித் தெரிவிப்பு.

2004 -மல்வத்தை மகாநாக்க தேரர் கண்டியில் காலமானார்.

2004 -பிபிஸி ஊடகவியலாளர் சவுதியில் சுட்டுக் கொலை மற்றொரு செய்தியாளருக்குக் காயம் வெள்ளத்தால் கொழும்பில் 14 பேர் உயிரிழந்தனர்.

### நாளை

**வைகாசி-25**
வியாழக்கிழமை -08.06.2017
திதி: சதுர்த்தசி பி.ப.05.06
நட்சத்திரம்: அனுசம் பி.இ.03.04
சுபநேரம்:07.22-08.52 வரை
ராகுகாலம்:01.22-02.52 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரனின் காதல்

புலவர் வள்ளுவதாசன்

சந்திரன்! கொள்ளையிடும் ஆசையெனக்கில்லையடி அல்லிக் கோலமயில் உனையழைத்து ஊர்வலங்கள் சென்றுவர எல்லையில்லா ஆசை எனக்கிருப்பதை நீ அறிந்தும் உன்னைச் சொல்லாமல் இருப்பதென்ன சொல்.

அல்லி நீ வெண்ணிலவின் ஆதரவால் மலர்வதென்று சொல்லுவர் அறிஞரெல்லாம். சொந்தமென வல்லநான் உனைத்தீண்ட வகையறியாதிருக்க, உனை வண்டுவந்து மொய்ப்பதென்ன வகை. அல்லிமலர் நீயிருக்க, ஆசைநிலா நானிருக்கத் தொல்லை தரும் வண்டு உன்னைத் தொட்டணைக்கும் நியாயமென்ன, இல்லையோ என்னிடத்தில் அன்பு.

கருவண்டு உனைச்சுற்றி காளங்கள் பாடுகின்ற நிலை கண்டு நெஞ்சத்தில் நீங்காத வேதனைகள். மதுவுண்டுகளித்திடவும் வகையறியா ஏக்கநிலை அதுகண்டும் ஏனில்லை அன்பு

**அல்லி;** ஒளி கொண்ட சந்திரனே உருமாறி வந்திங்கு கருவண்டாய் மாறியெனைக் காதலித்தால், மதிகண்டு களிப்புறும் மாநிலத்து மாந்தரின் கதி என்னவாகும் சொல் தோழி?

**தாமரை;** மதிகண்டு இன்புறும் மாந்தரும் அல்லி மாதத்தில் ஒருநாள் மறைந்திடுவானாந்த மாதத்தில் ஒரு நாள் வண்டாக மாறி உந்தன் வதனத்தில் கலந்திட்டால் மோசமென்ன?என்னதான் எடுத்துரைத்தும் ஏக்கமது தானறிந்தும் வெண்ணிலவு எனை வெறுக்கும் வண்ணமென்ன?

இத்தனை நாள் உனை நினைந்து வாடிநிற்க, பித்தாகி உனைச் சுற்றி முத்தாடும் வண்டுகளால் முத்துக்கள் தேன்றியதுன் வயிற்றில். நித்திலத்தில் நீ அறியாதிருந்தாலும் நீரில் நீ அமிழ்ந்த நிலை காட்டும் (இறுதிநிலை)

வண்டுகள் வந்திடும் வைகறை தன்னில் அவள் விண்டார் வைத்த சந்திரன் துணையே கொண்டும், கொண்ட கருவண்டினத்தின் சேர்க்கை தன்னில் கொண்டதன் அழகு மாறிச் சேற்றில் ஆழ்ந்தாள். உருமாறி வந்து நின்ற உத்தமன் நிலவுதானும் தடுமாறினான். அல்லி உருமாற்றம் கண்டதாலோ தாழ்மையின் குறிகள் கண்டு தவித்தனன் நிலவுதானும் ஆச் சே! இவள் என்ன பெண்ணா? சிறுமை யின் முதுமையென்று மனம் மாறிச் சந்திரனும் வானத்தில் மீண்டும் ஏக வடிவான அல்லியவள் வாசனை தாளிழந்து உருமாறி, இதழ்கள் நாறி இழிந்ததோர் நிலையுமாகிக் கருவாகிநின்றகோலம்கண்டு மவள் காணலுற்றாள். கனவாகிப் போன அல்லியின் காதலும், கசந்து நீர் பழுதாகிப் போன அல்லியின் பார்வையும் தீ என்றெண்ணி மனதாலும் தீயோர் நட்பு வந்திடல் கொடிதென்று கடலோடு சங்கமித்தான் காதலும் களவாய் ஆச்சோ?



எஸ்.மல்லிகா

# இலக்கியத்தில் விருந்தோம்பல் 5

இல்லறத்தின் தலையாய அறமான விருந்தோம்பலைச் சிறப்பித்துப் போற்றாத இலக்கியங்களே கிடையாது. ஒவ்வொரு இலக்கியத்திலும் விருந்தினர்கள் உயரிய முறையில் போற்றப்பட்டிருப்பதையும் மதிக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

**சிற்றிலக்கியங்களில் விருந்தோம்பல்**

சாதாரண மக்களின் வாழ்க்கையைச் சொன்ன இலக்கியம் சிற்றிலக்கியம். அவற்றிலும் விருந்தினர்களுக்கு என்ன விருந்து, அதனை எப்படி அளிப்பார்கள் என்று குற்றாலக் குறவஞ்சியில் கூறியிருப்பார் திரிகூடராசப்பக்கவிராயர். "தேனும் தினைமாவும் விருந்தருந்தத் தருவோம்" என்று குறமக்களின் வாழ்க்கையில் இருக்கும் விருந்தோம்பல் முறையைக் காணலாம்.

இதேபோன்று நந்திக்கலம்பகத்திலும் விருந்தோம்பல் பண்பு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. கொடை, அன்பு, வீரம் என அனைத்திலும் சிறந்து விளங்கிய நந்திவர்மன் விருந்தோம்பலில் நிகரற்றுத் திகழ்ந்தான். இதனை,

*வான்உறு மதியை அடைந்ததுஉன் வதனம்*
*மறிகடல் புகுந்ததுஉன் கீர்த்தி*
*கான்உறு புலியை அடைந்ததுஉன் வீரம்*
*கற்பகம் அடைந்ததுஉன் கரங்கள்*
*தேன்உறு மலராள் அரிஇடம் புகுந்தாள்*
*செந்தழல் அடைந்ததுஉன் தேகம்*
*நானும்என் கலியும் எவ்விடம் புகுவேம்*
*நந்தியே நம்தயா பரனே*
*(நந்திக் கலம்பகம்: 113)*

என்றபாடல்வாயிலாக அறியமுடிகிறது. இப்படிச்சமூகத்தில் உயர்ந்த குலத்தவர் முதல் கீழ்நிலை மக்கள் வரை விருந்தோம்பலைப் போற்றிய பண்பைக் காணலாம்.

**20ஆம் நூற்றாண்டில் விருந்தோம்பல்**

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் மக்கள் விருந்தோம்பலுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை இலக்கியங்கள் பதிவாக்கியுள்ளன. பாரதிதாசனின் "இருண்ட வீடு" விருந்தோம்பல் பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றது. இது மட்டுமன்றி இக்காலத்தில் எழுச்சிபெற்ற ஏனைய இலக்கியங்களும் விருந் தோம்பலைச் சிறப்பித்தி ருப்பதைக் காணமுடிகிறது.

பண்டைக் காலத்தில் வீட்டுக்கு வீடு திண்ணை வைத்துக் கட்டினார்கள். போக்குவரத்து அதிகம் இல்லாத காலத்தில் கால்நடையாக வருபவர்கள் அமர்ந்து இளைப்பாற அவர்களுக்கு உணவு அளிக்கும் வழக்கம் இருந்தது. அதேபோன்று சத்திரம் என்ற இடம் இருந்தது. அதில் யார் வேண்டுமானாலும் தங்கலாம். தங்கியவர்களுக்கு உணவு அளிப்பது வழக்கமாக இருந்தது. காலப்போக்கில் சத்திரம் செயலிழந்து விட்டது.

**வீழ்ச்சி நிலையில் விருந்தோம்பல்**

இன்று மக்கள் தொகை அதிகரித்துவிட்டதால், உணவுப் பற்றாக்குறையும் அதிகரித்துள்ளது. ஆதலால், தெரியாதவர்களுக்காக உணவை வீணாக்கக் கூடாது என்ற எண்ணக்கரு பெரும்பான்மையான மக்களிடம் இருக்கிறது. தெரிந்தவர்களுக்காக உணவு சமைப்பது எளிது, உணவு வீணாவதில்லை. தெரியாதவர்களுக்காகச் சமைப்பது வீண். அதற்கு இன்றைய இயந்திர உலகில் அநேகருக்கு நேரம் இருப்பதில்லை. இதனால் விருந்தோம்பல் வீழ்ச்சியடைந்துள்ளது.



சாதாரண மக்களின் வாழ்க்கையைச் சொன்ன இலக்கியம் சிற்றி லக்கியம். அவற்றிலும் விருந்தினர்களுக்கு என்ன விருந்து, அதனை எப்படி அளிப்பார்கள் என்று குற்றாலக் குறவஞ்சியில் கூறியிருப்பார் திரிகூடராசப் பக்கவிராயர். "தேனும் தினைமாவும் விருந்தருந்தத் தருவோம் என்று குறமக்களின் வாழ்க்கையில் இருக்கும் விருந்தோம்பல் முறையைக் காணலாம்.

அபரிமிதமான தொழிநுட்ப வளர்ச்சியும் இந்த விருந்தோம்பல் சீர்குலைய ஒரு காரணம். வீட்டுக்கு முன் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன், அமர்ந்திருக்கும் மனிதர்கள், தமது வீட்டுக்கு வருபவர்களை முகம் பார்த்து அழைக்க மறந்து சின்னத்திரை நாடகங்களுக்கு அடிமையாகியுள்ளனர்.

அதேபோன்று இளைஞர்களும், இணையபோதைக்கு அடிமையாகிச் சக மனிதர்கள் மற்றும் புதிய விருந்தாளிகளின் வரவேற்பையும் விருந்தோம்பலையும் புறக்கணிக்கின்றனர்.

தமிழர்கள் புலம்பெயர்ந்திருக்கும் வெளிநாடுகளில் விருந்தோம்பல் என்பது, தெரிந்தவர்களை உபசரித்தல் என்று மாறிவிட்டது. இங்கு உணவுக்கு என்று யாரையும் சார்ந்து வாழும் முறை இல்லை.

அதனால் விருந்தோம்பல் என்ற பண்பாடு மறைந்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் தலைமை அதிகாரியாக இருந்த ராஃப் காப்மென் என்ற ஆங்கிலேயர், "ஏனைய வானூர்திச் சேவைகளைவிடச் சிங்கப்பூர் வானூர்திச் சேவை கள் சிறப்பாக இருக்க, தமிழர்களின் விருந்தோம்பல் பண்பை எடுத்துச் செயற்படுத்தினேன். அதனால்தான் இன்று பன்னாட்டுத்தர வரிசையில் இடம்பிடிக்க முடிந்தது" என்று ஒரு பேட்டியில் கூறியிருந்தார். இதன்மூலம், பன்னாடுகளுக்கு நாம் அளித்த கொடைகளில் விருந்தோம்பலும் ஒன்று என்பது புரிகிறது. இதனை அழியவிடலாமா? *(முற்றும்)*



ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 . 04 . 1949

மறைவு
19 . 05 . 2016

அமரர் இராசரெத்தினம் பத்மாவதி

திதி : 07.06.2017


ஆண்டொன்று ஆனதுவோ ஆறாத துயரம் தந்து
நீண்ட வழி போனதென்ன நினைவுதனை சுமக்க விட்டு
மாண்டு பிறப்பதும் மானிடரின் மாற்றரிய விதி அதுவே
வேண்டுகின்றோம் நாகபூசணியாள் மலர்ப்பாதம் சாந்திபெற

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு

குடும்பத்தினர்.
077 207 9634

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைகாசி விசாகத்தில் வழிபட்டு வாழ்வாங்கு வாழ்வோமாக

மருரகவி
காரை. எம்பி. அருளானந்தன்

வைகாசி விசாகம் மகத்துவம் மிகக நட்சத்திரமாகும் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றான விசாகத்தில் தான் ஆறுமுகப் பெருமான் அவதரித்தார் இந்த நாள் எல்லா முருகன் ஆலயங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது இந்த நாளில் "சூரியன் குமரனை வழிபடுவதாக ஐதீகம் உண்டு" இந்தத் தினத்தில் முருகனை வழிபாடு செய்பவர்களுக்குப் புத்திர பாக்கியமும் கிடைக்கின்றது.

"அருவமும் உருவமாகிஅநாதியாய்ப் பல வாயொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரணடுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

உலகமுய்யும் வண்ணமாய் உதித்தவன் ஒரு திருமுருகன். முருகப் பெருமானுக்கு ஆறு திருமுகங்கள், பன்னிரண்டு திருக்கரங்கள். இவையனைத்தும் கருணைகூர் முகங்களும் கரங்களுமாகும்.

சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறுதீப்பொறிகள் தோன்றி சரவணப் பொய்கையில் சங்கமமாக, கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் சீராட்டித் தாலாட்டி வளர்த்த வேளையில் ஆறு பாலகரையும் ஒன்றாக அணைத்து மகிழ்ந்தாள் உமையவள். உமையவளின் அரவணைப்பில் ஒருருவமாகிக் கந்தன் உருவில் தோன்றியவன் முருகன்

சூரபனமனுடைய நிட்டுரங்களைச் சகிக்கமுடியாத தேவர்கள், கண்ணுதற் பெருங்கடவுளை நண்ணி நின்றனர். எப்பெருமான் அவர்களுக்கிரங்கினார். ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமம், சத்தியோசாதம், பிரணவம் ஆகிய ஆறு திருமுகங்களுடன் அவர்கள் முன் தோன்றியருளினார். அந்த ஆறு திருமுகங்களினினறுந் தோன்றிய பொறிகள் தான் சரவணத்தையடைந்து ஆறுமுகக் கடவுளாகின கருணையுள்ள கந்தனாகிய முருகப் பெருமானின் தோற்ற வரலாறு இவ்வாறு அமைகின்றது.

தேவரிடம் கந்தனின் கருணை கூர் முகங்களாலும் பன்னிரு விழிகளாலும் நோக்கஞ்செய்கின்றன. சூரனுடலறவாரி சுவறிடவேலை விடவலபெருமாள்" என்று திருப்புகழிலே சிறப்பிக்கப்படு கின்றார். தாரகன், சிங்கன், சூரன் ஆகியோரை அடக்கிய கதையின் தனிமுதற் பரம்பொருள் முருகப் பெருமானேயாவார் சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல் என்ற வரிகளுக்கு இன்றும் தனிப் பெரும் தெய்வமாக நின்று பெருமை பெற்றவன் முருகன்.

அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும் சூரபத்மனாகிய அஞ்ஞானத்தை மெய்ஞான வேற்படை வென்றது. அவனது தீய இயல்பு அழிந்து சேவலும் மயிலுமாக முருகப் பெருமானுக்குத் தொண்டு செய்து சூரபத்மன் அழியாநிலைபெற்றான் என்று கந்தபுராணம் கூறும். அதுவே சூரன் போர்.

முருகன் புகழ்பாடி பேறு பெற்ற எண்ணற்றவர்களுள் முதன்மையானவர்கள் அகத்திய மாமுனி, ஔவையார், நக்கீரர், அருணகிரிநாதா, பாம்பன் குருதாச சுவாமி, இராமலிங்க வள்ளலார், போன்றோராவர். தன் பக்தர்களுக்கு காட்சி கொடுத்து அருள் புரிவது முருகப் பெருமானின் சிறப்பாகும்.



எல்லோரும் விரும்பும் முருகன் குழந்தைகளுக்கு வேலனாகவும், இளைஞர்களுக்கு பாலசுப்பிரமணியனாகவும், கலைஞர்களுக்கு ஆறுமுகம் கொண்ட அண்ணலாகவும், வீரர்களுக்கு தேவசேனாதிபதியாகவும், மந்திரோபதேசம் பெறவிரும்புபவர்களுக்கு சுவாமிநாதனாகவும், இல்லறவாழ்வினர்களுக்கு வள்ளி, தெய்வானை உடனான சிவசுப்பிரமணிய சுவாமியாகவும், பற்றற்றவருக்குப் பழனி யாண்டவராகவும் திருமேனி கொள்கிறார்.

ஐந்து முகங்களையுடைய சிவப்பரம் பொருளினால் தோற்றுவிக்கப்பட்டவன் ஆறுமுகன். முருகனைச் செந்தமிழாலும் பாடி வழிபடலாம், கொடுந்தமிழாலும் பாடலாம் ஏனெனில் தமிழாலே நிந்தித்து பாடினாலும் அதனைப் பெருமனதோடு ஏற்றருள்பவன் முருகன். இதனாலேயே முத்தமிழழால் வைதாரையும்அங்குவாழவைப்போன் என்கிறார். அருணகிரிநாதர்.

செயலாலே தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்று கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுவார்.

முருகனை வலிமையும் அழகும், அருளும், அன்பும் பொருந்திய பெருங்கடவுள் என்ற கருத்தில் கந்த புராணம் காவிய நாயகனாகப் பாடுகின்றது.

இந்தக் கலியுகம் எனபது தீமைகளுக்குஇடமளிக்கும்யுகமாகும். உறுதியைக் குலைத்து உண்மை மறைக்கப் படும் யுகம் இது.

இது கலியுகத்தின் கோலம். இந்தக் கோலத்தில அகப்படாதவாறு காவல் செய்து காப்பாற்றும் கருணை வள்ளலாகக் காட்சி தருகிறான் முருகப்பெருமான். கலியுகவரதனாகிய கந்தன் ஆன்ம கோடிகள் உய்யும் பொருட்டு திருவிளையாடல் புரிந்து கொண்டேயிருக்கிறான். ஆறு படை வீடுகளிலும், ஈழமணித்திருநாட்டில் கதிர்காமத்திலும், மாவிட்டபுரத்திலும், நல்லூரிலும், செல்வச் சந்நிதியிலும் கந்த வனக்கடவையிலும், மண்டூரிலும் எழுந்தருளி தமிழ்மக்களின் கண்கண்ட தெய்வமாக தமிழ்க் கடவுளாக அருள் செய்கின்றான். வைகாசி விசாகத் திருநாளிலும் முருகளை வழிபடுவோம் வழிபட்டு வாழ்வோமாக

---

# வளங்கள் பல வழங்கும் ஆறுமுகன் அவதரித்த வைகாசி விசாகம்*

வியாகணசிரோமணி
பூரண.தியாகராஜக்குருக்கள்

இருப்பதேழு நட்சத்திரங்களில் ஒன்று விசாகம். மாதம் ஒரு முறை விசாகம் வந்தாலும் வைகாசி விசாகம் தனிச்சிறப்புடையது. ஆறு முகனான முருகன் பிறந்த நாள் வைகாசி விசாகம் ஆகும். இந்த நாள் முருகன் கோயில்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக திருச்செந்தூரில் கொண்டாடப்படும். வைகாசி வசாகம் மிக மிகச் சிறப்புடையது. ஏனென்றால் திருச்செந்தூர் கோயிலில் முருகன் அறு முகனாக வீற்றி ருக்கிறான் அன்றைய தினம் பல்லாயிரம் பக்தர்கள் திருச்செந்தூரில் கூடுவார்கள் முருகனின் பிறப்புப் பற்றிய புரா ணக் கதை வருமாறு.

சிவபெருமான் மன்மதனை எரிக்க நெற்றிக் கண்ணைத் திறந்தார். நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட நெருப்பு மன்மதனைச் சுட்டு எரித்துச் சாம்பலாக்கியது. அதன்பின்னும் நெற்றிக் கண்ணிலிருந்து நெருப்பு பொங்கிக் கொண்டிருந்தது. ஈரேழு உலகமும் எரிந்துவிடுமே என்று அஞ்சிய தேவர்கள் அவர் நெற்றிக் கண்ணை சற்றே உயர்த்த ஆறு நெருப்புப் பொறிகள் சரவணப் பொய்கையில் போய்ச் சேர்க்கப்படுகின்றன. நெருப்புப் பொறிகள் குளிர்ந்து ஆறு குழந்தைகளாக ஆயின. ஆறு கார்த்திகைப் பெண்கள்அந்தக் குழந்தைகளை எடுத்துவந்தனர். சிவபெருமானின் நெற்றியில் தோன்றிய நெருப்புப் பொறிகள் குழந்தைகளாக மாறிய செய்தி பார்வதிதேவிக்கு எட்டியது. உடனே பார்வதி சரவணப் பொய்கைக்கு வந்து ஆறு குழந்தைகளையும் அள்ளி எடுத்து ஒரு முகமாக்கிப் பால் கொடுத்தாள். இதனால் அந்தக்குழந்தை சிவன் பார்வதியின் குழந்தையாயிற்று.



குழந்தை மிக அழகாக இருந்ததால் முருகன (அழகன்) என்று அழைத்தார்கள். சிவன் பார்வதியின் குழந்தை என்பதால் குமரன் என்று கூப்பிட்டார்கள் ஆறுமுகத்துடன் இருந்ததால் ஆறுமுகன் என்றார்கள் சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணன் என்றும் பெயர் பெற்றான். நெருப்பில் பிறந்ததால் சேயோன் (சிவந்தவன்) என்றார்கள்.

சேய் என்றால் குழந்தை என்று பொருள் சிவன் பார்வதியின் குழந்தை என்பதால் சேயோன் என்றும் அழைத்தார்கள்.

கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்ததால் கார்த்தீ[illegible] கார்த்திகேயன். கார்த்திகைப்பாலன் என்றெல்லாம் பெயர்கள் ஏற்பட்டன. பிற்காலத்தில் வேல் கொண்டதால் வேலன் என்றும் மயில் ஏறியதால் மயில்வாகனன் என்றும் வள்ளியை மணந்ததால் வள்ளி மணாளன் எனறும் வாய் நிறைய அழைத்தார்கள். சரவணப் பொய்கையில் ஆறுமுகன் தோன்றியது வைகாசி விசாக நன்னாளில். எனவே வைகாசி விசாகம் முருகனின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது.

முருகன் பிறந்த நாள் என்பது மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. அதனாலெயே முருகன் கோயில்களில் அன்று பூராவுமே திருவிழாத்தான். அடியவர்களும் காவடி எடுத்தும் பால்குடம் எடுத்தும் தங்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவார்கள் இத்துணை சிறப்பு மிக்க வைகாசி விசாக நன்னாளிலே நாமும் குழந்தைக் கடவுளான முருகப்பெருமானை வழிபட்டு அவனருளாலே பூரணமான ஆனந்தமான வாழ்வு வாழ்வோமாக.

> சரவணப் பொய்கையில் ஆறுமுகன் தோன்றியது வைகாசி விசாக நன்னாளில் எனவே வைகாசி விசாகம் முருகனின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. முருகன் பிறந்த நாள் என்பது மகிழ்ச்சியாக கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. அதனாலெயே முருகன் கோயில்களில் அன்று பூராவுமே திருவிழாத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பவளவிழாக் காணும் முத்தமிழ்க் காவலர்

திருமதி த.மனோகரன்

தனித்துவமானதகைமைகள்கொண்ட தலைசிறந்த மனிதரின் சேவைகளைப் போற்றித் தலைசிறந்த விழாவெடுத்த விழாக்குழுவின் தனித்திறனைப் பாராட்டவேண்டியது நம் தலையாய கடன். கடந்த சனிக்கிழமை மாலை ஆறுமணியளவில் லண்டன் அல்பேர்ட்டன் பாடசாலையில் கலாநிதி இரத்தினம் நித்தியானந்தனுக்குப் பவளவிழா கொண்டாடப்பட்டது. இதனைப் பல நண்பர்கள் சேர்ந்து மிகச்சிறந்த முறையில் வடிவமைத்து இன்ப அதிர்ச்சியூட்டும் விழாவாக அற்புதமாக நடத்தினர்.

**நேரக் கட்டுப்பாட்டுடன் நிகழ்வுகள்**

விழா நிகழ்ச்சிகள் சரியான நேரக்கட்டுப்பாட்டுடன் நடைபெற்றது. பேசுவதற்கு மூன்று நிமிடமே ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டது. ஆனாலும், பல ஆண்டுகள் நித்தியுடன் பழகி நிறைய விசயங்களைத் தெரிந்துள்ளவர்களால் மூன்று நிமிடத்தில் நிறைவு செய்ய முடிய வில்லை. நிகழ்வில் பங்கு கொள்ளமுடியாது இருக்கும் நித்தியின் நெருங்கிய உறவினர்களின் நண்பர்களின் வாழ்த்துச் செய்திகள் ஒளிப்பதிவாகி இடையிடையே வெள்ளித்திரையில் காண்மியம் செய்யப்பட்டது. நித்தியானந்தனின் பாசமிகு தங்கை திருமதிஅருந்தவேஸ்வரிசிவசுப்பிரமணியம் தங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் அண்ணன் விளங்கித் தங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்தார் எனப் பாசத்தோடு உருக்கத்தோடும் தன் வாழ்த்தைக் கூறினார். சில நண்பர்கள் கொடுக்கப்பட்ட நேரத்தில் எப்படியெல்லாம் தங்களுக்கு உதவினார் என்று நன்றியுடன் நினைவு கூர்ந்து பாராட்டினார். குறிப்பாகத் திருமதி வேற்பிள்ளை மருத்துவத்துறைக்கான தேர்வில் விஞ்ஞானப் பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கும்போது சூடான கிளாசைத் தவறுதலாக உடைதது்த் திகைத்து நின்றபோது பரீட்சகராக இருந்த நித்தியானந்தன் உடனே புதிய கிளாஸ் கொடுத்துதவியதால் தான் பரீட்சையில் தேறியதாகவும் அது என்றும் மறக்க முடியாத சந்தர்ப்பம் என்றும் கூறி வாழ்த்தினார். கொழும்புக்குப் பயணம்மேற்கொள்ளும் தவறாது தம்மைச் சந்தித்து மகிழ்வாக உரை பகரும் நட்பின் பெருமையைப் பாராட்டிச் சில நண்பர்கள் வாழ்த்தினர். திருமதி சறோஜினி தேவி நித்தியா னந்தன் குடும்பத்தினரும் ஊரில் இருந்து வாழ்த்தியதையும் திரையில் கண்டு மகிழ முடிந்தது.

லண்டனில் நித்தியாணந்தனின்அரும் பெரும் பணியை அவருடன் நீண்ட காலம் பழகிய நண்பர்க்ள அவருடைய உதவி பெற்றுயர்ந்தோர் யாவரும் விதந்துரைத்தனர். இவர் தனது ஐம்பதாவது வயதிலேயே பதவியிலிருந்து இடைவிலகிக் கொண்டு தமிழுக்கும் கலைக்கும் சமூகத்துக்கும் பணியாற்ற ஆரம்பித்தார். இன்றுவரை அவரது பணிகள் பன்முகத்துறையில் தொடர்கின்றது. மேலும் தொடர வாழ்த்துவோம். முப்பது ஆண்டுகளாகத் தலைமை ஆசிரியராக ஆரம்பகாலத்தில் நாளாந்தம் ஏற்பட்ட பிரச்சினைகளையெல்லாம் எவ்வாறு இலாவகமாகச் சமாளித்தார் என்று கணேஷ்வரன் குறிப்பிட்டார். வழக்கமாகச் சபையில் கவிதைமழை பொழியும் புலவர் சிவானந்தன் சில வார்த்தைகளில் வாயார வாழ்த்தியமர்ந்தார். தன்னை எப்போதும் எழுதும்படி ஊக்கமளித்துக் கொண்டிருப்பவர் எனக்குறிப்பிட்டார். எல்லா எழுத்தாளர்களுக்கும் இதனை முன்மொழிவதில் முதன்மையானவராக நித்தியானந்தம் இருப்பதனையும் அவர் சொல்லத் தவறவில்லை.

**பேச்சுப் போட்டி**

தமிழ்ப் பள்ளி நடத்தியதோடு மட்டுமல்ல லண்டனிலுள்ள பாடசாலைகளுக்கு இடையே பேச்சுப் போட்டியை முதன்முதலாக நடத்தியதுடன் தலைமை ஆசிரிராய் கடமை ஆற்றும்வரை அதனை மேற்கொண்டேயிருந்தார். க.பொ.த சாதாரண, உயர்தரத் தேர்வுகளை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினூடாக 1991ஆம் ஆண்டு ஆரம்பித்து லண்டனில் எல்லாத் தமிழ்ப்பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றி தேர்ச்சி பெற வாய்ப்பளித்த பெருமையும் இவரையே சாரும்.

கலைகள் வளர இவர் செய்த பணிகளையும் மூத்த கலைஞர் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி விதந்துரைத்தார். பல சிறந்த கலைஞர்களைத் தமிழ் நாட்டிலிருந்தும், தமிழ் ஈழத்திலிருந்தும் வரவழைத்தார். கலைகளைக் கற்பவர்களுக்கான தேர்வு நடத்தும் முறையும் அறிமுகம் செய்தார்.

லண்டனில் சன்ரைஸ் ரேடியோவில் முதல்முதல் தமிழ் ஒலிபரப்பை ஆரம்பித்த பெருமையும் இவரையே சாரும். அக் காலத்தில் செய்தி வாசிப்பவர்களாக நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக விளங்கிய சிறி ரங்கன், நடாமோகன் ஆனந்தராணி, யோகா தில்லைநாதன் ஆகியோர் தமது அனுபவங்களையும் அதனால் தாம் பெற்ற பயனையும் நன்றியுடன் மனம் நெகிழ்ந்து வெளிப்படுத்தினர்.

ஜெகதீஸ்வரம் பிள்ளை தான் ஒரு தமிழ்ப்பள்ளி ஆரம்பிக்க எண்ணிய போது நித்தியானந்தனின் அறிவுரைகள் வழிகாட்டிய வழிமுறைகள் யாவுமே போற்றத்தக்கது என்று கூறினார்.

வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பதைப் போல நித்தியானந்தனின் விடாமுயற்சியையும், எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் தன்மையையும் பள்ளிப்பருவத்திலிருந்தே பழகிய நண்பர்கள் குறிப்பிட்டு மகிழ்ந்தனர். தந்தையார் பள்ளிக்குப் போகும் போது கைச்செலவுக்குக் கொடுக்கும் சில்லறைக் காசில் 10 சதம் ஆக ஒவ்வொரு நாளும் சேமித்துக் கொண்டு ஒரு கைக்கடிகாரம் வாங்கினாராம். அப்போதே பிறர் வியந்து பாராட்டு வகையில் வாழ்ந்தார் என்பதை அறிய முடிகிறது.


பேராதனைப் பல்கலைக்கழக வாழ்வையும் நினைவூட்டும் வகையில் முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த தில்லைநாதன் தனது மகள் துளசிக்கு வானொலி அறிவிப்பாளராகச் சிறுவயதிலேயே அனுபவம் தந்தவர் என நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

"லண்டனில் முத்தமிழை வளர்க்க அயராது பாடுபட்ட இவரை "முத்தமிழ்க் காவலர்" என்றால் மிகையாகாது".

தமிழ் ஆசிரியை
திருவள்ளுவர் தமிழ் பாடசாலை

## நீங்கா நினைவுகளுடன்

**இரண்டாம் ஆண்டு** | **8 ஆம் ஆண்டு**







**யேமிஸ் பிரான்சிஸ் சேவியர்**
**(துரைசிங்கம்)**

**திருமதி லூர்த்தம்மா (தங்கமணி)**
**பிரான்சிஸ் சேவியர்**

**27.04.1933 பிறப்பு 27.03.1942**
**07.06.2015 இறப்பு 27.03.2009**

அன்பிற்கும் பண்பிற்கும் அயராத உழைப்பிற்கும்
இனிய குடும்ப வாழ்விற்கும்
முன்னுதாரணமாய்த் திகழ்ந்து
வாழ்வாங்கு வாழ்ந்து எமை வாழ வழிகாட்டிய
உயிருக்கு உயிரான எம் அம்மா ! ஐயா !
உறவுகளை இன்முகத்தோடு வரவேற்று

புன்னகையுடன் விருந்தோம்பி
என்றென்றும் நம் நல் வாழ்விற்காகத்
தேட்டங்கள் தேடி எமை நலமே வாழவைத்த
தெய்வச்சுடர்களே ! ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் பசுமையான நினைவுகளை எம் நெஞ்சில் நிறுத்தி.
நிதமும் வாழ்கிறோம் !

உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**5ஆம் வட்டாரம், இரணைப்பாலை,**
**புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.**

(J 1840)
(14,17,18)

**என்றும் உம் நினைவுடன் வாழும்:**
**செல்வநாதன் மேரி இசபெல்(லில்லி) குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# கருகும் மொட்டுக்கள்

மருத்துவர் ஆ.பேரின்பநாதன்

யாழ். குடாநாட்டைப்பொறுத்த வரை சிறுவர்கள் பாது காப்பற்றவர்களாகவே உள்ளனர். எமது குடும்ப அமைப்பு, பண்டைய பண்பாடு, கலாசாரப் பிறழ்வுகளே இதற்குக் காரணம். குடும்ப அமைப்புப் பற்றிக் கருத்துரைக்கும் ஐக்கிய நாடுகள் சபை, "ஒரே கூரையால் பாதுகாக்கப்பட்ட இதயங்களின் இணைப்புத்தான் குடும்பம். அன்பு, பரிவு, பாதுகாப்புணர்வு, ஒன்றுபட்ட வாழ்வு, சகிப்புத்தன்மை ஆகியவற்றின் உறைவிடம்தான் குடும்பம்" என்று வரைவிலக்கணம் கூறுகிறது. தற்கால விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, கைப்பேசி, இணையத்தளப் பாவனை ஆகியவற்றால் தீவிரமாக மாறிவரும் அரசியல், பொருளியல், சமூகச் சூழல், குடும்பம் என்ற கட்டமைப்பில் தலைவிரித்தாடும் பிரச்சினைகள் எண்ணிலடங்காதவை.

மேலும், எம் பண்டைய மரபார்ந்த கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை மறைந்து தனிக்குடித்தன வாழ்க்கை முறையின் வருகை, பொருளாதாரச் சிக்கலைச் சீர் செய்ய கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்வதுமான மாற்றங்களை தந்துள்ளது. பிள்ளைகளைப் பாது காப்பு மையங்களில் விட்டுச் செல்வதும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களுடன் பிள்ளைகளை விட்டுச் சென்று வேலியே பயிர் மேய்ந்த வரலாற்றின் கதை வெளிகளை நாம் ஊடகங்களூடாகத் தினமும் தரிசிக்கிறோம். குடும்பங்களின் அவசர அவகாசமற்ற வாழ்வுச் சூழலானது, மகிழ்ச்சியை மழுங்கடித்து விடுகிறது. மக்களில் 70 வீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 40 ஆயிரம் பேரும், வடக்கு மாகாணத்தில் 41 ஆயிரம் பேரும் போரினால் கணவனைப் பறிகொடுத்த கைம்பெண்கள். இவர்களில் அதிகம் பேர் வாழ்வாதாரப் பிரச்சினையில் வறுமையின் எல்லைக்கோட்டில் பிள்ளைகளுக்கு ஒரு நேர உணவு வழங்க முடியாது பசியுடன் படுக்கைக்குப் போகிறார்கள். தாயும் பிள்ளைகளும் தற்கொலை செய்கிறார்கள். கொடிது, கொடிது இளமையில் வறுமை மிகக் கொடிது. அனைத்தினதும் பெறுபேறே எம் இளம் தலைமுறையிரனர் எதிர்கொண்டுள்ள இம்சைகள். இதற்கு விடுதலை காண்போமா?

**இலங்கையில் கருகும் கருக்கள்**

இலங்கையில் கருக்கலைப்புச் சட்டவிரோதமானது. இருந்தபோதும், வெளிநாடுகளில் நாகரிகமாகக்கருதப்படும் கருக்கலைப்பானது இலங்கையிலும் மழைமூட்டமாகக் கருக்கொள்ள ஆரம்பித்துவிட்டது. இன்று பயிற்றப்படாதோரால் செய்யப்படும் கருக்கலைப்புச் செயன்முறைகள் வருடம் 3 லட்சத்தைத் தாண்டியுள்ளது. இது தினம் 500 தொடக்கம் 800 வரை நிகழ்வுறுவதாகச் சொல்லப்படுகின்றது. தவறான தொடர்புகள் போன்ற கருத்தடைச் சாதனம் பற்றிய விழிப்புணர்வின்மை, வறுமை என்பன காரணமாகும். இதிற் பெரும்பாலானோர் 15 வயதுடையவர்கள். இதனால், சிசு உயிரிழப்புக்கள் மட்டுமன்றித் தாய்மாரின் அவலச் சாவும் அதிகரிக்கின்றன. உலகம் முழுவதும் ஆண்டுக்கு 21 கோடி பெண்கள் கர்ப்பமடைவதாகவும், அதில் மூன்றில் ஒரு பங்கினர் தகாத உறவின் மூலம் கர்ப்பமடைவதாகவும், அதில் 34 கோடி பெண்கள் கருக்கலைப்புச் செய்வதாகவும், இவர்களில்ஒரு வீதமானவர் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கருக்கலைப்புக்களால் வருடாந்தம் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாய்மார்கள் உயிர் இழப்பதாகவும் 5 லட்சம் பேர் பால் உறுப்பு நோய்களால் பாதிக்கப்படுவதாயும் உலக சுகாதார ஸ்தாபன அறிக்கைகள் கூறுகின்றன. எமது நாட்டின் போர்ச் சூழலும் கருக்கலைப்பை அதிகமாக்கியுள்ளது. உலக நாடுகளில் 79 நாடுகள் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கியுள்ளன. இதனை மனித உரிமைகள் சுகாதார அமைப்புக்கள் கண்டும் காணாது விட்டுள்ளன. இந்தத் தகவல்கள் யாவும் எதைச் சுட்டுகின்றதென்றால், ஓர் உயிர், தான் உயிர்வாழும் உரிமையைக் கருவுற்றபோதே இழப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. கணவன் மனைவிக்கிடையில் சண்டை ஏற்படும் பொழுதும் அப்பாவிப் பிள்ளைகள் பலியாகின்றனர் பாதிக்கப்படுகின்றனர்.



**சிறுவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

பெண்களினதும், ஆண்களினதும் ஆத்ம கௌரவத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தும் வகையில், அவர்களின் விருப்பம், தூண்டுதல் இன்றி மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் ரீதியிலான நடத்தையே பாலியல் துன்புறுத்தலாகும். பாலியல் துன்புறுத்தல்களுக்கான சார்பு நிலை உதாரணங்கள் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

01. கட்புலனானவை
சுவரொட்டிகள், சிறுகுறிப்புகள், கிறுக்கல்கள், ஆபாசப் புகைப்படங்களைக் காட்சிப்படுத்தல், சமிக்ஞைகள் காட்டுதல், பாலியல் மின்னஞ்சல் தகவல்களைப் பரிமாறுதல், பாலியல் உறுப்புகளைக் காட்சிப்படுத்தல் என்பனவாகும்.

02. வாய்மொழி மூலானவை
பாலியல் ரீதியிலான அநாகரிக தவறான மொழிநடை, ஆபாசப் பேச்சுக்கள், பாலியல் விடயங்களை இரட்டை அர்த்தத்தில் பேசுதல், தொல்லைதரும் கைபேசி அழைப்புகள், கடிதங்கள், ஆபாச வதந்திகள், ஒருவரின் உடல், பாலியல் உறுப்புக்கள், குறைபாடுகள் பற்றி விமர்சித்தல் மற்றும் பழிச்சொற்கள், அவதூறுகள் என்பவற்றைக் குறிப்பிட லாம்.

03. உணர்வு ரீதியானவை
கிள்ளுதல், தடவுதல், நசித்தல் முத்தமிடுதல், நடமாட்டங்களைத் தடுத்தல், தொடர்ந்து தொந்தரவு செய்தல், பாலியல் உறுப்புக்களை உடம்பின் பகுதிகளிற் படவைத்தல் மற்றும் பாலியல் வன்புணர்வு செயற்பாடுகள் பஸ் வண்டியில் விருப்பமின்றி இடம்பெறக் கூடிய பாலியல் தன்மையைக் கொண்ட நடத்தைப்பரிமாணங்களாக அமையப் பெறுகின்றன.

04. பாலியல் தொடர்புக்காக வாய் மூலமாகவோ, செயல் மூலமாகவோ மேற்கொள்ளப்படும் அழுத்தம் அல்லது கோரிக்கை.

05. சம்பவத்துக்கு உள்ளாவோருக்கு அச்சுறுத்தலான, எதிரான அல்லது அவமானமான சுற்றுச்சூழலை உருவாக்கும் நடத்தை

இத்தகைய செயலுக்கு அல்லது நடத்தைக்கு நீங்களோ அல்லது உங்களுக்கு அருகில் இருப்பவர் முகங்கொடுத்தால், உடனடியாக என்ன செய்வது?

01. தமது விருப்பமின்மையைத் தெரிவித்தல்.

02. உடனடியாக அதனை நிறுத்துமாறு அறிவித்தல். அத்தகைய செயற்பாடுகள் பஸ் வண்டியில் அநாவசியமானவை எனவும், தடையெனவும், சட்டத்துக்கு முரணானவை எனவும் அறிவித்தல்.

03. தொந்தரவு செய்பவர் வேண்டுமென்றே அவ்வாறு செய்கின்றார் என்பது தொடர்பாக உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், உடனடியாக அவ்விடத்தை விட்டு விலகவும் அல்லது தேவையான அளவு இடைவெளியைப் பேணுமாறு அவரிடம் கூறவும்.

04. பஸ் வண்டியின் சாரதிக்கு அல்லது நடத்துநருக்கு அறிவிக்கவும்.

05. அழைக்கக்கூடிய, உதவி பெறக்கூடிய அவசரத்தேவை இலக்கமொன்றிருந்தால் உடனடியாக அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்கவும்.

06. பஸ் வண்டியில் தொந்தரவுக்கு உள்ளாகக்கூடிய சந்தர்ப்பமொன்றில் ஏனையோரின் கவனத்தை ஈர்ப்பதற்காக மணியைத் தொடர்ந்து அடிக்கவும்.

ஆக நீங்கள் இனியும் தனியே அமைதியாக இருந்து பஸ் வண்டியினுள் இடம்பெறும் பாலியல் சேட்டைகளால், தொந்தரவுகளால் துன்பப்பட வேண்டிய அவசியமில்லை. உங்களை வலுப்பெறச் செய்து கொள்ளுங்கள்.

**உங்கள் கவனத்துக்கு!**

பஸ்வண்டியில்பாலியல்தொந்தரவுகளுக்கு முகங்கொடுக்கும் அல்லது முகங்கொடுத்த நீங்கள் தவிர்க்க வேண்டியவைகள்.

01. எவ்வேளையிலும்தாம் அச்சம்கொண்டிருப்பதாக உணர்த்த வேண்டாம்.

02. வெட்கத்தில் அமைதியாக இருப்பதாக உணர்த்த வேண்டாம்.

03. தொந்தரவு செய்வோரின் அழுத்தங்களுக்கு உள்ளாக வேண்டாம்.

04. அவர்களுக்குத் தேவயானவற்றைச் செய்வதற்கு இடமளித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

05. வேறு ஒருவர் துன்புறுத்தலுக்கு உள்ளாவதைக் கண்டும் காணாததுபோல் இருக்கவோ அல்லது துன்புறுத்தல்களைச் செய்வோருக்கு இடமளித்துக்கொண்டோ இருக்கவேண்டாம். துன்புறுத்தலானது இலங்கைச்சட்டத்தின்கீழ்ஒருகுற்றமாகும்.

“ எமது நாட்டின் போர்ச் சூழலும் கருக்கலைப்பை அதிகமாக்கியுள்ளது. உலக நாடுகளில் 79 நாடுகள் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கியுள்ளன. இதனை மனித உரிமைகள் சுகாதார அமைப்புக்கள் கண்டும் காணாது விட்டுள்ளன. இந்தத் தகவல்கள் யாவும் எதைச் சுட்டுகின்றதென்றால், ஓர் உயிர், தான் உயிர்வாழும் உரிமையைக் கருவுற்றபோதே இழப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கருந்துளைகள்.....!

## விண்வெளியின் சிநேகமான வலிமையாளன்



கருந்துளை என்பது விண்வெளியிலுள்ள வலிமைமிக்கதும் அதிக ஈர்ப்புவிசை கொண்டதுமான ஒரு பொருளாகும். நாம் அறிந்து கொண்டதான பொருள்களிலேயே நொடிக்கு 3 லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடிய ஒளியாகும். கருந்துளையின் ஈர்ப்புவிசையிலிருந்து ஒளி கூடத் தப்ப முடியாது எனச் சொல்லப்படுகிறது. ஒளியே கருந்துளையின் ஈர்ப்புவிசையிலிருந்து தப்பமுடியாதென்றால் வேறு எந்தப்பொருளும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது.

கருந்துளைஎன்பதுதுளையோஅல்லதுவெற்றிடமோ அல்ல. அவை எப்போதும் மிகச்சிறிய இடத்திலே அதிகமாக ஒன்றுகூட்டி வைக்கப்பட்டதான பலபொருள்களின் தொகுப்பாகும். மிகக்குறைந்தளவான இடத்திலே அதிகளவான பொருள்கள் அதிக அழுத்தத்துடன் அடக்கிவைக்கப்படும்போது அவற்றின் ஈர்ப்புவிசையானது அதிகமாகும்.




எனவே கருந்துளைகள் தம்மைச் சுற்றியுள்ளதான அனைத்துப் பொருள்களையும் அதிகவிசையுடன் ஈர்க்கும். அதை ஏன் கருந்துளை என்கிறோம். உண்மையிலே கருந்துளைகள் விண்வெளியில் எவ்விதமான ஒளியையும் வெளிவிடுவதில்லை என்பதுடன் கருநிறத்திலுள்ள ஒருதுளை போன்று தோற்றமளிப்பதாலும் இவை கருந்துளைகள் என அழைக்கப்படுகின்றன.

### கருந்துளைகளின் உருவாக்கம்

பெரிய விண்மீனின் எரிபொருள் தீர்ந்துவிடும் போது அந்த விண்மீனால் அதன் நிறையைக் கூடத் தாங்க முடியாது. விண்மீனிலுள்ள ஐதரசன் (Hydrogen) அடுக்குகள் விண்மீனின் மீது அதிக அழுத்தத்தைக் கொடுக்கும். இவ்வழுத்தத்தினால் விண்மீன் சுருங்கி அளவில் சிறியதாகும். இறுதியில் விண்மீன் அணுவைவிட (Atom) மிகச் சிறியதாகும். ஒரு பெரிய விண்மீன் சுருங்கி அணுவைவிடச் சிறியதாகும் போது அதன் அடர்த்தியும், ஈர்ப்புவிசையும் மிகமிக அதிகமாகிக் கருந்துளைகள் உருவாகின்றது. இந்த அதீத ஈர்ப்புவிசையால் அது தன்னைச் சுற்றியுள்ளதான அனைத்துப்பொருள்களையும் தன்னுள்ளாய் ஈர்த்துக்கொள்கிறது.

விண்மீன்கள் மிகச்சிறியதாகும் போது எடை (Highlight) குறையுமா..?

இல்லை. ஒரு விண்மீன் சுருங்கிக் கருந்துளையானால் அதன் நிறை குறையாது. சிறிதளவு பஞ்சைக் கையில் எடுத்துக்கொண்டு அதை நன்றாகச்சுருட்டிச் சிறியதாக்கினாலும் அதன் எடை குறையாதது போலவே விண்மீன்கள் சிறியதானாலும் அதன் எடை என்பது எப்போதும் குறையாது.

### கருந்துளைகளின் பருமன்

கருந்துளைகளின் அளவு என்பது அவற்றில் எந்த அளவான பொருள்கள் உள்ளடங்கியுள்ளன என்பதைப் பொறுத்து வேறுபடுகிறது. மிகப்பெரிய வீண்மீன்கள் அழிந்து அவற்றின் எச்சங்கள் கருந்துளைகளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. சூரியனைவிடச் சிலமடங்கு பெரிய கருந்துளைகள் உள்ளன.

இவற்றை ஏனைய கருந்துளைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அளவில் மிகச்சிறியதாக விளங்குகின்றது. சில விண்மீன் மண்டலங்களின் (Galaxy) மையத்தில் சில கருந்துளைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை சூரியனில் உள்ளதான பொருள்களை விடவும் 100 மில்லியன் மடங்கு அளவுடையதான பொருள்களையோ அல்லது அதைவிட அதிகமான பொர்ருள்களையோ கொண்டிருக்கும் எனச் சொல்லப்படுகிறது.

### கருந்துளைகளைப் பார்த்தல்

கருந்துளைகளை ஒருபோதும் பார்க்கமுடியாது. ஆனாலும் விண்வெளியாளர்களால் கருந்துளைகள் உள்ள இடத்தினைக் கண்டறியமுடியும். கருந்துளைகள் எப்போதும் தம்மைச் சுற்றியுள்ள பொருள்களை அதிக வேகத்தில் ஈர்த்துக்கொள்வதனால் அப்பொருள்கள் அதிக வெப்பமடைந்து ஒளிக் கதிர்களை வெளியிடும். இந்த ஒளிக் கதிர்களைப் புவியிலிருந்து கண்டறியலாம்.

பால்வீதியின் (Milky Way) மையத்தில் கருந்துளைகள் (Highlight)


எங்களுடையதான பால்வீதியின் மையத்திலே மிகப்பெரிய கருந்துளை ஒன்று உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவை சூரியனைவிடவும் 3 மில்லியன் மடங்கான நிறையைக் கொண்டுள்ளது. புவியிலிருந்து 24 ஆயிரம் ஒளி ஆண்டுகள் (Light Years) தொலைவாக உள்ளது. இக் கருந்துளைகள் புவியிலிருந்து மிகத்தொலைவாகவுள்ளதால் எமக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லை.

### சூரியன் கருந்துளையாக மாற்றமுறுதல்

சூரியன் அளவில் மிகச்சிறியது. சூரியன் கருந்துளையாக மாற்றமுற வேண்டுமானால் அது இப்போது இருப்பதைவிடவும் பலமடங்கு அதிக நிறை கொண்டதாகவும், அளவில் பெரியதாகவும் இருக்கவேண்டும்.

# சூரியன்

## முழுக்கோள வடிவற்ற உருவகம்



சூரியன் ஒரு முழுக்கோளம் என்பதான எமது நம்பிக்கைகள் அண்மையில் நீர்த்துப்போயிருக்கிறது.

சூரியனின் கோளத்தன்மையை நாசா விஞ்ஞானிகள் அண்மையில் துல்லியமாக அளவிட்டுள்ளனர். இப்படி அளவீடு செய்வதற்காக Reuven Ramaty Highenergy Solar Spectroscopi Imager என்னும் விண்தொலைநோக்கியை பயன்படுத்திக் கொண்டுள்ளனர். சூரியப் புள்ளிகள் தீவிரமாக இயக்கம் பெறும் நாள்களில் சூரிய நடுக்கோட்டின் ஆரம் பத் துருவ அச்சின் ஆரத்தைக் காட்டிலும் சற்றுப் பெரியதாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சூரியனைச் சுற்றிலும் பழத்தோல் போன்றதான ஒரு பொருள் உருவாகிக் கொள்வதால் துருவப் பகுதிகளில் நசுங்கிப்போனதான கோளமாக சூரியன் தோற்றமளிக்கிறது. சூரியனின் இடுப்பு சற்றுப் பருமனடைந்திருக்கிறது என்பதே இதன் பொருள் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இந்தப் பழத்தோலின் சுருக்கம் காரணமாக சூரியன் ஒரு முழுமையான கோளமாக இல்லை என்கிற கருத்தை உறுதிப்படுத்தியுள்ளது. சூரியனின் தீப்பிழம்புகளை ஆராய்வதற்காக 2002 ஆம் ஆண்டு (Reuven Ramaty Highenergy Solar Spectroscopi Imager) என்னும் விண் தொலைநோக்கி விண்ணில் செலுத்தப்பட்டது. எக்ஸ் கதிர்களையும், காமா கதிர்களையும்பயன்படுத்தி இந்த விண்தொலைநோக்கி அளவீடுகளைச் செய்துள்ளது.

விண்மீன்களில் சூரியன் மட்டுமே மிக அதிகமான ஈர்ப்புவிசையைப் பெற்றிருக்கிறது. சூரியனின் கோள வடிவம் 0.001 சதவிகிதம் என்று இது நாள் வரையிலும் நம்பப்பட்டு வந்தது. நிமிடத்துக்கு 15 சுற்றுகள் வீதம் சுழலக் கூடிய விண்தொலைநோக்கியின் பொருளருகு துளை வழியாகச் சூரிய வட்டத்தையும், தீப்பிழம்புகளையும் கண்காணித்தபோது சூரியன் முழுமையான கோளம் இல்லை என்கிற உண்மை தற்செயலான விதமாக அறியப்பட்டுள்ளது.

இந்தப் பழத்தோல்ச் சுருக்கம் என்பது காந்தப் பண்புகளைக் கொண்டதாக விளங்குகிறது. சூரியப்பரப்பில் குமிழ்களாகப் படரும் இந்த மேற்பரப்புக்கு சுப்பர் கிறானியுவல்ஸ் (supergranules) என்று பெயரிட்டுள்ளனர். பானையில் கொதிப்பதான நீர்க்குமிழ்களைப் போன்று பிறப்பெடுக்கும் இந்த (supergranules) மெல்ல மெல்ல விண்மீன்களின் அளவுக்கு உருப்பெருக்கம் அடைகின்றது. சுப்பர் கிறானியுவல்ஸ் (supergranules) இன் அளவு என்பது பூமியைப்போல இருமடங்கானது. இவை முற்று முழுதாக காந்தப்புல பிளாஸ்மாவால் ஆனவை.

சுப்பர் கிறானியுவல்ஸ் (supergranules) இன் மையத்தில் தோன்றும் காந்தப்புலம் சிறிது சிறிதாக மேற்பரப்பை அடைகிறது. சூரியனில் ஏற்படும் காந்தப்புல மாற்றங்களால் ஜி மோட (gmode) எனப்படும் சூரிய ஈர்ப்பு விசையில் அலைவுகள் ஏற்படுகின்றன. இந்த வகையான சூரியனின் காந்தப்புல ஏற்றத்தாழ்வுகள், பூமியின் காந்தப்புலத்தை நிச்சயமாக பாதிக்கக்கூடியவை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

**சேவைநலன் பாராட்டு**

எமது பாடசாலையில்
27 வருடங்கள் வரலாறு.

புவியியல் பாடங்களின் ஆசிரியையாகச்
சேவையாற்றி இன்று (07.06.2017)
புதன்கிழமை ஓய்வுபெறும் எமது ஆசிரியை

**திருமதி**
**மேரிகெலன் கியோமர்**
**மரியதாஸ்**

அவர்களின் அளப்பரிய சேவையைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:- **பாடசாலைச் சமூகம்,**
**யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம்.**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 பொலிஸார்...

பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட 11 பேரை விளக்கமறியலில் வைக்க வடமத்திய மாகாண மேல் நீதி மன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். நிராயுதபாணிகளான அமிர்தலிங்கம் சுரேந்திரன் (வயது-14), அமிர்தலிங்கம் கஜேந்திரன் (வயது-18), முருகேசு ஜனகன் (வயது-17), நாதன் பவளநாதன் (வயது-45), சுப்பிர மணியம் திவாகரன், குணரத்தினம் சிவராஜன், ஆறுமுகம் சேகர் மற்றும் பொன்னம்பலம் கனகசபை ஆகிய எட்டுப் பேரே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களாவர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள், வடமத்திய மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் கடந்த 4ஆம் திகதியன்று முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

நிராயுதபாணிகளாக நின்றிருந்த எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், நீதிமன்றத்தின் முன்னிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் சாட்சியமளித்திருந்தார். அவரது சாட்சியத்துக்கும், சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று பொலிஸ் அதிகாரியிடம் வழங்கிய வாக்குமூலத்துக்கும் இடையில் வேறுபாடு இருந்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தரின் வாக்குமூலத்தில், உண்மைக்குப் புறம்பான விடயங்களும் உள்ளமை நீதிபதியால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்தே, தற்போது சேவையில் உள்ள பிரதிவாதிகள் 11 பேரும் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டனர். சாட்சிகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடும் என்பதனால், அந்த 11 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி கட்டளையிட்டார்.

சாதாரண குடிமக்களான தமிழர்கள் எட்டுப் பேரை சிறைப்பிடித்து, சித்திரவதை செய்து சுட்டுக்கொலை செய்தமை உள்ளிட்ட, 37 குற்றச்சாட்டுகளின் கீழ், அன்று கடமையிலிருந்த பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவர் உள்ளிட்ட 13 பேருக்கு எதிராக, அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மையும் குறிப்பிடத்தக்கதாகும்.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி காலை 5 மணிக்கும் 6 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், வயல்வெளிக்குப் பணிக்கு சென்று கொண்டிருந்தவர்களைப் பொலிஸாரும், ஊர்காவல் படையினரும், விசாரணைக்கு எனக்கூட்டிச் சென்று பொலிஸ் நிலையத்தின் முன்னால் நிற்க வைத்தனர். காரணம் ஏதுமின்றி இழுத்துச் செல்லப்பட்ட அப்பாவிகள் நிதானிக்கும் முன்பே, சுட்டுத் தள்ளப்பட்டனர். அதில், 8 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர். (த-5)

## இரண்டு...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கையளித்துள்ளது.

இந்த விசாரணை அறிக்கை பொது வெளியில் முழுமையாக, முதலமைச்சரால் பகிரங்கப்படுத்தப்படவேண்டும் என்று வடக்கு சிவில் சமூகத்தைச் சார்ந்த அதிபர்கள், மருத்துவர்கள், மனித உரிமை சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர். அத்துடன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு அமைவாக உரிய நடவடிக்கைகளை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தாமதமின்றி எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் பல்வேறு விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கொழும்பு அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்தக் கோரும் வடக்கு அரசியல் தலைமைகள், தம்மால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்த பின்நிற்கக் கூடாது என்றும், சிவில் சமூகத்தினர் சுட்டிக்காட்டு கின்றனர்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட குழு என்ற அடிப்படையில், இந்தக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது அவரது பொறுப்பே என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (த-5)

## அமைச்சர்கள்...

சி.வி.விக்னேஸ்வரனால், இரண்டு முன்னாள் நீதிபதிகள் மற்றும் முன்னாள் மாவட்டச் செயலாளர் ஆகியோர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. அத்துடன் சட்டத்தரணி ஒருவரும் இந்தக் குழுவுடன் செயற்பட்டிருந்தார்.

குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாள் அமர்வுக்கு ஒருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவேண்டும். 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதி குழு உறுப்பினர்களுக்கு வழங்க அனுமதிக்கக் கோரி, வடக்கு மாகாண ஆளுநருக்குத் தலைமைச் செயலாளர் அனுப்பிய கடிதத்துக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை என்று தெரிய வருகின்றது. இதன் காரணமாக இந்தக் கொடுப்பனவு இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, அமர்வு நடைபெற்ற நாள் ஒன்றுக்கு, உபசரணைச் செலவாக 8 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் விசாரணைக் குழுவின் கள ஆய்வுக்கு, வடக்கு மாகாண சபையின் வாகனங்களும், சாரதிகளுமே பயன்படுத்தப்பட்டுள்ளனர். (த-5-101)

## பரிந்துரைகளைச்...

ஊடக அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஜெனிவாவில் ஒப்பந்தத்தில் அரசு கைச்சாத்திட்டுள்ளது என்று மகிந்த அணி கூறுகின்றது. அவ்வாறு எந்தவொரு உடன்படிக்கையிலும் அரசு கைச்சாத்திடவில்லை. அப்போதைய அயலுறவுத்துறை அமைச்சர் என்ற வகையில் அது எனக்குத் தெரியும். நாட்டின் நலன் கருதிச் சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலுள்ள விடயங்கள், இலங்கை இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்துக்குள் உள்ளடக்கப்படவில்லை. போலித் தகவல்களை வெளியிடவேண்டாமெனக் கேட்டுக்கொள்கின்றேன். விளக்கமின்மை இருக்கும் பட்சத்தில் ஐ.நா. ஆணையாளர் அறிக்கையையும், ஜெனிவாத் தீர்மானத்தையும் வாசித்துப்பார்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் இறையாண்மையை அரசு விட்டுக்கொடுக்கவில்லை.

சகல நடவடிக்கைகளும் உள்ளகப்பொறிமுறையின் பிரகாரமே முன்னெடுக்கப்படும். மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள காயங்களைக் குணப்படுத்தி நாட்டை முன்நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும். இதை அரசு செய்யும். ஆனால், தோல்வியடைந்தவர்கள் இனங்கள் மத்தியில் மீண்டும் இனவாதத்தைப் பரப்பி வருகின்றனர் - என்றார். (த-5)

## மாகாண...

கால்நடையான மாடுகளை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது என வலியுறுத்தி மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் பிரேரணை ஒன்றை நேற்றுச் சபையில் முன்மொழிந்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித்தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் முன்மொழிந்துள்ள பிரேரணை சட்ட ஒழுங்கு சார்ந்த விடயம். ஆகவே சட்ட ஒழுங்கு அதிகாரம் எம்மிடம் இல்லாவிட்டாலும் எமக்குள்ள சில அதிகாரங்களையாவது பிரயோகிக்க முயலவேண்டும். அல்லது பொலிஸ் தரப்புடன் பேசி மாகாணத்துக்கு ஏற்ற சட்ட நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க முயற்சிகளை எடுக்கவேண்டும். ஆனால் இவ்வாறான முயற்சிகள் எவற்றையும் வடக்கு மாகாணச் சட்ட ஒழுங்கு அமைச்சராக உள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுக்கவில்லை.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் தனது மாகாணத்தில் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதற்காகச் சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

எமது மாகாணத்தில் 300 க்கும் மேற்பட்ட பிரேரணைகளை மட்டும் நிறைவேற்றி இருக்கின்றோம். ஆனால் மாவட்டச் செயலகத்தில் சட்ட ஒழுங்கு தொடர்பில் ஆராயப்பட்டுப் பல முக்கிய விடயங்கள் பேசப்படுகின்றனஎன்றார்.

இதற்குப் பதிலளித்த அவைத்தலைவர்; மாகாண முதலமைச்சர் சட்ட ஒழுங்கு தொடர்பில் இரண்டு கூட்டங்களைக் கூடியிருக்கின்றார். அத்துடன் கிழக்கு மாகாணத்துடன் வடக்கு மாகாணத்தை ஒப்பிட வேண்டாம். கிழக்கு மாகாணத்தினர் இலங்கை அரசுடன் சேர்ந்திருப்பவர்கள். அவர்கள் செய்கின்றார்கள் என்பதை இங்கு கதைக்கவேண்டாம் - என்றார்.

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் வெறுமனே இரண்டு கூட்டங்களைத்தான் கூட்டியிருக்கின்றார். அவ்வாறு அந்தக் கூட்டங்களின் ஊடாக முதலமைச்சர் என்ன செய்தார்? இங்கு ஒன்றும் நடக்கவில்லை என எதிர்க்கட்சித்தலைவர் மீண்டும் குற்றச்சாட்டை முன்வைத்தார். (த-8)

## ஐங்கரநேசன்...

இருவரும் மாகாண சபையின் நேற்றைய அமர்வில் பங்கேற்றனர்.

சபை அமர்வு ஆரம்பமாகிச் சில நிமிடங்களில் இருவரும் சபைக்குள் வந்து தமது ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். சபை நடவடிக்கைகளின் இடையே வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சபையை விட்டு வெளியேறினார். எனினும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா சபை அமர்வு முழுமையாக முடியும் வரை அங்கு இருந்தார். (த-8)

## ஆயப் பகுதி...

தாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் முதன்மைத் தபாலகத்தில் கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் ஆயப் பகுதியின் வடக்குக்கான அலுவலகம் செயற்பட்டு வருகின்றது. தற்போது புதிய அலுவலகத்தைக் காங்கேசன்துறையில் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போருக்கு முன்னர் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மன்னார் ஆகிய இடங்களில் ஆயப் பகுதிப் பணியகங்கள் இயங்கி வந்தன. போரின் பின்னர் யாழ்ப்பாணம் முதன்மைத் தபாலகத்தில் செயற்படத் தொடங்கிய ஆயப் பகுதியினர், ஊர்காவற்றுறையில் உள்ள தமது அலுவலகத்தில் தற்காலிகமாகவும் செயற்பட்டு வந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே காங்கேசன்துறையில் தனியார் காணியில் ஆயப் பகுதி தமது கிளையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. (த-5-17)

## இறக்குமதியாகும்...

அதன்படி ஒரு கிலோ கிராம் சீனிக்காக 10 ரூபா சிறப்புப் பண்ட வரி அறவிடப்படும் என்று நிதியமைச்சு தெரிவித்தது. (வ-5)

### யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பழைய மாணவருக்கான ஒன்று கூடல்

காலம்: 11.06.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பிற்பகல் 4.00 மணி
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்மற்றும் செயலாளர்,
பழையமாணவர் சங்கம்.

### மரணஅறிவித்தல்

**திருமதி வாலாம்பிகை வெற்றிவேலு**

முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் சிட்னி, ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாலாம்பிகை வெற்றிவேலு 05.06.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து வெற்றிவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அரசரட்ணம் - அன்னபாக்கியம், வைத்திலிங்கம் செகராசசிங்கம்(இளைப்பாறிய பிரதம புகையிரத நிலைய அதிபர்) சங்கரப்பிள்ளை - மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வெற்றிவேல் ஸ்ரீ சண்முகநாதன்(Solicitor London), வெற்றிவேல் அம்பிகைவேல் (Charted Accountant), விஜயாம்பிகை டயரட்ண, வெற்றிவேல் சக்திவேல் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருபா, சுமுது, டயரட்ண Dr.சாந்தினி காலஞ்சென்ற அரசரட்ணம் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிட்னியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவபூமி,
சுழிபுரம்.

தகவல்: வை.செகராசசிங்கம் J.P
(சகோதரன்)

021 300 2892

PERSONAL CLASS
தரம் 03 முதல் O/L வரையான மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் உட்பட ஏனைய பாடங்களும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
076 713 8863

விற்பனைக்கு
வளன்புரம், கொழும்புத்துறையில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 6633 722 / 077 8099 047
(CS 4684)(10)

கோழிக்குஞ்சு விற்பனைக்கு
ஊர்க்கோழிக்குஞ்சு, கினிக்கோழிக்குஞ்சு, வான்கோழி என்பன விற்பனைக்கு உண்டு.
076 941 9807
(CS 4743) (14)

கடை வாடகைக்கு
மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக கே.கே.எஸ் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலை உபகரணங்கள் உள்ள கடையின் பொருள்கள் விற்பனைக்கும் கடை வாடகைக்கும் விடப்படும்.
077 900 5856/ 071 856 5540

உடன் வாடகைக்கு உண்டு
நல்லூர்க் கோயிலுக்கு மிக அண்மையில் வடக்குப் பக்கம் அமைதியான சூழலில் கோயில் வீதியில் 5 அறைகள், சமையல் அறை, சாப்பாட்டறை, வரவேற்பறை, 2 இணைந்த குளியலறைகள் என்பன கொண்ட சகல வசதிகளுமுள்ள மாபிள் பதித்த புதிய மேல்மாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு.
076 796 4127

பெண் உதவியாளர் தேவை
கந்தரோடை, சுன்னாகத்திலே வதியும் வயோதிபத் தம்பதியினருடன் தங்கியிருந்து பணிபுரிய பெண் உதவியாளர் தேவை. 35 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
077 754 2174, 021 224 0393

கடை வாடகைக்கு உண்டு
இரண்டு பெரிய அளவிலான கடை வாடகைக்கு உண்டு.
கடைக்குத் தனிப்பட்ட கார்ப் பாக் வசதிகள் உண்டு.
076 785 1067

விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோடீபதி ශනිදා
சீட்டிழுப்பு வாரம்: 146
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 06.06.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 89,290,640/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
Y 13 33 44 74
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

செவ்வாய்க்கிழமை
நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 571 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 06.06.2017
வெற்றி இலக்கங்கள்
11 36 37 40
ஆங்கில எழுத்து
G
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 28,476,159/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் நாகர்கோவில் வீதியில் 13 பரப்பு தென்னங்காணியும் பகுதியாகச் சேதமடைந்த வீடும் அருகில் 17 பரப்புத் தென்னங்காணியும் தனித்தனியாக உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 076 765 4235
077 728 6003



### பச்சிலைப்பள்ளி, முகாவில், இயக்கச்சி
### அருள்மிகு திரியாய் அம்பாள் (பர்வதவர்த்தினி) தேவஸ்தான
### திருக்குளிர்த்திப் பொங்கல் விழா
### 09.06.2017 வெள்ளிக்கிழமை

**அம்பிகை மெய்யடியார்களே!**

இயக்கச்சி, முகாவில் திரியாய் அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் நிகழும் ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 26ஆம் நாள் 09.06.2017 வெள்ளிக் கிழமை இடம்பெறும். அன்று பகல், இரவு தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகளும், காவடி, பாற்செம்பு, தீச்சட்டி, கரகம், பறவைக் காவடிகள் போன்ற நேர்த்திக்கடன் நிறை வேற்றல்களும் தொடர்ந்து நீராகாரம், அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறும்.

**பக்த அடியார்களே!**

ஆலயத்துக்குத் தேவையான முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கி அம்பாளுக்குத் தேவையான பூக்கள், பூமாலைகள், பால், இளநீர், தயிர், நெய் போன்ற அபிஷேகப் பொருள்களையும் ஆலயத்தில் ஒப்படைத்து அம்பாளின் திருவருளைப் பெற்றேகும் வண்ணம் அடியார்களை அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:-**

அன்றைய தினம் பாதுகாப்பு, முதலுதவி, சுகாதாரம் பேணல், குடிநீர் வசதி போன்ற வைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் திருப்திகரமாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

விசேட போக்குவரத்து ஒழுங்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தனியார் போக்கு வரத்து சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தமது பதிவுகளை 09.06.2017 வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் மேற்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:- 077 347 4011, 077 921 8830, 077 975 4537**

**குறிப்பு :-** பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்டு வியாபாரத்தை ஆரம்பிக்கலாம். ஆலயத்தின் வளர்ச்சி கருதி அர்ச்சனைப் பொருள்கள் பரிபாலன சபையின ரால் விற்பனை செய்யப்படும்.

**முகாவில், இயக்கச்சி. ஆலய பரிபாலன சபையினர்.**

கீரிமலை வீதி, கொல்லங்கலட்டியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முருகர் சின்னத்துரை அவர்களின்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் முருகர் சின்னத்துரை**

**பிறப்பு – 06.05.1926**
**இறப்பு – 08.05.2017**





**பரம்பரையின் ஓர் விழுதாய்**
**கிராமத்தின் தலைமகனாய்**
**இதயத்தின் உயிர்த்துடிப்பாய் - வீற்றிருந்து**
**இன்று மட்டும் எம்மைப்**
**பாதியில் விட்டுச்சென்றதேனோ ?**
**என்றென்றும் உம் சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்!**

**ஓம் சாந்தி!**

எமது குடும்பத்தலைவர் இறைபதம் அடைந்த செய்தியறிந்து உடன் வந்து உதவியவர்களுக்கும், மரணச்சடங்கில் பங்குபற்றி ஆறுதல் தெரிவித்தோருக்கும், மலர் வளையங்கள், அஞ்சலி பிரதிகள் , அஞ்சலி பனர்கள், தொலைபேசி என்பவற்றின் மூலம் ஆறுதல் வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
**08 . 09 . 1924**



**மறைவு**
**06 . 06 . 2017**

எமது ஆலயத்தின் நீண்ட கால போஷகராக இருந்து ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவரான

## பொன்னர் கந்தசாமி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சாளம்பை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை,**
**இந்து இளைஞர் தொண்டர்சபை,**
**சாளம்பை முருகன் தேவஸ்தானம் மல்லாகம்.**

## மரண அறிவித்தல்



## திருமதி திலகவதி விநாயகமூர்த்தி
**(இந்திரா)**

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி விநாயகமூர்த்தி நேற்று (06.06.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் தர்சினி, தசாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதனின் (மறவன்புலோ) அன்பு மாமியும் குருபரன், திருபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2017) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தம்பனை வைரவர் அடைப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த அமர்வில் கலந்து கொண்டு சிறப்புக் கூற்று விடுத்து உரையாற்றவுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை, ஜூன் 6 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று வடக்கு முதலமைச்சர் கடந்த மாதம் நடைபெற்ற சபை அமர்வில் தெரிவித்திருந்தார். இதற்கிடையில் அந்த அறிக்கையின் பரிந்துரைகள் கசிந்து வெளியாகின. மாகாண சபையின் தற்போதைய அமைச்சர்களான பொ. ஐங்கரநேசன் மற்றும் த.குருகுலராசா இருவரும் பதவி விலகவேண்டும் என்று அதில் பரிந்துரைத்துள்ளது.

இதற்கிடையில் வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், அவரது நெருங்கி உறவினரின் இறுதிக் கிரியையில் பங்கேற்பதற்கு நேற்று முன்தினம் காலை, கொழும்புக்குப் புறப்பட்டிருந்தார். இதனால் நேற்றைய சபை அமர்வில் அவர் கலந்து கொள்ளவில்லை. அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நடைபெறுவதற்கு முன்பாக, அவைத் தலைவருடன் சபை நடவடிக்கைக் குழு உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துரையாடினர். இதன்போது இன்றைய அமர்வில் (நேற்று) விசாரணைக் குழு அறிக்கை விடயம் சபைக்கு எடுப்பதில்லை என்று முடிவெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நாளை (இன்று) சிறப்பு அமர்வைக் கூட்டுமாறும் தான் அதில் கலந்து கொள்வதாகக் கூறியதாகவும் தெரிவித்தார். இதற்கு அமைவாகச் சிறப்பு அமர்வு 11 மணிக்கு நடைபெறும் என்று அவைத் தலைவர் சபையில் அறிவித்தார்.

இதன் பின்னர் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக, சபை அமர்வு முற்பகல் 11.30 மணிக்குப் பின் நகர்த்தப்பட்டது.

மாகாண சபையின் இன்றைய அமர்வில், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பு கூற்று அறிக்கையை வெளியிடவுள்ளார். இதனுடன் இணைத்து விசாரணை அறிக்கையை சபைக்குச் சமர்ப்பிப்பார்என்றுபெரிதும்எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-58-101)

## ஐ.நா....

அரசுக்கு இருக்கின்றது. தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரம் இனியும் தொடரக் கூடாது. இதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் தாமதமும் மறுப்பும், நாட்டிற்குப் பாதகமானதே.

இவ்வாறு நாடாளுமன்றில் வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த அரசின் செயற்பாடுகள் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தொடர்ச்சியாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. உள்ளகப் பொறிமுறையும் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாகவே 2015இலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசுக்கு தற்போது கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. அதை எவ்வாறு உரிய வகையில் நிறைவேற்றுவது என்பது பற்றிச் சிந்தித்து நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு எதிரானது என்று பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அது முற்றிலும் தவறானதாகும். இந்தக் கருத்துடன் உடன்பட முடியாது. போரின்போது இரு தரப்புமே பன்னாட்டுச் சட்ட திட்டங்களை மீறியுள்ளன. அது பற்றி விசாரிக்கவேண்டுமென்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடன் இணைந்து முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கூட்டறிக்கையொன்றை விடுத்தார். இதன் பிரகாரமே அனைத்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. பொறுப்புக்கூறல் பற்றியும் உறுதிமொழி வழங்கப்பட்டது.

நாட்டின் தென் பகுதிகளில் சிங்கள இளைஞர்கள் மற்றும் மக்கள் ஆயிரக்கணக்கில் சித்திரவதை செய்யப்பட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் இடம்பெற்றபோது 1980 ஆம் ஆண்டுகளின் இறுதிக் காலப்பகுதியில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலையீட்டைக் கோரி மகிந்த ராஜபக்ச ஜெனிவா சென்றிருந்தார். தாம் என்ன செய்கிறோம் என்பதை தெரிந்தே அவர் அதைச் செய்திருந்தார். 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் என்ன நடந்தது என்பதற்கான ஒரே வித்தியாசம் அதைப் போன்ற சம்பவங்கள் வடக்கில் இடம்பெற்றிருந்தன என்பதுதான். எவரும் இராணுவ வீரர்கள் சார்பில் முறையிட்டிருக்கவில்லை.

1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் மகிந்த ராஜபக்ச ஜெனிவா சென்றிருந்தபோது இராணுவவீரர்கள் சார்பில் அவர் முறையிட்டிருக்கவில்லை. பொதுமக்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலேயே அவர் முறையிட்டிருந்தார். பொதுமக்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையும் செயற்படுகிறது.

அதற்குச் சமாந்தரமாக ஆயுதப் படையினர் இழைத்த மீறல்களுக்காக அவர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் பொதுமக்கள் பற்றிய கரிசனை கொண்டுள்ளன. தண்டனையில் இருந்து தப்பும் இந்தக் கலாசாரம் நீடிக்கக் கூடாது. அது முடிவுக்கு வரவேண்டும். மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களில் நிராயுதபாணியான பொதுமக்களுக்கு என்ன நடந்தது என்பதை அரசுக்கு எதிராகப் போராட்டத்தை முன்னெடுத்த ஆயுத போராளிகளுக்கு எதிராக அரசினால் எடுக்கப்பட்ட முறையான நடவடிக்கைகளுடன் குழப்பிக் கொள்ளக்கூடாது. இந்த இரு நிலைமைகளுக்கும் இடையிலான வித்தியாசம் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தின் ஆரம்பத்தில் போர் வீரர்கள் பற்றிப் பேசப்பட்டது. அனைத்துப் போர் வீரர்களும் பன்னாட்டு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறிச் செயற்பட்டனர் என்று நான் கருதவில்லை. அவர்களில் சிலர் சந்தேகத்துக்கு இடமின்றி அந்தச் சட்டங்களுக்கு எதிராகக் குற்றங்களை இழைத்துள்ளனர்.

ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் என்னெலிகொட தொடர்பான வழக்குகள் மற்றும் திருகோணமலை 5 மாணவர்கள் மற்றும் மூதூரில் 17 தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் படுகொலைகள் போன்ற விடயங்களில் ஆயுதப் படையினர் அல்லது போர் வீரர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதை மூடிமறைக்க முடியுமா? இந்தச் சம்பவங்களில் போர் வீரர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர் என்ற காரணத்துக்காக இவற்றை மூடி மறைக்க முடியாது.

மனித குலத்துக்கு எதிராக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இழைக்கப்பட்ட குற்றங்களை எப்படி மூடி மறைக்க முடியும்? உயர் பதவிகளை வகிக்கும் நபர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல் பெருக்கிக் கொள்வதில் முறையான கடமையை நிறைவேற்றுவதில் அரசொன்றுக்கு இருக்கும் பொறுப்பையும் நிராயுதபாணியான பொதுமக்கள் கொலைகளையும் யாரும் குழப்பிக்கொள்ள இடமளிக்கக்கூடாது.

எமது நாடு பேரழிவு நிலைமைகளைச் சந்தித்துள்ளது. நாம் அந்த நிலமையில் இருந்து மீளவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தின் முழுமையானதும் துரிமானதுமான நடைமுறை மீளும் பாதை நோக்கிய முதலாவது படியாக இருக்கும். இந்த நடவடிக்கையில் இடம்பெறக்கூடிய தாமதமோ அல்லது மறுப்போ எமது நாட்டின் எதிர்காலத்துக்குப் பாதிப்பாகவே அமையும் -என்றார்.

(த-5)

## மூதூர்...

புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி[illegible] இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் மாணவிகள் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வடக்கில் பாடசாலைச் சமூகம் முன்னெடுத்த முதலாவது போராட்டமாக நேற்றைய போராட்டம் அமைந்தது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தின் கீழுள்ள பெரியவெளி கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவிகள் மூவர் கூட்டாகப் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பாலியல் கொடுமைக்கு எதிராகக் கிழக்கில் போராட்டங்கள் இடம்பெற்றன. இந்த நிலையில் நேற்று வடக்கிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வித்தியானந்தாக் கல்லூரி முன்பாக உள்ள முதன்மை வீதியோரமாக நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 9 மணிவரை கல்லூரிச் சமூகத்தினர் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களும் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டுபோராட்டத்துக்கு முழுஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

போராட்டம் நடந்தவேளை முள்ளியவளைப் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர். இராணுவப் புலனாய்வாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டோரைப் புகைப்படம் எடுப்பதில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-4-102)

## பிரபாகரனை புகழ்...

வருகின்றன. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் இந்தநிலை ஏற்பட்டிருக்குமா? தமிழ் மக்களுக்கு நடக்கின்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க நான் தயார்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தின தேரர்.

கடந்த காலங்களில் கிழக்கில் இனவாதத்தை தூண்டும் விதத்தில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு பௌத்த துறவற நிலையைக் கேள்விக்குட்படுத்தி காவியுடைக்குக் களங்கம் கற்பித்து சர்ச்சைகளில் சிக்கி வந்த மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதியே இவ்வாறு இந்த நல்லாட்சியில் தமிழ் மக்களுக்கு அநீதி நடக்கின்றது எனத் தெரிவித்து நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த விகாரையில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் சேவை செய்து வருகின்றேன். சிங்கள மக்களைவிடத் தமிழ் மக்கள் என்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நான் இனவாதியல்ல. இருந்தபோதும் போர் முடிவுக்கு வந்த பின் தமிழ் மக்களுக்கு ஒரு நிம்மதியான சுயமான தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்தேன். அது நடக்கவில்லை. அதே மாதிரிச் சிங்கள மக்களுக்கும் கிடைக்கும் என எதிர்பார்த்தேன். அதுவும் நடக்கவில்லை. ஒரு தேரர் என்ற ரீதியில் இதனையிட்டு மிகவும் மனவருத்தப்படுகின்றேன்

போரில் இடம்பெயர்ந்த 2000 சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு காணிகள் இதுவரை கிடைக்கவில்லை. அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்காக அரசியல்வாதிகளிடம் பல சந்தர்ப்பத்தில் விவாதத்தில் ஈடுபட்டேன். அப்போது தமிழ் மக்களின் தலைவர்கள் எனச் சொல்லிக் கொள்ளும் அரசியல்வாதிகள், இது இனத் துவேசம் என என் மீது குற்றம் சாட்டினர். அதனை ஆயுதமாகக் கொண்டு முஸ்லிம் அரசில்வாதிகள் குளிர்காய்கின்றனர். அதே குளிருடன் மட்டக்களப்பின் எல்லைப் பகுதியான புனானைப் பிரதேசத்தில் திறந்த பல்கலைக்கழகம் என்ற போர்வையில் 400 ஏக்கர் நிலப் பரப்பில் ஆசியாவிலே மிகப் பெரிய முஸ்லிம் தவ்பீக் மதரசா நிர்மாணிக்கப்படுகின்றது. இந்த 400 ஏக்கர் காணி மகாவலி திட்டத்தின் கீழான, தமிழ் மக்களுக்குச் சொந்தமானதாகும்

இதனால் எதிர்காலத்தில் சமயங்களுக்கிடையிலே மதப் போர் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மக்களுக்குக் காணி இதுவரை வழங்கப்படவில்லை. இந்த நிலையில் மகாவலிக்கென புனானையில் ஒதுக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சொந்தமான இந்தக் காணியில் பல்கலைக்கழகம் என்ற போர்வையில் முஸ்லிம் தவ்பீக் மதரசா அமைப்பதற்குச் சட்டம் எப்படி இடம் கொடுத்தது?

தமிழர்களின் தலைவர்கள் எனத் தெரிவிக்கும் வடக்கு மாகாண சபை முதல்வர் சி.வி. விக்கினேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரால் இதனைத் தடுத்து நிறுத்தமுடியுமா?

இவ்வாறுதான் கிழக்கில் தமிழர்கள் அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளுடன் அநீதிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இப்பொழுது நடக்கின்ற அரசியல் பித்தலாட்டத்தில் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். எனவே, நாங்கள் பண்டிதர்கள், படித்தவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள் ஏழைத் தமிழ் மக்களை ஏமாற்றவேண்டாம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் இந்தப் புனானையில் கட்டடம் கட்டப்பட்டிருக்குமா? கிழக்கு பறிபோயிருக்குமா?

இன்று நான் தமிழ் மக்களின் காணி, வீடு, தொழில் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்காக என்னால் முடிந்தவரை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன்.

எனவே, நல்லாட்சியின் தலைவர்கள் எங்களுடன் சேர்ந்து இந்த மக்களுக்கு வேலை செய்யத் தயாராக உள்ளனரா? - என்றுள்ளது.

(த-ய)

## பிரபாகரனை...

முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசாரதேரரைக் கைது செய்வதற்கு நான்கு பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அவர் கைது செய்யப்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனைப் பிடித்த அரசால் தேரரைப் பிடிக்க முடியவில்லை. அரச தலைவர் அனுமதித்தால்தான் கைது செய்வோம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஞானசாரதேரரை நீதிமன்றத்தில் முற்படுத்தும்வரை இது தொடர்பாக எந்தச் சமாதானப் பேச்சுக்கும் இணங்கமாட்டோம் - என்றார்.

(த-5)

## ரணிலை...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்த, ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ், ஐ.நா. அமைதிப் படையில் இடம்பெற்றிருந்த இலங்கைப் படையினரின் பாலியல் துர்நடத்தை குறித்துப் பேசவில்லை என்று, இன்னசிற்றி பிரஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

2009ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை எதனையும் செய்யவில்லை. அதன் பின்னர் பான் கீ மூனின் தலைமைத்துவத்தில், ஐ.நா. போர்க் குற்றங்களுக்கு உள்ளான இராணுவ அதிகாரி சவேந்திர சில்வாவை ஐக்கிய நாடுகள் அமைதிப்படைக்கான ஆலோசகராகவும் ஏற்றுக் கொண்டிருந்தது.

ஐ.நா. அமைதிப்படையில் அங்கம் வகித்த இலங்கைப் படையினரின் பாலியல் வல்லுறவு மற்றும் துர்நடத்தை குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளபோதிலும் இலங்கைத் தலைமை அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அது குறித்து ஆராயவில்லை.

இவ்வாறான நடைமுறையைப் பின்பற்றும் ஐக்கிய நாடுகள் சபை, அமைதிப்படையின் பாலியல் துர்நடத்தை குறித்தோ அல்லது பரந்துபட்ட பொறுப்புக்கூறும் செயற்பாடுகள் குறித்தோ அக்கறை கொள்வதாக நாடகமாடுகின்றது என்று இன்னசிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

(த-5)

## ஞானசாரரைச்...

மூலமாக ஞானசார தேரரைக் கொலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவரது அனைத்து நகர்வுகளையும் கண்காணித்து வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன்: ``அடியே! அம்மா பாத்ரூம்ல வழுக்கி விழுந்துட்டாங்களாம்".

மனைவி: ``நல்லா வேணும்! வயசான காலத்துல ஒரு இடத்தில உட்கார மாட்டாங்களே!"

கணவன்: ``விழுந்தது எங்கம்மா இல்லடி, உங்கம்மா"!

மனைவி: ``ஐயோ! அவங்க ஓடியாடுறது மேலே எந்த கொள்ளிக் கண்ணோ பட்டுச்சே! சும்மா பாத்துக்கிட்டு நிக்கிறீங்களே! போனைக் குடுங்க!"

# முருகதாஸின் அடுத்தப்படம்




முருகதாஸ் இயக்கும் படங்களில் நடிப்பதற்குப் பல நடிகர், நடிகைகள் காத்திருக்கின்றனர். இந்த நிலையில் அவர் தற்போது மகேஷ் பாபு நடிக்கும் ஸ்பைடர் படத்தின் இறுதிக் கட்ட வேலைகளில் இருக்கின்றார். இந்தப் படம் முடிந்த கையோடு அடுத்து விஜய்யுடன் மூன்றாவது முறையாகக் கூட்டணி அமைக்கின்றார். இந்த நிலையில் ஸ்பைடர் படத்தின் கதை கசிந்துள்ளது. இந்தப் படம் புலனாய்வுத்துறை குறித்தது என்று கூறப்படுகிறது. அது மட்டுமின்றி புலனாய்வுத் துறையில் உள்ள அதிகாரிகளின் ஊழலை வெட்டவெளிச்சமாக்கும் கதை என்றும் கூறப்படுகிறது. ராகுல் ப்ரித்திசிங், எஸ்.ஜே.சூர்யா, பரத், ஆர்ஜே பாலாஜி உட்பட பலர் நடித்துள்ள இந்த படத்துக்குக்கு ஹரிஸ்ஜெயராஜ் இசையமைத்துள்ளார்.

## சீனிவாசன் வெங்கட் @Sriniv

அதிர்ஷ்டத்தை எண்ணி வாழ்க்கையை நகர்த்தாமல் தன் உடல், மன வலிமையைக் கொண்டு பாடுபடுவோம் பொருள் ஈட்டுவோம்.










# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** பேச்சில் அதிருப்தி கலந்திருக்கும். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**இடபம்:** எதிர்கால வாழ்வு சிறக்கப் பாடுபடுவீர்கள். பெரியவர்களின் ஆசியும், வழிகாட்டுதலும் கிடைக்கும். தொழில் வளர்ச்சி இலக்குத் திட்டமிட்டபடி நிறைவேறும். லாபம் உயரும்.

**மிதுனம்:** சுய தேவை நல்ல முறையில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப லாபம் கிடைக்கும். முக்கிய செலவுக்குச் சேமிப்பைப் பயன்படுத்துவீர்கள். வாகன பயணத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனம், உடலில் புத்துணர்வு மேலோங்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை நல்லமுறையில் தீரும்.

**சிங்கம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடை விலகி ஆதாயம் உயரும். வீட்டை அழகுப்படுத்த அலங்காரப் பொருள் வாங்குவீர்கள். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**கன்னி:** நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விருந்தினர் வருகையால் பணச்செலவு ஏற்படலாம். குடும்பத்தினர் ஆதரவு, மனதுக்கு நம்பிக்கை தரும்.

**துலாம்:** எதிலும் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப வருமானம் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்களை இரவல் வாங்க கூடாது.

**விருச்சிகம்:** பொது விடயங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு மனதுக்கு மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும்.

**தனுசு:** இனிமையாகப் பேசி, பிறர் மனதில் இடம் பெறுவீர்கள். பணிகள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். தொழில், வியாபா ரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். இல்லறத் துணை விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** மறைமுக எதிரியை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்புத் தேவைப்படும். லாபம் சுமார். பிள்ளைகளின் செயல்பாடு மனதுக்கு நிம்மதி அளிக்கும்.

**கும்பம்:** பொது விடயங்களில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும்.

**மீனம்:** சாதுர்யமாகச் செயற்பட்டு நன்மை காண்பீர்கள். உறவினர் மத்தியில் செல்வாக்கு உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 6 | | | 3 | |
| | | 1 | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | 2 | | | 7 |
| 2 | | | 7 | | 5 | | 1 | |
| | | | | 9 | | | | |
| | 3 | | 1 | | 6 | | | 9 |
| 9 | | | 3 | | | | | |
| | 8 | 7 | 6 | 5 | | 2 | | |
| | 4 | | | 7 | | 5 | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 7 | 9 | 6 | 3 | 8 | 1 |
| 8 | 9 | 3 | 1 | 4 | 2 | 6 | 5 | 7 |
| 7 | 1 | 6 | 8 | 3 | 5 | 2 | 9 | 4 |
| 5 | 3 | 9 | 6 | 8 | | 1 | 7 | 2 |
| 6 | 2 | 8 | 5 | 7 | | 4 | 3 | 9 |
| 1 | 4 | 7 | | 2 | 3 | 8 | 6 | 5 |
| 4 | 8 | 5 | 3 | 1 | 7 | 9 | 2 | 6 |
| 3 | 7 | 2 | 4 | 6 | 9 | 5 | 1 | 8 |
| 9 | 6 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இளவாலை கன்னியர்மடம் கபடியில் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடமாகாணபாடசாலைகளுக்கு இடையிலான கபடியில் 20 வயதுப் பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
ஓமந்தைமத்தியகல்லூரிமைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நெல்லியடிமத்தியகல்லூரிஅணி மோதியது. 37:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இளவாலை கன்னியர்மடம்மகாவித்தியாலய அணிசம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. 3ஆம் இடத்தை கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிதனதாக்கியது. (ம-422)

# வடமராட்சி பிறீமியர் லீக் விரைவில் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 7
கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்டவடமராட்சிபிறீமியர்லீக்கால்பந்தாட்டத்தொடர் விரைவில் ஆரம்பமாகவுள்ளது.
வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்திலுள்ள கழகங்களின் வீரர்களை ஒன்றிணைத்து ஆறு அணிகளாக்கி இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. அணிகளை ஏலத்தில் எடுப்பதற்கான ஆரம்ப நிகழ்வு மூத்தவிநாயகர் கோவில் திருமணமண்டபத்தில்கடந்தசனிக்கிழமைநடைபெற்றது.
இந்த நிகழ்வில் வடமராட்சி லீக்கின் தலைவர், வடமரட்சி கால்பந்தாட்ட நடுவர் சங்க தலைவர், ஆறு அணி களின் பயிற்றுனர்கள், அணிகளை விலைக்கு வாங்கிய உரிமையாளர்கள், கால்பந்தாட்ட வீரர்கள் உட்பட பல தரப்பினரும் கலந்துகொண்டனர். (ம-108)





# கொக்குவில் இந்துவிடம் வீழ்ந்தது யாழ். மத்தி

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணமாவட்டகூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப்பிரிவினருக்கான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 17வயதுப் பிரிவு ஆண்களுக்கானஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியிடம் தோல்வியடைந்தது யாழ்ப்பாணம்மத்தியகல்லூரி. யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இந்த ஆட்டம் நடைபெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மோதியது.
முதலாவது கால்பாதி ஆட்டத்தின் முடிவில் 19:6 என்று ஆதிக்கம் செலுத்தியது கொக்குவில் இந்து. இரண்டாவது கால் பாதியையும் 18:2 என்ற புள்ளி களின் அடிப்படையில் தனதாக்கியது இந்து. முதல் பாதியின்முடிவில்37:8என்ற புள்ளி களின் அடிப்படையில் முன்னிலைபெற்றதுகொக்குவில் இந்துக்கல்லூரி.
மூன்றாவது கால் பாதியை 11:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிஅணி. நான்காவதுகால் பாதியை 28:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்து கைப்பற்றியது.
முடிவில்கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 75:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிக இலகுவாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை வீழ்த்தியது. (ம-23)

# விளையாட்டு விழா

வவுனியா, ஜூன் 7
வவுனியா புதுக்குளம் சித்திவிநாயகர்விளையாட்டுக் கழகத்தின் 69ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கழகங்களைஒன்றிணைத்து நடத்தத் திட்டமிட்ட விளையாட்டு விழா எதிர்வரும்10ஆம் திகதி சனிக்கிழமைநடைபெறவுள்ளது. பாரம்பரிய விளையாட்டுக்களும் நிகழ்வில் நடைபெறவுள்ளனஎன்றுஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம)

# இளைஞர் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஜூன்7
புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கொம்மந்தறை இளைஞர் விளையாட்டுக்கழகம்.
புலோலி இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில்பருத்தியூர்இளந்தளிர் விளையாட்டுக் கழகமும் கொம்மந்தறை இளைஞர்கள் விளையாட்டுக் கழகமும் மோதின.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பைத் தீர்மானித்தது கொம்மந்தறை இளைஞர் அணி.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இளந்தளிர் அணி, 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. சுதர்சன் பெற்ற 19 ஓட்டங்கள் அதிகபட்சம். பந்துவீச்சில் நிதர்சன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.
62 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியகொம்மந்தறை இளைஞர் அணி 7.5 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (ம-108)

# இளநிலைப் பிரிவு கூடைப்பந்தாட்டம்: இன்று எவரெவர் எதிர்த்து மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும்இளநிலைப்பரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன.
வேம்படிமகளிர்உயர்தரப் பாடசாலையின் கூடைப் பந்தாட்ட திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 17வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படிமகளிர்உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.
பிற்பகல் 3.40 மணிக்கு இடம்பெறும் 13 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை 'பி' அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப்பாடசாலை அணி மோதவுள்ளது.
மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலையின் கூடைப்பந்தாட்டத்திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 15வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலைஅணியைஎதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணிமோதவுள்ளது.
பிற்பகல் 3.40 மணிக்கு இடம்பெறும் 20 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலைஅணியைஎதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவ
(ம-

# மெதடிஸ்த மிசன் பாடசாலை கபடியில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடமாகாண பாடசாலைகளுக்குஇடையிலானகபடியில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அணி சம்பியனானது.
ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றஇறுதியாட்டத்தில் கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மோதியது. கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாம் இடத்தை கிளிநொச்சி கனகாம்பிகைகுளம்அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிபெற்றது. (ம-422)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறிபந்தாட்ட காலிறுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான எறிபந்தாட்டத் தொடரின் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

17வயதுக்குட்பட்ட பெண்களுக்கான காலிறுதியாட்டத்தில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியும், இராமநாதபுரம் வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும், வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.

20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு காலிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியும், கிளிநொச்சி இராமநாதபுரம் வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், மீசாலை வீரசிங்கம் வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியும் மோதவுள்ளன.

20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு காலிறுதியாட்டத்தில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி மோதவுள்ளது.

17வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார் கோட்டைகட்டியகுளம் அரசினர் தமிழ் கல்வன் பாடசாலை அணி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி என்பனவும், 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி, வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி என்பனவும் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

# டேரன் லீமனை நீக்க வேண்டும்

யூசொப் வலியுறுத்தல்

மினி உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணிக்கு எதிராக பாகிஸ்தானுக்குக் கிடைத்தது வெட்கக்கேடான தோல்வி என்று குறிப்பிட்ட பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் யூசொப். பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளர் லீமனை பதவி நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (ம)



# ஆக்ரோசம் இருந்தால் இந்தியாவை வீழ்த்தலாம்

## இலங்கை வீரர்களுக்கு சங்கக்கார அறிவுரை

இலங்கை அணியின் இளம் வீரர்கள் கர்வத்துடன் ஆக்ரோசமாக விளையாடினால் மட்டுமே இந்திய அணியை வீழ்த்த முடியும் இவ்வாறு தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார.

மினி உலகக்கிண்ணத் தொடரில் நாளைய ஆட்டத்தில் இலங்கையும் இந்தியாவும் மோதுகின்றன. இந்த ஆட்டம் தொடர்பில் எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்ற நிலையில் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இணையத்தளத்துக்கு எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டார் சங்கா. 'இளம் இலங்கை அணி ஓவல் மைதானத்தில் இந்திய அணிக்கு எதிராக இளைஞர்களுக்கேயுரிய கர்வமான இலட்சியத்துடனும், திமிருடனும் விளையாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தி ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் இந்திய அணிக்கு அதிர்ச்சித் தோல்வியைக் கொடுக்க முடியும். ஆனால் அன்று பாகிஸ்தானை மிகவும் தன்னம்பிக்கையுடன் வென்ற இந்திய அணிக்கு எதிராக இது கடினமே. மத்தியூஸ் உடல் தகுதி பெறவேண்டும். தரங்க மீதான தடையும் கவலை தருகிறது. அனுபவ வீரர் மலிங்க, அதிகப்படியான சுழல்பந்து வீச்சாளர்களை வைத்துக்கொண்டு பந்துவீச கூடுதல் நேரத்தை தரங்க எடுத்துக்கொண்டமை குற்றமே' என சங்கா மேலும் தெரிவித்தார்.

முன்னதாக, தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணியின் பொறுப்புத் தலைவராகச் செயற்பட்ட தரங்க பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டார் என்று தெரிவித்து அவருக்கு இரு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் தரங்க இல்லாமலேயே நாளை இந்தியாவை இலங்கை எதிர்க்கிறது. (ம)

# ஆஸ்திரேலியாவுக்கு மிகப்பெரும் ஏமாற்றம்

மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் மழை குறுக்கிட்டமையால் ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கனவு தகர்ந்தது. இது அந்த அணிக்கு புள்ளிப்பட்டியலில் பெரும் பின்னடைவைக் கொடுத்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் சகல இலக்குகளையும் இழந்து 182 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக தமிம் இக்பால் 95 ஓட்டங்களைப் பெற்றார். மத்திய வரிசையில் சகிப் அல் ஹசன் பெற்ற 29 ஓட்டங்களே இரண்டாவது அதிக பட்சம்.

பந்துவீச்சில் ஸ்ராக் 4 இலக்குகளையும், சாம்பா 2 இலக்குகளையும், ஹசில்வூட், கம்மின்ஸ், ஹெட், ஹென்றிக்ஸ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 16 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டது. டக்வேர்த் லூயிஸ் முறைப்படி ஆட்டத்தைக் கணிக்க வேண்டுமாயின் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணி குறைந்த பட்சம் 20 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டிருக்க வேண்டும். பங்களாதேஷ் 16 பந்துப்பரிமாற்றங்களையே எதிர்கொண்டிருந்தது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஓர் புள்ளி வழங்கப்பட்டது. (ம)

# காலிறுதியில் கேலப்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதிபெற்றார் சிமோனா கேலப்.

பரிஸ் நகரில் தொடரின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 4ஆம் நிலையில் உள்ளவரான கேலப்பை எதிர்த்து ஸ்பெய்ன் வீராங்கனை நவரோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 6:1, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டார் கேலப்.

இந்த வெற்றியைப் பெற வெறும் 55 நிமிடங்களே கேலப்புக்குத் தேவைப்பட்டது. நடப்பு வருடத்தில் தனது சிறந்த ஆட்டம் இதுவே என்று அவர் வர்ணித்தார். (ம)






# அறிமுகமாகிறார் சேஸ்

ஒருநாள் ஆட்டங்களில் சகல துறை வீரரான சேஸை அறிமுகம் செய்யவுள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

ஆப்கானிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடரை 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது தீவுகள். மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது இந்தத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சகலதுறை வீரர் சேஸ் இடம்பிடித்தார்.

கடந்தாண்டு, டெஸ்ட் ஆட்டங்களில் அறிமுகத்தை மேற்கொண்ட சேஸ், 10 டெஸ்ட்களில் மூன்று சதங்களைப் பெற்று, நம்பத் தகுந்த மத்திய வரிசை வீரராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். இதைவிட கைகொடுக்கக் கூடிய சுழற் பந்துவீச்சாளராகவும் உள்ளார். எனினும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டத்தில் இவர் பெரிய அளவில் பிரகாசிக்கவில்லை. இந்த நிலையில் அவருக்கு மீண்டுமொரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி விவரம்- ஜேஸன் ஹோல்டர் (அணித்தலைவர்), பிஸ்கூ, ஜொனதன் கார்ட்டர், றொஸ்டன் சேஸ், மைக்கல் கமின்ஸ், கபிரியேல், ஹோப், ஜோஸெப், எவின் லூயிஸ், ஜேஸன் மொஹமட், நேர்ஸ், பவல், றொவ்மன் பவல். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்தை இலகுவாக வீழ்த்தி அரையிறுதிக்கு இங்கிலாந்து தகுதி

மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இங்கிலாந்து. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 49.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 310 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரூட் 64 ஓட்டங்களையும், பட்லர் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், கேல்ஸ் 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மில்னி, அண்டர்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும், சவுத்தி 2 இலக்குகளையும், போல்ட், சான்நெர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 223 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. வில்லியம்சன் 87 ஓட்டங்களைப் பெற்று போராட்டத்தை வெளிப்படுத்தினார்.

பந்துவீச்சில் பிளங்கட் 4 இலக்குகளையும், போல், ரசிட் இருவரும் தலா 2 இலக்குகளையும், வூட், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)





## IELTS FREE SEMINAR

- ✓ எமது கல்வி நிறுவனத்தின் 7ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 10.07.2017 மற்றும் 11.07.2017 ஆம் திகதி காலை 9 தொடக்கம் 11 வரை விசேட கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
- ✓ இதுவரை 1000இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு IELTS கற்பிக்கப்பட்டு ஒரே தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.
- ✓ Seminar இல் கலந்து கொள்ளும் மாணவர்கள் வகுப்புகளில் இணையும் பட்சத்தில் பரீட்சைக் கட்டணத்தில் 25% நிறுவனமே செலுத்தும்.
- ✓ ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- ✓ 7வருட காலமாக யாழ். மண்ணின் பிரபல IELTS விரிவுரையாளரான Mrs.R.ANUSHANTHI என்பவரால் கற்பிக்கப்படும்.

மேலதிக விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு 076 419 0327/ 077 136 3389

Address : London metropolitan College
No.136, Palaly Road, Parameswara junction, Jaffna.
(கிரீனேஸ் பேக்கரி கட்டடத் தொகுதி மேல்மாடி) Ph. Number : 021 753 8395

## Diploma in English Literature & Language Structure

5 Month Course | Week Days - 12.06.2017 9.00am
Weekend Days - 10.06.2017 9.00am

ELAS | Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna.
021 221 2410 / 076 697 3040

## யாழ்.நகரில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

* இது ஒரு சுயதொழில்
*மாதம் 100,000 இற்கு மேல் வருமானம் தரும் CCTV Camera பொருத்தும் பாடநெறியில் இணைந்து கொள்ளுங்கள் * மூன்றுநாள் முழுநேர பாடநெறி.
*Audio உட்பட அனைத்து Setting மற்றும் Software களும் பயிற்சியளிக்கப்படும்.
* 100% பொருத்தும் பயிற்சி
ஆரம்பம் June 10,11,12 ஆகிய மூன்று தினங்களில்.
கட்டணம் - பதிவுக் கட்டணம் 2500/-
பாடநெறிக் கட்டணம் - 13500/-
பதிவுகளுக்கு முந்துங்கள்

Softview IT Center
No- 22, Kandy Road, Jaffna. 077 747 5783

## Free English Class

4 மணித்தியாலத்தில் ஆங்கிலம்
11.06.2017 (ஞாயிறு) 9.00 am
முற்பதிவினை மேற்கொண்டு பங்குபற்ற முடியும்.
ELAS 122/1, K.K.S.Rd, Chunnakam (Above DFCC Bank)
021 224 3660 / 077 050 4446

## பணிநிலை வேண்டுகை

பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரசித்திபெற்ற மண்டபம் ஒன்றுக்கு வினைத்திறன்மிக்க விண்ணப்பதாரர்களுக்காகப் பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

01) Hall & Restaurant Manager
தகுந்த தகுதியுடன் குறைந்தது 3 - 5 வருடம் அனுபவம்.

02) Chef or Chief Cook
நிகழ்வுகளுக்காக விசேடமான சமையல் திட்டமிடல்களை மேற்கொள்ளக் கூடியவராகவும் யாழ்ப்பாணம் மற்றும் இந்திய முறையிலான சமையல் துறையில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல்.

03) Account Assistant
கணக்கியல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடியவராகவும் Accounting Package தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

04) Hall maintainance & Team Leaders ( சமையல் உதவியாளர் )
சிறந்த விருந்தோம்பல் பண்புடையவராகவும் உரிய துறையில் சிறந்த அனுபவம் உடையவராகவும் இருத்தல்.

சூரிய மஹால் - சண் டிஜிற்றல் (தனி) கம்பனி
பிரதான வீதி, பருத்தித்துறை.
077 315 1654, 077 704 6623
விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும்.
( shuriyamahal@gmail.com )


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கமலரேகா விவேகானந்தன்

பிறப்பு 26.02.1947
இறப்பு 02.06.2012
திதி:- திரியோதசி (07.06.2017)

ஐயிரண்டு திங்கள் வயிற்றில் சுமந்தவளே
ஐந்தாண்டு போனதம்மா அவனியிலே நீயின்றி
அன்போடும் அறிவோடும் அயராது எமை வளர்த்தாய்
உன் அரவணைப்பின்றி நாம் அனாதையாய் போனோமம்மா
எம் நெஞ்சோடும் நினைவோடும் உம்மையே நினைந்திருப்போம்
அம்மா உன் ஆன்மா அமைதியில் இருக்கட்டும்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அருந்தியார்வளவு,
அல்வாய் மேற்கு, திக்கம்.

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், குடும்பத்தினர்.


| இம்முறை தனயோகம் உங்களுடையதா? | திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|---|
| | 06.06.2017 | 2142 | நீலம் |

தனுசு 03 10 25 35
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி ரூ 36, 51, 040/=
2017.06.09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 10.06.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 12.06.2017
1.காலை 08-10 2.காலை 10-12
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர். 021 320 3313 077 1570 486


## நகராட்சி மன்றம் சாவகச்சேரி பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

எமது நகராட்சி மன்றத்துக்கு சொந்தமான பாவிக்கப்பட்ட பின்வரும் பொருள்கள் உபகரணங்கள், 15.06.2017 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு நகராட்சி மன்ற முன்றலில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும். ஏலத்தில் பொருள்களைப் பெற்றுக்கொள்பவர்கள் ஏலத்தொகையுடன் VAT, NBT வரியை சேர்த்து செலுத்தி பொருள்களை உடன் அப்புறப்படுத்தவேண்டும்.

பொருள்களின் விவரம்,
1. கட்டுமானப் பொருள்கள் (மாபிள்கள் 2" X 2")
2. இலத்திரனியல் மற்றும் கணினியுடன் தொடர்பான பொருள்கள்
3. ரயர், ரியூப் மற்றும் பற்றரி வகைகள்
4. பழைய பத்திரிகைகள்
5. தளபாடங்கள்

மேலதிக விவரங்களை அலுவலக அறிவித்தல் பலகையில் பார்வையிட முடியும்.
ஏலவிற்பனை தொடர்பாக நகராட்சி மன்றம் எடுக்கும் முடிவே இறுதியானது.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு. சிதம்பரநாதன்** அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி தவமணி அழகராசா**

அவர்களின் திடீர் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், தென்மராட்சி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24.12.1959 மறைவு 19.05.2016

ரூபரஜனி சிறிராசா

ஆயிரம் உறவுகள் எமக்கு இருந்தாலும்
உங்கள் ஒருவருக்கு ஈடாகுமா ?
நித்தம் உங்களை நினைத்து நினைத்து
கண்ணீர் சிந்துகின்றேன்
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
வாருங்கள் எம்மிடமே

19, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றென்றும் ஈரவிழிகளுடன்
அன்புக்கணவர் சிறிராசா

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக்கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவியும், பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவியும், முன்னாள் புகழ்பூத்த அதிபர் நாகலிங்கத்தின் மகளுமான

**திருமதி நித்தியலட்சுமி குணபாலசிங்கம்**
(இளைப்பாறிய போதனாசிரியர்)

அவர்கள் திடீர் மறைவு கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினையும், கல்லூரி சமூகத்தினையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக்கல்லூரி.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 - 2017ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான இசற்(Z) வெட்டுப்புள்ளி

| COURSE OF STUDY / DISTRICT | MEDICINE (University of Colombo) | MEDICINE (University of Peradeniya) | MEDICINE (University of Sri Jayewardenepura) | MEDICINE (University of Kelaniya) | MEDICINE (University of Jaffna) | MEDICINE (University of Ruhuna) | MEDICINE (Eastern University, Sri Lanka) | MEDICINE (Rajarata University of Sri Lanka) | DENTAL SURGERY (University of Peradeniya) | VETERINARY SCIENCE (University of Peradeniya) | MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY (University of Colombo) | AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT (University of Peradeniya) | AGRICULTURE (University of Jaffna) | AGRICULTURE (Eastern University, Sri Lanka) | AGRICULTURE (Rajarata University of Sri Lanka) | AGRICULTURE (Sabaragamuwa University of Sri Lanka) | AGRICULTURE (Wayamba University of Sri Lanka) | FOOD SCIENCE & NUTRITION (Wayamba University of Sri Lanka) | FOOD SCIENCE & TECHNOLOGY (University of Peradeniya) | FOOD SCIENCE & TECHNOLOGY (University of Sri Jayewardenepura) | FOOD SCIENCE & TECHNOLOGY (Sabaragamuwa University of Sri Lanka) | BIOLOGICAL SCIENCE (University of Colombo) | BIOLOGICAL SCIENCE (University of Peradeniya) | BIOLOGICAL SCIENCE (University of Sri Jayewardenepura) | BIOLOGICAL SCIENCE (University of Kelaniya) | BIOLOGICAL SCIENCE (University of Jaffna) | BIOLOGICAL SCIENCE (University of Ruhuna) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | 2.2298 | 2.0987 | NQC | NQC | 1.8889 | NQC | NQC | NQC | 1.8823 | 1.8248 | 1.8799 | 1.6367 | 1.0364 | 1.2499 | 1.0371 | 1.2328 | 1.0528 | 1.6123 | 1.8075 | 1.7563 | NQC | NQC | 1.5860 | 1.4695 | NQC | 1.1279 | NQC |
| Kilinochchi | NQC | 2.0930 | 2.0752 | NQC | 1.8107 | NQC | NQC | NQC | 1.7473 | 1.7363 | 1.7006 | 1.2177 | 1.0371 | 0.7210 | NQC | NQC | NQC | 0.8628 | NQC | NQC | 1.1364 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Mannar | NQC | 2.1642 | NQC | NQC | 1.7137 | NQC | NQC | NQC | 1.7086 | 1.5571 | 1.5235 | 1.3124 | 1.1219 | 0.6622 | NQC | NQC | NQC | 1.4685 | NQC | NQC | 1.5141 | NQC | NQC | NQC | NQC | 1.1475 | NQC |
| Mullaitivu | NQC | 2.0991 | NQC | NQC | 1.9167 | NQC | 1.4818 | NQC | 1.4789 | 1.4024 | 1.2433 | 1.1243 | 1.1138 | NQC | NQC | NQC | NQC | 1.1143 | NQC | NQC | 0.9241 | NQC | NQC | NQC | NQC | 1.1645 | NQC |
| Vavuniya | 2.2972 | 2.1130 | 2.0724 | NQC | 1.7710 | NQC | NQC | NQC | 1.7613 | 1.7178 | 1.6663 | 1.6371 | 1.1153 | 0.8939 | 1.0051 | NQC | NQC | 1.4398 | NQC | NQC | 1.3844 | NQC | NQC | 1.4724 | NQC | 1.1463 | NQC |

| COURSE OF STUDY / DISTRICT | BIOLOGICAL SCIENCE (Eastern University, Sri Lanka) | BIOLOGICAL SCIENCE (South Eastern University of Sri Lanka) | APPLIED SCIENCES (BIO.SC) (Rajarata University of Sri Lanka) | APPLIED SCIENCES (BIO.SC) (Sabaragamuwa University of Sri Lanka) | APPLIED SCIENCES (BIO.SC) (University of Jaffna - Vavuniya Campus) | ENGINEERING (University of Peradeniya) | ENGINEERING (University of Sri Jayewardenepura) | ENGINEERING (University of Jaffna) | ENGINEERING (University of Ruhuna) | ENGINEERING (University of Moratuwa) | ENGINEERING (South Eastern University of Sri Lanka) | ENGINEERING (EM) (University of Moratuwa) | ENGINEERING (TM) (University of Moratuwa) | QUANTITY SURVEYING (University of Moratuwa) | COMPUTER SCIENCE (University of Kelaniya) | COMPUTER SCIENCE (University of Jaffna) | COMPUTER SCIENCE (University of Ruhuna) | COMPUTER SCIENCE (University of Colombo School of Computing) | COMPUTER SCIENCE (Eastern University - Trincomalee Campus) | PHYSICAL SCIENCE (University of Colombo) | PHYSICAL SCIENCE (University of Peradeniya) | PHYSICAL SCIENCE (University of Sri Jayewardenepura) | PHYSICAL SCIENCE (University of Kelaniya) | PHYSICAL SCIENCE (University of Jaffna) | PHYSICAL SCIENCE (University of Ruhuna) | PHYSICAL SCIENCE (Eastern University, Sri Lanka) | PHYSICAL SCIENCE (South Eastern University of Sri Lanka) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | 1.0286 | NQC | NQC | NQC | 0.9836 | 1.8157 | NQC | NQC | NQC | 1.9403 | NQC | 1.7640 | 1.7629 | 1.7329 | 1.5627 | 1.5579 | 1.5870 | 1.6015 | NQC | 1.5419 | 1.3228 | 1.2751 | 1.1698 | 1.0545 | NQC | 1.1595 | 1.0860 |
| Kilinochchi | NQC | 0.2607 | NQC | NQC | 0.2590 | 1.8296 | 1.6911 | 1.4865 | NQC | 2.2143 | NQC | 1.4858 | 1.4022 | 1.4203 | NQC | NQC | NQC | NQC | 1.0365 | NQC | NQC | NQC | NQC | 0.6317 | 1.1851 | 0.4207 | NQC |
| Mannar | NQC | 0.5830 | NQC | NQC | 0.8992 | NQC | NQC | 1.4191 | 1.7165 | NQC | 1.2751 | 1.2438 | 1.0886 | 1.1598 | NQC | NQC | NQC | NQC | 0.7060 | NQC | NQC | NQC | NQC | 0.6183 | NQC | 0.4070 | 0.2298 |
| Mullaitivu | NQC | 0.3808 | NQC | NQC | 0.9961 | 1.9280 | 1.7241 | 1.5016 | NQC | 2.0689 | NQC | 1.2453 | 1.4973 | 1.2241 | NQC | NQC | NQC | NQC | 0.6504 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.3944 | 0.3805 |
| Vavuniya | NQC | 0.5016 | NQC | NQC | 0.5416 | 1.9189 | NQC | 1.3959 | 1.7318 | 2.0211 | NQC | 1.4431 | 1.2470 | 1.3704 | NQC | NQC | NQC | NQC | 0.9774 | NQC | NQC | NQC | NQC | 0.7381 | NQC | 0.4619 | NQC |

| COURSE OF STUDY / DISTRICT | SURVEYING SCIENCE (Sabaragamuwa University of Sri Lanka) | APPLIED SCIENCES (PHY.SC) (Rajarata University of Sri Lanka) | APPLIED SCIENCES (PHY.SC) (Sabaragamuwa University of Sri Lanka) | APPLIED SCIENCES (PHY.SC) (Wayamba University of Sri Lanka) | APPLIED SCIENCES (PHY.SC) (University of Jaffna - Vavuniya Campus) | APPLIED SCIENCES (PHY.SC) (Eastern University - Trincomalee Campus) | MANAGEMENT (University of Colombo) | MANAGEMENT (University of Peradeniya) | MANAGEMENT (University of Sri Jayewardenepura) | MANAGEMENT (University of Kelaniya) | MANAGEMENT (University of Jaffna) | MANAGEMENT (University of Ruhuna) | MANAGEMENT (Eastern University, Sri Lanka) | MANAGEMENT (South Eastern University of Sri Lanka) | MANAGEMENT (Rajarata University of Sri Lanka) | MANAGEMENT (Sabaragamuwa University of Sri Lanka) | MANAGEMENT (Wayamba University of Sri Lanka) | ESTATE MANAGEMENT & VALUATION (University of Sri Jayewardenepura) | COMMERCE (University of Sri Jayewardenepura) | COMMERCE (University of Kelaniya) | COMMERCE (University of Jaffna) | COMMERCE (Eastern University, Sri Lanka) | COMMERCE (South Eastern University of Sri Lanka) | MANAGEMENT (PUBLIC) (SPECIAL) (University of Sri Jayewardenepura) | BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) (University of Sri Jayewardenepura) | LAW (University of Colombo) | LAW (University of Peradeniya) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | 1.5544 | 1.0398 | NQC | 1.0250 | 1.0093 | NQC | 1.7230 | 1.6049 | 1.7784 | 1.6717 | 1.2590 | NQC | NQC | NQC | 1.4446 | NQC | NQC | 1.4979 | NQC | NQC | 1.2290 | 1.2337 | NQC | 1.6302 | 1.6469 | 1.9169 | 1.8776 |
| Kilinochchi | 1.1847 | NQC | NQC | NQC | NQC | 0.4065 | NQC | 1.6047 | 1.8200 | NQC | 1.3080 | NQC | NQC | NQC | NQC | 1.5074 | NQC | 1.3042 | NQC | NQC | 1.2269 | NQC | NQC | 1.6121 | 1.1595 | NQC | NQC |
| Mannar | 1.0735 | NQC | NQC | NQC | NQC | 0.3332 | NQC | NQC | NQC | NQC | 1.0161 | NQC | 1.3690 | NQC | NQC | NQC | NQC | 1.3643 | NQC | NQC | NQC | NQC | 0.9875 | 1.5242 | 1.4688 | 2.0834 | NQC |
| Mullaitivu | 1.1503 | NQC | NQC | NQC | NQC | 0.1965 | NQC | 1.5603 | 1.7790 | NQC | 1.1984 | NQC | NQC | 1.2415 | 1.5162 | NQC | NQC | 1.1817 | NQC | NQC | 1.1703 | NQC | NQC | 1.6306 | 1.1613 | NQC | 1.9636 |
| Vavuniya | 1.1889 | NQC | NQC | NQC | 0.6469 | 0.5530 | 1.7790 | 1.6021 | 1.8572 | NQC | 1.1076 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.4441 | 1.6093 | NQC | 1.1045 | NQC | 1.0888 | 1.6571 | 1.4840 | 2.3213 | NQC |

| COURSE OF STUDY / DISTRICT | LAW (University of Jaffna) | ARTS * (University of Colombo) | ARTS * (University of Peradeniya) | ARTS * (University of Sri Jayewardenepura) | ARTS * (University of Kelaniya) | ARTS * (University of Jaffna) | ARTS * (University of Ruhuna) | ARTS * (Eastern University, Sri Lanka) | ARTS * (South Eastern University of Sri Lanka) | ARTS * (Rajarata University of Sri Lanka) | ARTS (SP)/MASS MEDIA * # (University of Colombo - Sri Palee Campus) | ARTS (SP)/PERFORMING ARTS * # (University of Colombo - Sri Palee Campus) | ARTS (SAB) - A * [Arts Stream] (Sabaragamuwa University of Sri Lanka) | ARTS (SAB) - B * [Commerce Stream] (Sabaragamuwa University of Sri Lanka) | MANAGEMENT STUDIES (TV) - A [Commerce Stream] (University of Jaffna - Vavuniya Campus) | MANAGEMENT STUDIES (TV) - A [Commerce Stream] (Eastern University - Trincomalee Campus) | MANAGEMENT STUDIES (TV) - B [All Stream] (University of Jaffna - Vavuniya Campus) | MANAGEMENT STUDIES (TV) - B [All Stream] (Eastern University - Trincomalee Campus) | COMMUNICATION STUDIES * (Eastern University - Trincomalee Campus) | PEACE & CONFLICT RESOLUTION * (University of Kelaniya) | ISLAMIC STUDIES * (South Eastern University of Sri Lanka) | ARABIC LANGUAGE * (South Eastern University of Sri Lanka) | ARCHITECTURE # (University of Moratuwa) | DESIGN # (University of Moratuwa) | LANDSCAPE ARCHITECTURE # (University of Moratuwa) | TOWN & COUNTRY PLANNING (University of Moratuwa) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | 1.9162 | 1.7454 | 1.5490 | NQC | NQC | 1.1047 | NQC | 1.0367 | NQC | NQC | 1.2446 | 1.0801 | 1.3480 | 1.3661 | 1.2115 | NQC | 1.3266 | 1.4841 | 1.2617 | 1.7025 | 0.9623 | 0.5613 | 0.4795 | NQC | 0.3857 | 1.6121 |
| Kilinochchi | 1.6068 | NQC | 1.5476 | NQC | NQC | 1.1191 | NQC | 1.0424 | NQC | NQC | 1.2446 | 1.0801 | 1.3480 | 1.3661 | 1.2159 | NQC | 1.1673 | NQC | 1.2617 | 1.7025 | 0.9623 | 0.5613 | NQC | NQC | NQC | 1.5687 |
| Mannar | 1.7869 | 1.7446 | 1.8752 | NQC | NQC | 1.1122 | NQC | 1.0456 | 1.2772 | NQC | 1.2446 | 1.0801 | 1.3480 | 1.3661 | 0.9730 | NQC | 1.1884 | NQC | 1.2617 | 1.7025 | 0.9623 | 0.5613 | 0.8945 | NQC | NQC | 1.1401 |
| Mullaitivu | NQC | NQC | 1.5412 | NQC | NQC | 1.1060 | NQC | 1.0607 | NQC | NQC | 1.2446 | 1.0801 | 1.3480 | 1.3661 | 1.0763 | NQC | 1.2031 | NQC | 1.2617 | 1.7025 | 0.9623 | 0.5613 | NQC | NQC | NQC | 0.9483 |
| Vavuniya | 1.7517 | 1.6828 | 1.5670 | 1.5097 | 1.4376 | 1.1275 | NQC | 1.0513 | 1.2593 | NQC | 1.2446 | 1.0801 | 1.3480 | 1.3661 | 1.3594 | NQC | 1.6365 | 1.4144 | 1.2617 | 1.7025 | 0.9623 | 0.5613 | 0.7632 | NQC | NQC | 1.2225 |

*** Selection 100% on an all Island Merit Basis   # Courses of Study for which the subject oriented Practical Tests / Aptitude Tests were conducted.**

**NQC - No Qualified Candidates, This may be due to following reasons,**

1. District quota for a given course of study in a given district has already been filled by the students of that district.
2. Number of places in a given course of study in a given university has already been filled by the students with higher Z-scores from other districts.
3. No candidates who have satisfied the minimum requirements for admission for a given course of study from that district.

**Note :**

Certain courses of study are not conducted in all three languages. Therefore some students have not got selected to such courses of study in some universities, even though they have obtained the minimum Z-score required to get selected.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 - 2017ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான இசற் (Z) வெட்டுப்புள்ளி

| COURSE OF STUDY / DISTRICT | FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # (University of Moratuwa) | INFORMATION TECHNOLOGY (University of Moratuwa) | INFORMATION TECHNOLOGY & MANAGEMENT (University of Moratuwa) | FACILITIES MANAGEMENT (University of Moratuwa) | TRANSPORT & LOGISTICS MANAGEMENT (University of Moratuwa) | BUSINESS SCIENCE (University of Moratuwa) | MANAGEMENT & INFORMATION TECHNOLOGY # (University of Kelaniya) | INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE (University of Colombo) | STATISTICS & OPERATIONS RESEARCH (University of Peradeniya) | COMPUTATION & MANAGEMENT (University of Peradeniya) | INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # (Rajarata University of Sri Lanka) | INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # (University of Jaffna - Vavuniya Campus) | INFORMATION SYSTEMS # (University of Colombo School of Computing) | SOFTWARE ENGINEERING (University of Kelaniya) | AYURVEDIC MEDICINE & SURGERY (Institute of Indigenous Medicine) | AYURVEDIC MEDICINE & SURGERY (Gampaha Wickramaarachchi Ayurveda Institute) | UNANI MEDICINE & SURGERY (Institute of Indigenous Medicine) | SIDDHA MEDICINE (University of Jaffna) | SIDDHA MEDICINE (Eastern University - Trincomalee Campus) | HEALTH PROMOTION (Rajarata University of Sri Lanka) | NURSING (University of Colombo) | NURSING (University of Peradeniya) | NURSING (University of Sri Jayewardenepura) | NURSING (University of Jaffna) | NURSING (University of Ruhuna) | NURSING (Eastern University, Sri Lanka) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | NQC | 1.7098 | 1.7944 | 1.6093 | 1.5969 | 1.5161 | 0.9935 | 1.5220 | 1.5037 | 1.5112 | 0.8247 | 0.7564 | 1.2531 | 1.6719 | NQC | NQC | 1.2759 | 1.0495 | 1.1096 | 1.2243 | 1.2692 | 1.2614 | NQC | 1.0560 | NQC | NQC |
| Kilinochchi | NQC | 1.4564 | 1.4976 | 0.9779 | 1.1916 | 1.1548 | NQC | 1.1397 | 1.1794 | 1.2773 | NQC | NQC | NQC | 1.2301 | NQC | NQC | 0.8736 | 0.9918 | NQC | 0.7570 | NQC | 1.2864 | NQC | 0.7867 | NQC | NQC |
| Mannar | NQC | 1.1760 | 1.7645 | 1.3191 | 1.0713 | 1.3724 | NQC | 1.0207 | 1.0070 | 1.4809 | NQC | NQC | NQC | 1.0796 | NQC | NQC | 1.2981 | 1.0629 | NQC | 1.2202 | NQC | NQC | NQC | 1.1799 | NQC | NQC |
| Mullaitivu | NQC | 1.1963 | 0.9145 | 0.9973 | 0.8929 | 1.1460 | NQC | 0.6716 | 1.0514 | 1.0445 | NQC | NQC | NQC | 1.0739 | NQC | NQC | 0.2765 | 0.9713 | NQC | 0.5496 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.5939 |
| Vavuniya | NQC | 1.6164 | 1.4016 | 1.0492 | 1.1305 | 1.2266 | 0.7745 | 1.2379 | 1.0889 | 1.3822 | NQC | 0.5664 | 0.5758 | 1.3236 | NQC | -0.4095 | 0.9881 | 1.3345 | 1.0221 | 1.0803 | 1.2146 | NQC | NQC | 1.0985 | NQC | NQC |

| COURSE OF STUDY / DISTRICT | PHARMACY (University of Peradeniya) | PHARMACY (University of Sri Jayewardenepura) | PHARMACY (University of Jaffna) | PHARMACY (University of Ruhuna) | MEDICAL LABORATORY SCIENCES (University of Peradeniya) | MEDICAL LABORATORY SCIENCES (University of Sri Jayewardenepura) | MEDICAL LABORATORY SCIENCES (University of Jaffna) | MEDICAL LABORATORY SCIENCES (University of Ruhuna) | RADIOGRAPHY (University of Peradeniya) | PHYSIOTHERAPY (University of Colombo) | PHYSIOTHERAPY (University of Peradeniya) | ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT (University of Kelaniya) | FISHERIES & MARINE SCIENCES (University of Ruhuna) | MARINE AND FRESHWATER SCIENCES (University of Ruhuna) | ANIMAL SCIENCE & FISHERIES (University of Peradeniya) | FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT (Wayamba University of Sri Lanka) | FOOD BUSINESS MANAGEMENT (Sabaragamuwa University of Sri Lanka) | MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) (South Eastern University of Sri Lanka) | COMPUTING & INFORMATION SYSTEMS (Sabaragamuwa University of Sri Lanka) | PHYSICAL EDUCATION # (Sabaragamuwa University of Sri Lanka) | SPORTS SCIENCE & MANAGEMENT # (University of Sri Jayewardenepura) | SPORTS SCIENCE & MANAGEMENT # (Sabaragamuwa University of Sri Lanka) | SPEECH & HEARING SCIENCES (University of Kelaniya) | TOURISM & HOSPITALITY MANAGEMENT (Rajarata University of Sri Lanka) | TOURISM & HOSPITALITY MANAGEMENT (Sabaragamuwa University of Sri Lanka) | AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY (University of Ruhuna) | AGRI BUSINESS MANAGEMENT (University of Ruhuna) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | 1.7344 | 1.7218 | 1.6952 | 1.7038 | 1.8299 | 1.8048 | 1.7862 | 1.7949 | 1.7006 | 1.8434 | NQC | 1.3393 | 1.0371 | 1.1234 | 1.3338 | 1.4924 | 1.1972 | 1.3525 | 1.2506 | -0.1296 | 0.9614 | 0.2172 | 1.6139 | 1.2055 | NQC | 0.9695 | 0.9861 |
| Kilinochchi | NQC | NQC | 1.4207 | NQC | NQC | NQC | 1.6574 | NQC | 0.4862 | NQC | 1.7003 | 0.7115 | 0.2347 | 0.8033 | 0.3651 | 0.4100 | 0.5183 | 1.4619 | 0.2152 | NQC | NQC | NQC | 1.6177 | 1.3059 | NQC | 0.3761 | 0.4447 |
| Mannar | NQC | NQC | 1.3502 | NQC | NQC | NQC | 1.6828 | NQC | 1.4081 | NQC | 1.4920 | 0.8501 | 0.6935 | 1.0170 | 0.7333 | 0.9494 | 0.9090 | 1.5202 | 0.9666 | NQC | NQC | -0.1953 | 1.4344 | 1.2652 | NQC | 0.6254 | 0.6307 |
| Mullaitivu | NQC | NQC | 1.1696 | NQC | NQC | NQC | 1.2317 | NQC | 1.3478 | NQC | 1.2774 | 0.3801 | 0.3201 | 0.8537 | 0.4182 | 0.7429 | 0.7200 | 1.1129 | 0.4647 | NQC | NQC | -0.1663 | 1.6947 | 1.0444 | NQC | 0.7271 | 0.4184 |
| Vavuniya | NQC | NQC | 1.6435 | NQC | NQC | NQC | 1.6757 | NQC | 1.5754 | NQC | 1.6505 | 1.2652 | 0.7618 | 0.5720 | 1.0739 | 1.1139 | 1.0986 | 1.5111 | 0.8304 | 0.4752 | NQC | NQC | 1.3909 | 1.1687 | NQC | 0.8003 | 0.7818 |

| COURSE OF STUDY / DISTRICT | GREEN TECHNOLOGY (University of Ruhuna) | SCIENCE & TECHNOLOGY (Uva Wellassa University of Sri Lanka) | COMPUTER SCIENCE & TECHNOLOGY # (Uva Wellassa University of Sri Lanka) | ENTREPRENEURSHIP & MANAGEMENT # (Uva Wellassa University of Sri Lanka) | ANIMAL SCIENCE (Uva Wellassa University of Sri Lanka) | EXPORT AGRICULTURE (Uva Wellassa University of Sri Lanka) | TEA TECHNOLOGY & VALUE ADDITION (Uva Wellassa University of Sri Lanka) | INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # (Uva Wellassa University of Sri Lanka) | MINERAL RESOURCES & TECHNOLOGY (Uva Wellassa University of Sri Lanka) | AQUATIC RESOURCES TECHNOLOGY (Uva Wellassa University of Sri Lanka) | PALM & LATEX TECHNOLOGY AND VALUE ADDITION (Uva Wellassa University of Sri Lanka) | HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT # (Uva Wellassa University of Sri Lanka) | ENGINEERING TECHNOLOGY (University of Colombo) | ENGINEERING TECHNOLOGY (University of Sri Jayewardenepura) | ENGINEERING TECHNOLOGY (University of Kelaniya) | ENGINEERING TECHNOLOGY (University of Jaffna) | ENGINEERING TECHNOLOGY (University of Ruhuna) | ENGINEERING TECHNOLOGY (Rajarata University of Sri Lanka) | ENGINEERING TECHNOLOGY (Wayamba University of Sri Lanka) | ENGINEERING TECHNOLOGY (Uva Wellassa University of Sri Lanka) | BIOSYSTEMS TECHNOLOGY (University of Colombo) | BIOSYSTEMS TECHNOLOGY (University of Sri Jayewardenepura) | BIOSYSTEMS TECHNOLOGY (University of Jaffna) | BIOSYSTEMS TECHNOLOGY (Eastern University, Sri Lanka) | BIOSYSTEMS TECHNOLOGY (South Eastern University of Sri Lanka) | BIOSYSTEMS TECHNOLOGY (Rajarata University of Sri Lanka) | BIOSYSTEMS TECHNOLOGY (Wayamba University of Sri Lanka) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | 1.2935 | 1.2597 | 1.2681 | 1.0971 | 1.0293 | 0.9978 | 0.9938 | 1.2615 | 1.2073 | 1.0249 | 1.0529 | 1.0013 | 1.8225 | 2.0980 | 1.7691 | 1.4552 | NQC | 1.6954 | 1.4440 | 1.4497 | 1.7610 | 1.9722 | 1.4001 | NQC | NQC | 1.5513 | 1.6232 |
| Kilinochchi | 0.4382 | 0.7172 | 0.6125 | NQC | 0.6236 | 0.4916 | 0.3982 | 1.0258 | 0.7267 | 0.2412 | 0.5728 | 0.4370 | NQC | NQC | 1.7682 | 1.2963 | NQC | NQC | NQC | NQC | 1.8854 | 2.1508 | 1.5264 | 1.5241 | NQC | NQC | NQC |
| Mannar | 0.7007 | 0.6528 | 0.5210 | 0.8174 | 0.7772 | 0.6096 | 0.4728 | 1.0425 | 0.7749 | 0.5744 | 0.6475 | 0.7844 | NQC | NQC | NQC | 1.2959 | NQC | NQC | NQC | 1.2316 | 1.9531 | NQC | 1.2094 | NQC | NQC | 1.7436 | NQC |
| Mullaitivu | 0.1662 | 0.5947 | 0.2469 | 0.8678 | 0.8118 | 0.4775 | 0.3390 | 0.9508 | 0.5357 | 0.8740 | 0.2259 | 0.2793 | NQC | NQC | NQC | 1.3748 | NQC | NQC | NQC | 1.1626 | 1.8366 | 2.3778 | 1.5047 | NQC | 1.2950 | NQC | NQC |
| Vavuniya | 0.7222 | 1.0149 | 1.0748 | 0.9154 | 0.8481 | 0.5460 | 0.6841 | 0.8783 | 0.8846 | 0.9187 | 0.7528 | 0.9329 | NQC | NQC | NQC | 0.7039 | NQC | NQC | 1.5196 | 0.9955 | 2.7417 | 2.0837 | 1.2895 | NQC | NQC | 1.3715 | NQC |

| COURSE OF STUDY / DISTRICT | BIOSYSTEMS TECHNOLOGY (Uva Wellassa University of Sri Lanka) | INFORMATION COMMUNICATION TECHNOLOGY (University of Sri Jayewardenepura) | INFORMATION COMMUNICATION TECHNOLOGY (University of Kelaniya) | INFORMATION COMMUNICATION TECHNOLOGY (University of Ruhuna) | INFORMATION COMMUNICATION TECHNOLOGY (Rajarata University of Sri Lanka) | INFORMATION COMMUNICATION TECHNOLOGY (South Eastern University of Sri Lanka) | INFORMATION COMMUNICATION TECHNOLOGY (University of Jaffna - Vavuniya Campus) | PHYSICAL SCIENCE -ICT (University of Sri Jayewardenepura) | PHYSICAL SCIENCE -ICT (University of Kelaniya) | TRANSLATION STUDIES # (University of Kelaniya) | TRANSLATION STUDIES # (Sabaragamuwa University of Sri Lanka) | TRANSLATION STUDIES # (University of Jaffna) | FILM & TELEVISION STUDIES # (University of Kelaniya) | PROJECT MANAGEMENT (University of Jaffna - Vavuniya Campus) | TEACHING ENGLISH AS A SECOND LANGUAGE * (University of Kelaniya) | VISUAL ARTS # (University of the Visual & Performing Arts) | MUSIC # (University of the Visual & Performing Arts) | DANCE # (University of the Visual & Performing Arts) | DRAMA & THEATRE # (University of the Visual & Performing Arts) | ART & DESIGN # (Ramanathan Academy of Fine Arts) | MUSIC # (Ramanathan Academy of Fine Arts) | DANCE # (Ramanathan Academy of Fine Arts) | VISUAL & TECHNOLOGICAL ARTS # (Swami Vipulananda Institute of Aesthetic Studies) | MUSIC # (Swami Vipulananda Institute of Aesthetic Studies) | DANCE # (Swami Vipulananda Institute of Aesthetic Studies) | DRAMA & THEATRE # (Swami Vipulananda Institute of Aesthetic Studies) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jaffna | NQC | 1.8905 | 1.5411 | 1.3878 | NQC | 1.3546 | 1.3621 | 1.1968 | 0.8305 | NQC | NQC | 1.4698 | NQC | 1.4035 | 1.1445 | NQC | NQC | NQC | NQC | 0.9246 | 0.2891 | 0.5300 | 0.4840 | 0.5111 | 0.4275 | 0.9257 |
| Kilinochchi | NQC | 1.9832 | NQC | NQC | 1.3073 | NQC | 1.2059 | NQC | NQC | NQC | NQC | 0.2240 | NQC | 1.2480 | 1.1445 | NQC | NQC | NQC | NQC | 0.7392 | 0.4904 | -0.1372 | 0.2132 | 0.2540 | 0.5903 | 0.8127 |
| Mannar | 1.4968 | NQC | 1.5430 | NQC | NQC | NQC | 1.1748 | NQC | 0.2652 | NQC | NQC | 1.0613 | NQC | 1.2298 | 1.1445 | NQC | NQC | NQC | NQC | 0.5137 | 0.3199 | 0.3464 | 0.3029 | 0.4543 | 0.6737 | 0.8612 |
| Mullaitivu | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.9849 | NQC | NQC | NQC | NQC | 0.8401 | NQC | 1.0622 | 1.1445 | NQC | NQC | 0.6701 | NQC | 0.5005 | 0.4695 | 0.4259 | 0.2738 | 0.3662 | 0.2685 | 0.8226 |
| Vavuniya | NQC | NQC | 1.5827 | NQC | NQC | 1.0269 | 0.9562 | NQC | NQC | NQC | NQC | 0.6433 | NQC | 1.4003 | 1.1445 | NQC | NQC | NQC | NQC | 0.8240 | 0.0263 | -0.0326 | -0.4050 | 0.5239 | 0.2751 | 0.9486 |

*** Selection 100% on an all Island Merit Basis** **# Courses of Study for which the subject oriented Practical Tests / Aptitude Tests were conducted.**

**NQC - No Qualified Candidates, This may be due to following reasons.**

1. District quota for a given course of study in a given district has already been filled by the students of that district.
2. Number of places in a given course of study in a given university has already been filled by the students with higher Z-scores from other districts.
3. No candidates who have satisfied the minimum requirements for admission for a given course of study from that district.

**Note :**

Certain courses of study are not conducted in all three languages. Therefore some students may not get selected to such courses of study in some universities, even though they have obtained the minimum Z-score required to get selected.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org